N07
1:8819

127
3-07

சிவமயம்.

பிரமோத்தரகாண்டவசனம்.

O23:22
N07

1188219

உ

கணபதிதுணை.

திருத்தணிகேசன் துணை.

பிரமோத்தரகாண்டவசனம்.

இஃது

யாவருக்கும் எளிதில் பிரயோசனப்படும் பொருட்டு

பென்ஷன் டிஸ்ட்ரிக்ட்டு முன்சீபு

வ. த. சுப்பிரமணிய பிள்ளை

அவர்கள் எழுதியது.

சென்னபட்டணம்

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

1907.

Copy-right reserved.

உ

சிவமயம்.

முகவுரை.

பிரமோத்தரகாண்ட மென்பது சைவ சமயத்துக்குரிய முக்கிய நூல்களி லொன்று. இது வியாச முனிவரிடத்துப் பதி னெண் புராணங்களையும் உணர்ந்த சூதமுனிவரால், சமஸ்கிரு தத்தில் சுலோக ரூபமாகச் செய்யப்பட்டது. இதனைச் சைவ சிரோமணியாகிய வரதுங்கராமபாண்டியர் தமிழில் மொழி பெயர்த்துக் காவிய நடையாக விருத்தச் செய்யுளா லியற்றி யிருக்கின்றனர். இதில் சைவசமயிகள் அத்தியவசியமாக அறியவேண்டிய விஷயங்கள் அநேக மிருந்தும், அவைகள் கற்றுணர்ந்த சிலர்க்கேயன்றி யேனையோர் யாவர்க்கும் பயன் படா திருக்கின்றன. ஆனதுபற்றி அதனை யாவர்க்கும் பயன் படும்பொருட்டு எளிய நடையான வசன ரூபமாகச்செய்தேன். இப்படிச் செய்தற்கு எனக்கு முக்கிய ஆதாரமாக இருந்தது ம-ா-ா-ஸ்ரீ, வித்வான் - காஞ்சிபுரம் சபாபதிமுதலியாரவர்கள் அந்நூலுக் கெழுதியிருக்கும் பொழிப்புரையே. என்னாலெழு தப்படும் இச்சிறு புத்தகத்தில் எழுத்து முதலிய எவ்வகைக் குற்றங்க ளிருந்தபோதிலும் அவைகளைப்பாராட்டாது, இதிற் கூறப்படும் பஞ்சாக்ஷர மகிமை முதலிய பொருட் சிறப்பு நோக்கியே மேலாகக்கொள்வது அறிவின் மிக்க பெரியோர் கள் கடமையாம். அவர்கள் இனிதென்று அங்கீகரிப்பதும், யாவரும் இதன் பொருளை எளிதின் உணர்ந்துய்வதுமே என்

பிரயாசத்துக்குப் போந்த பிரதி பலனும் மனோதிருப்தியு மாம். இதனை விர்த்திசெய்யும் விஷயமாக யாவர் என்ன யுக்திகள் சொன்னபோதிலும் அவைகள் வந்தனத்துடன் அங்கீகரிக்கப்படும்.

நான் எழுதினதை ஆராய்ச்சிசெய்து, திருத்தி, நற்றமிழ் நடையுடையதாகச்செய்த பேருதவிக்காக, கூடலூர் ஸெயிண்டு ஜோசப் (St. Joseph's Institution.) மிஷன் பாடசாலை யில் தமிழ்ப் பண்டிதராயிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ, சிவசிதம்பர முதலியார் அவர்களுக்கும், இதனை மிகுந்த சிரத்தையோடு விரைவில் அச்சிட்டுத்தந்த பெருமுயற்சிக்காக சென்னபட்ட ணம் ம-ள-ள-ஸ்ரீ, பு. எ. கந்தசாமி நாயகர் அவர்களுக்கும், அநேக வந்தனங்களை அகமகிழ்ந்தளிக்கின்றேன்.

மஞ்சகுப்பம்,
1878ஆம் ௵
டிசம்பர் ௴ } வ. த. சுப்பிரமணிய பிள்ளை.

கணபதிதுணை.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

பிரமோத்தரகாண்ட வசனத்தின் முதற்பதிப்பு 1878 ஆம் வருஷம், அதாவது 28 வருஷங்களுக்கு முன், அச்சிடப் பட்டது. அப்போது 750 பிரதிகள் பதிப்பிக்கப்பட்டன. அவைகள் எல்லாம் விரைவிற் செலவாய்விட்டன. பலவித அசந்தர்ப்பங்களால் அதை மறுபடி அச்சிட இதுகாறும் தவக் கப்பட்டது. இந்த இரண்டாம் பதிப்பில் விசேஷ மாறுதல் கள் ஒன்றுமில்லை. இதனையும் சைவாபிமானிகள் அன்புடன் ஏற்று வாசித்து, அதனால் அடையவேண்டிய பலன்களையெல் லாம் பெறுவார்களென்று சிவபெருமானுடைய திருவருளை வேண்டுகின்றேன்.

சென்னை.
பராபவ ௵ பங்குனி ௴.
March, 1907. } வ. த. சுப்பிரமணிய பிள்ளை.

சிவமயம்.

வரதுங்கராமபாண்டியருடைய

சரித்திரம்.

பிரமோத்தரகாண்டத்தைத் தமிழிற் செய்யுளாக இயற்றி யிருக்கும் வரதுங்கராம பாண்டியர், அதிவீரராம பாண்டிய ருடைய இளைய சகோதரர். இவர் சற்றேறக்குறைய 350 வருடங்களுக்கு முன் இருந்தவர். இவர் கருவைவெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி முத லிய பிரபந்தங்களைச் செய்தவர். சிவபெருமானையன்றி ஏனை யோரைப் பாடாதவர். அதிவீரராமபாண்டியர் நைடதஞ் செய்து அரங்கேற்றுகிற காலத்தில் இவர் அச்சபைக்குப் போகாதிருந்ததனால், தமையன் இவரை நோக்கி 'நாம் அரங் கேற்றும் அவைக்களத்துக்கு நீரேன் வரவில்லை' யென்று கேட்டபோது, 'நீர் அரங்கேற்றும் நூல் நம்போல் பிறந்து இறந்த ஓர் அரசன் விஷயமேயன்றி ஆதியந்த மில்லாத சிவ பிரான் விஷயமல்லவே, ஆகையால்தான் நான் வரவில்லை' என்பது தோன்றத் தாம் பாடியிருந்த கருவைக் கலித்துறை அந்தாதியில் மனிதரைப்பாடுதல் இழிவென்னுங் கருத்துள்ள

"சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய் யாது கவிப்புலவீர்
அங்கச் சுவைகொண் டெழுநான்கு கோடி அழிநரகப்
பங்கத்தில் வீழவென் றேபொன்று வார்தமைப் பாடுவீரே"

என்னும் இப்பாடலைச் சொன்னார். அதுகேட்டு அதிவீர ராமபாண்டியருக்கு மெய்யறிவுதித்து, அப்பால், காசிகண் டம், கூர்மபுராணம் முதலிய சிவபுராணங்களைச் செய்தார். வரதுங்கராமபாண்டியர் நூலைகளை அரங்கேற்றிய காலங்களி லெல்லாம் கூட இருந்து வியந்து பாராட்டிச், தமையனா ருடன் சிலகாலம் அரசாண்டிருந்து, சிவாநுபவச் செல்வராய்ச் சிவகதியடைந்தார்.

இது நுண்ணிய கேள்விசான்ற பெரியோர்களால் கர்ன பரம்பரையில் வழங்கி வருகின்றது. சில அறிஞர்கள் கருவை அந்தாதிகள் மூன்றும் அதிவீரராம பாண்டியர் செய்தவை யென்று அச்சிட்டு வழங்கி வருகின்றனர்.

சாற்றுக்கவி.

இது

திரிசிரபுரம் மகாவித்துவான்

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்

மாணாக்கரில் ஒருவரும்,

கூடலூர் ஸெயிண்ட்ஜோஸப் மிஷன் பாடசாலையில்

தமிழ்ப்பண்டிதருமாகிய

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர்

ம-ா-ா-ஸ்ரீ,

க. ராஜசிவசிதம்பர முதலியாரவர்கள்

இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலகிற் சான்றோ ருடைத்தெனுஞ்சொ
லோங்குந் தொண்டை நன்னாட்டில்
ஒப்பில் காஞ்சிப் பதிக்கணித்தா
யுறுஞ்செங் கற்பட் டெனுமூரில்

இலகும் புகழ்ச்சீர்க் கருணீக
மரபிற் றணிகா சலவேந்தற்
கினிய சுதனாய்ச் சுப்பிரம
ணியப்பேர் பெறுசற் குணசீலன்
நிலவுந் தனிக்கோல் வரதுங்க
ராம நிபுண னிகழ்த்துசிவ
நெறியார் பிரமோத் தரகாண்ட
நிறைந்த பொருளை நெடியகடல்
சுலவும் புவியோ ரெளிதுணரத்
துகடீர் வசனத் தமிழ்நடையாற்
சுருங்க வெழுதி யச்சியற்றித்
தந்தா னுலகந் துதித்திடவே.

உ

சிவமயம்.

சூசி பத்திரம்.

	பக்கம்
கடவுள் வாழ்த்து	௧
பிரமோத்தரகாண்டவரலாறு	௫
பஞ்சாக்ஷரமகிமை	௬
சிவக்ஷேத்திரமகிமை	௧௧
சிவராத்திரிமகிமை	௨௰
சனிப்பிரதோஷமகிமை	௨௯
சோமவாரவிரதமகிமை	௪௫
சிவயோகிமகிமை	௫௩
விபூதிமகிமை	௬௰
சிவபூஜைமகிமை	௬௮
உமாமகேசுரபூஜைமகிமை	௱௯
உருத்திராக்ஷமகிமை	௧௧௫
ஸ்ரீருத்திரமகிமை	௧௨௯
சிவசரித்திரமகிமை	௧௨௬

உ

கணபதிதுணை.

திருத்தணிகேசன்துணை.

திருச்சிற்றம்பலம்.

பிரமோத்தரகாண்டம்.

விநாயகர் காப்பு.

நல்ல சொற்பொரு ளுள நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

கடவுள்வாழ்த்து.

நடேசர்.

பூமேவு சதுமுகனுந் திருமாலும் போற்றிசெயத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப
மாமேவு மிதழிநறு மழைதுளிப்ப மணிமன்றந்
தாமேவி நடம்புரியுந் தனிப்பொருளை வணங்குவாம்.

சிவகாமிந்தாயார்.

பூரணியைத் தநுகரணை
    புவன்போகங்கடமைப் புரக்குமாயா
காரணியைப் பசுபாச மலமகல
    மெய்ஞ்ஞானக் கண்ணிற் றோன்றும்
ஆரணியைப் பரமசிவ னானந்த
    நடத்தின்வைத்த அருட்கண் ணாளைச்
சீரணிகொள் பொழிற்றில்லைச்
    சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம்.

விநாயகர்.

பிஞ்சுமதிச் சடாமகுடப் பெருமானைப் பிரியாத
வஞ்சியிம வான்தவத்தின் வருபேடை மயிலுதவும்
அஞ்சிறைவண்டிரைத்தாவிழு மருவிமதமொழுகவுட்
குஞ்சரவெம்புகர்முகத்துக்குரிசிலடியிணைதொழுவாம்.

சுப்பிரமணியர்.

இறுதியெனத் தகுவியர்போய்க் கைமையெய்த
    அயிராணி யின்பமெய்தப்
பிறைகளொரு நான்கனைய திறன்மருப்பு
    வெள்ளானைப் பிடரி னேறி

மறுகுதொறும் பொன்னுலகின் வானவர்கோன்
    பவனிவரச் சூரன் மாயச்
சிறிதுகடைக் கண்சிவந்த சேவகன்கிண்
    கிணிச்சரணஞ் சென்னி வைப்பாம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

சுழியும் புனற்செஞ் சடையாளர்
    பங்கிற் றோகை துணைமுலைக்கண்
வழியுங் கொழும்பாற் கடலுண்டு
    பாவக் கோடை மலிந்துசுட
ஒழியும் பசும்புல் லெனவுலகம்
    ஒடுங்கா தோங்கத் தண்ணளியாற்
பொழியுங் கவிதைக் காழிமுகில்
    பொன்னங் கமலத் தாடொழுவாம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

ஆரணந்தன் னிலைபுரியாச் சாக்கியர்க ளருங்கற்றூண்
பாரறிய மருங்கசைத்துப் படுநீரிற் புகவுந்த
வாரணநல் லுரியானை யேத்திமுங்கீர் வடதளிரின்
நாரணன்போ லினிதமர்ந்தநாவலன்பொற்றாடொழுவாம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

தாது நிறைக்கும் பசுந்துளபத்
தாமத் தோனுஞ் சரோருகச்செம்
போதி னகத்துச் சகமீன்ற
புத்தே ளானு மறியானை
மாதி னிடத்தின் முனிவொழிய
ஆரூர்ச் செம்பொன் மணிமறுகிற்
றூது நடத்துங் கவிராஜன்
றுணைத்தாட் கமலந் தொழுதிடுவாம்.

மாணிக்கவாசகசுவாமிகள்.

சீத வார்பொழிற் றில்லைப் பரமனுக்
கோது நற்றமிழ்க் கோவை யுரைசெய்த
நாதன் மாணிக்க வாசக னுண்மலர்ப்
பாத பங்கய மேத்திப் பரவுவாம்.

— () —

☞ இக்கடவுள் வாழ்த்து பிரமோத்தர காண்டத்தி லிருந்து எடுத்து அச்சிடப்பட்டது.

சிவமயம்.

பிரமோத்தரகாண்ட வசனம்.

வ ர லா று.

முன்னொருகாலத்தில்வேதபாரகராகிய பலமுனிவர்கள் பிரமதேவ ருத்தரப்படியே நைமிசாரணியத்தை யடைந்து சிவயாகமொன்று செய்துகொண்டிருக்கும்போது, பதினெண் புராணங்களையும் சொல்லியருளிய சூதமுனிவர் அவ்விடத்தி லெழுந்தருளினார். முனிவர்கள் அவருக்கு ஆசனங் கொடுத்து வீற்றிருக்கச்செய்து, தொடங்கிய வேள்வியை முற்றுவித்த பின்னர், "சுவாமீ! எங்களுக்குச் சிவசரித்திரங் கேட்க வேண்டுமென்னும் பேரவா இருக்கின்றமையால், தேவரீர் அதனை அநுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்கச் சூத முனிவர் சந்தோஷ மடைந்து, "முனிவர்களே! நீங்கள் தோன்றி நின்று அழியும் ஏனையோர் சரித்திரங்களைக் கேட்க விரும்பாமல், ஆதியந்தமில்லாத பரமசிவனுடைய சரித்திரத்தைக் கேட்க விரும்பினீர்கள். இது மிகவும் நன்று. அச் சிவபெருமானுடைய சரித்திரங்களோ எண்ணிறந்தன. அவைகளில் ஒன்று கேட்கினும் அதனால் வரும்பயன் அளவிடப் படாது. அப்படிப்பட்ட சரித்திரங்களையும் முன்னமே

ங்களுக்கு அநேகமாக அருளிச்செய்திருக்கின்றோம். இப்போது, அவருடைய திருவுருவாகிய பஞ்சாக்ஷரமகிமை, சிவக்ஷேத்திரமகிமை, சிவராத்திரிமகிமை, சனிப்பிரதோஷமகிமை, சோமவாரவிரதமகிமை, சிவயோகிமகிமை, விபூதிமகிமை, சிவபூஜைமகிமை, உமாமகேசுரபூஜைமகிமை, உருத்திராக்ஷமகிமை, ஸ்ரீருத்திரமகிமை, சிவசரித்திரமகிமை ஆகிய இவைகளை விவரிக்கின்றோம், கேளுங்கள்" என்று தொகுத்துச் சொல்லிப் பின் வகுத்துக் கூறுகின்றார்.

௧.

சிவமயம்.

முதலாவது

பஞ்சாக்ஷரமகிமை.

யாகஞ்செய்வதிற் கருத்தமைந்த முனிவர்களே! யாகமானது கருமயாகமென்றும், தவயாகமென்றும், ஜெபயாகமென்றும், தியானயாகமென்றும், ஞானயாகமென்றும் ஐந்துவகையாக விருக்கின்றது. அவற்றுள், ஞானயாகமே யாகங்களெல்லாவற்றினுஞ் சிறந்தது. அந்த ஞானயாகத்தின் பகுதியாய் ஜெபயாக சிரேஷ்டமா யிருக்கின்ற பஞ்சாக்ஷரமகிமையைச் சொல்லுகிறோம்.

சிவபெருமான் எப்படித் தேவர்களுக்குள் முதன்மையானவரோ அப்படியே பஞ்சாக்ஷரம் சகல மந்திரங்களுக்கும்

முதன்மையான மந்திரமாம். பஞ்சாக்ஷரத்தை ஆதியிற் பிரணவங்கூட்டிச் செபித்து மோக்ஷமடைந்தவர்கள் எண்ணிறந்தோர். அதில் ஒரு அக்ஷரத்தின் உண்மையை அரிபிரமாதிகளும் இன்னும் அறிந்திலர். நான்குவேதங்களாலும் வேதங்களின் முடிவாகிய உபநிடத்துக்களாலும் பிரதிபாதிக்கப்படுவதும் இந்த மந்திரமே; இது அண்டபிண்ட சராசரமெங்கும் நிலைபெற்றுச் சிவனது திருவுருவமாய் விளங்கும். இதன் உண்மையை யுணர்ந்த ஆன்மாக்கள் சிவகதியை யடைதலால் இந்தப் பஞ்சாக்ஷரம் பரப்பிரம சொரூபமே யென்று பெரியோர்கள் சொல்வார்கள். ஜனனமாகிய சாகரத்தைக் கடக்குந் தெப்பமாகப் பரமசிவன் பஞ்சாக்ஷரத்தை அருளிச் செய்திருக்கிறார். பஞ்சாக்ஷரமென்னும் விதையை மனமென்கிற நிலத்தில் விதைத்தால் மோக்ஷமாகிய பலத்தைத் தரும். அதைவிட்டு மற்ற வேள்வியாதிகளைச் செய்வதில் என்னபலன்? சூரியன் உதயமாகாதவரையில் இருள் எப்படி நீங்காதிருக்குமோ, அப்படியே பஞ்சாக்ஷரத்தின் உண்மையை யுணராதகாலமெல்லாம் பிறவிப்பிணியானது நீங்காதிருக்கும். இந்தப் பஞ்சாக்ஷரம் மோக்ஷவழிக்குத் துணையென்றும், மோகக்கடலுக்கு வடவாமுகாக்கினி யென்றும், இருவினைக் காட்டுக்கு நெருப்பென்றும், உறுதியாக அறியக்கடவீர். ஆயினும், இப்பஞ்சாக்ஷரத்தையே, நமவை முன்னும், சிவவைப் பின்னுமாக வைத்துச் செபித்தால் சிவானுக்கிரகமுண்டாகாது. சிவவைமுன்னும் நமவைப்பின்னும் வைத்துச் செபித்தால் சிவஞானச் செல்வமுண்டாகும். ஆதலால், சிவாலயத்திற் சென்று சற்குருவினிடத்திலே பஞ்சாக்ஷரோப

தேசம் பெற்றுக்கொள்பவர்கள், இம்மையில் சகல சித்திகளும் இறுதியில் முத்தியும் பெறுவார்கள். முன்னம் ஒரு அரசன் இங்ஙனம் உபதேசம் பெற்றுப் பரிசுத்தனாய்ப் பாகதியடைந் தான். அந்தச் சரித்திரத்தைச் சொல்வோம் கேளுங் கள்:—

அலைகடல்போல் விசாலமான அகழியும், மலைபோல் உன்னதமான மதிலும் சூழப்பெற்ற வடமதுராபுரியிலே யதுகுலத் திற்பிறந்த தசாருகன் என்னும் அரசனொருவனிருந்தான். அவன் திரண்ட சேனையையுடையவன், சிங்கத்தையொத்த பலமுள்ளவன். மன்மதனுக்குச் சமானமான வடிவழகுள்ள வன், மநுநீதிதவறாமல் அரசாட்சிசெய்பவன். தவத்தில் அதி சிரேஷ்டமானவன். இத்தன்மையான பெருமையுள்ள அவ்வர சன் சகல லக்ஷணங்களும் பொருந்திய ஒருகன்னிகையை விவாகஞ்செய்து, பள்ளியறையுள் புஷ்பசயனத்தின் மீதேறிக் காமமீறி மனைவியின் கையைப்பற்றினான். அப்போது அவள் விலகிநின்று, 'பிராணேசா! உம்மை ஆலிங்கனஞ் செய் தற்கு எனக்கிச்சையில்லை. ஒருதலைக் காமத்தினால் இப்போ தென்னை வலிந்து புணர்வீராயின், அதனாலுமக்குத் துன்ப முண்டாகுமேயன்றி சிறிதேனும் இன்பமுண்டாகுமா? மனம் வேறுகிய மாதர்களையும், வியாதியால் வருந்தும் மாதர்களை யும், மனதில் விருப்பமில்லாத மாதர்களையும், விரத மநுஷ் டிக்கும் மாதர்களையும், கருப்பங்கொண்ட மாதர்களையும், சூத கம் நீங்கிய மாதர்களையும் தழுவலாமோ? தடாகங்களிலிருக்கும் மலர்கள் கசங்காமல் வண்டுகள் வந்து தங்களுக்குப் பிரயோ

ஜனமான தேனைக் காலமறிந்து உண்ணுவதுபோல, தங்கள் பத்தினிகள் மனத்தைச் சம்மதப்படுத்திக் கலந்தவர்க்கேயன்றி ஏனையோர்க்கு இன்பம் உண்டாகுமோ? உண்டாகாதே' என்று சொல்லவும், அரசன் காமம் சகிக்கலாற்றாதவனாய் அவளை வலிந்திற்றழுவினான். உடனே மாந்தளிர் போன்ற அவளுடைய மேனியானது மழுப்போலாகி அவனைச் சுட் டது. அந்த வெப்பத்தினால் அவன் மார்பிற்றரித்திருந்த சந்த னக்குழம்பு பொரிந்து உதிர்ந்தது; பூமாலை கரிந்தது; முத்து மாலை நீறாயது. அரசன் பயந்து தழுவிய தன் கைகளை வாங் கிக்கொண்டு மனைவியை நோக்கிப் 'பெண்ணே! குளிர்ச்சியா யிருந்த உன்மேனி தீப்போலாகிச் சுட்டதே இதென்ன?' என்று கேட்டான். அதற்கவள், 'நாயகரே! துருவாச முநிவர் எனக்குப் பரமசிவனுடைய பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தரு ளினார். அதனால் என் இருவினையும் நீங்கி என்னுடலும் பரி சுத்தமாகியது; புண்ணியமானது பாவத்தை எப்படிச் சேரா தோ அப்படியே புநிதமாகிய என்னுடைய தேகத்தைப் பஞ் சாக்ஷர உணர்ச்சியில்லாத உம்முடைய தேகம் தழுவப்பெ றாது. நீர் பஞ்சாக்ஷரோபதேசம் பெற்றுப் பரிசுத்தராகி அதன் பின்பு என் மெய்யின்பத்தைப் பெற்றுக்கொள்ளும்', என்று சொன்னாள். அதற்கு அரசன், 'அப்படியானால் நீயெனக்கந்த மந்திரத்தை உபதேசஞ்செய்' என்று கேட்க, அவள் 'கண வர்கள் தங்கள் மனைவியரிடத்தில் மந்திரோபதேசம் பெற் றுக் கொள்வது முறையன்று. சிவபெருமானுடைய கிருபை யைப் பூரணமாகப் பெற்ற கர்க்கமுநி யென்னும் குருவான வர் யமுனையாற்றங் கரையிலிருக்கின்றார். அவரிடத்திற்கு

வாரும்' என்றழைக்க, அரசன் சம்மதித்து அவருடனே சென்று, கர்க்கமுனிவரைக் கண்டு, அவருடைய பாததாமரை களை வணங்கி, நடந்த சங்கதிகளைச் சொல்லி 'சுவாமீ! ஜனன சாகரத்தில் உழலுகின்ற அடியேனுக்குப் பஞ்சாக்ஷரோப தேசஞ்செய்து மோக்ஷமாகிய கரையிற் சேர்த்தருளும்' என்று பிரார்த்தித்தான். முனிவர் அருள் கூர்ந்து பரமசிவனைத் தியானஞ்செய்து, தம்முடைய கையை அவன் சிரமேல் வைத்து, ஐந்தெழுத்துண்மையை அநுக்கிரகித்தார். அவ்வுப தேசத்தைப் பெற்றவுடனே, அவனுடைய கொடியவினைக ளெல்லாம் நூறுகோடி காகங்களாய் அவனுடைய உரோமத் துவாரங்களினின்றும் புறப்பட்டு, மேலெழுந்து பறந்து கரிந்து விழுந்தன. அரசன் கண்டு ஆச்சரியங்கொண்டு முனிவரை நோக்கி 'சுவாமீ! அடியேனுடைய சரீரத்தினின்றும் இந்தக் காகங்களுண்டாகி மேலெழுந்த காரணமென்ன? அவை கள் நீறாய்ப்போன காரணமென்ன?' என்று வினவ, முனிவர் 'அரசனே! பிறவிக்குக்காரணமாகிய புண்ணியபாவமென்னும் இருவினையையும் பஞ்சாக்ஷரத்தின் மகிமையால் ஒழித்து விட்டாய். ஒழிந்த வினைகள் உன்னுடலினின்றும் காகருடங் கொண்டெழுந்து, இனி யுன்னைத் தொடரா வென்பதற்குத் திருஷ்டாந்தமாக வெந்து நீறாய் விழுந்தன. பஞ்சாக்ஷர மகிமை ஒருவராலும் அளவிட்டுச் சொல்லுந் தன்மையதன்று. இனி நீயும் உன்மனைவியும் சந்தோஷமாய் நகரத்துக்குச் சென்று சுகமநுபவித்துக் கொண்டிருந்து இறுதியில் மோக்ஷ மடைவீர்கள்', என்று சொல்லி யருளினார். அரசன் அது கேட்டு மகிழ்ச்சியடைந்து, அவரை வணங்கி விடைபெற்றுப்

போய்த் தன்னகரஞ் சேர்ந்து, மனைவியோடு அநேகநாள், இன்பமநுபவித்துக் கொண்டிருந்து, பின்பு இவ்வுடல் நீங்கி, மனைவியோடு பரமசிவனுடைய திருவடி நீழலைச் சேர்ந்து நித்தியானந்த நிரதிசய வாழ்வுற்றிருந்தான்.

௨

சிவமயம்.

இரண்டாவது

சிவக்ஷேத்திரமகிமை.

முனிவர்களே! இவ்வளவுபமாகிய பஞ்சாக்ஷரமகிமையை யாம் அறிந்தமட்டிற் சொன்னோம். இனி சிவக்ஷேத்திரமகி மையையும் சிவராத்திரி மகிமையையுஞ் சொல்லுகிறோம்:—

அயோத்தியா நகரத்தையாண்ட மித்திரசகர் என்னும் அரசன் ஒருநாள் காட்டிற்சென்று வேட்டையாடிக் கொண் டிருக்கும்போது, தமையனுந் தம்பியுமாகிய இரண்டு ராக்ஷ தர்கள் அக்கினி மலைபோல் வந்து அவனை யெதிர்த்தார்கள். அரசன் அவர்களுடன் போர்செய்து மூத்தவனைக்கொல் லவே, இளையவன், தான் தோற்று ஓடிப்போய் விட்டவன்

போற் காட்டிப் பின்பு வஞ்சனையால் வெல்ல நினைந்து மனிதரூபங்கொண்டு திரும்பிவந்து அரசன்பாதத்தில் வீழ்ந்து வணங்கினான். அரசன் அவனை நோக்கி, 'நீயார்? இங்கு வந்த காரணம் என்ன?' என்று வினவ, அரக்கன் 'மகாராஜனே! உம்முடைய பாதங்களுக்குக் குற்றேவல் செய்து பிழைக்க வேண்டிவந்தேன்' என்றான். மன்னவன் சந்தோஷித்து, அவன் வஞ்சக நினைப்பைக் கொஞ்சமு மறியாமல், அவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சமையல் செய்யுந் தொழிலிலமர்த்தினான். இங்ஙனமிருக்கையில் ராஜன் பிதிர்களுக்குச் சிரார்த்தஞ்செய்யும் நாள்வந்தது. அன்று அரசன் வசிஷ்டமுனிவரை *வரித்து, அவருக்கு அன்புடன் ஆராதனைசெய்து 'அமுதுகொள்ளவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது ராக்ஷதன் 'இதுதான்நமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும் சமயம்' என்று கருதி முனிவருக்கு நல்ல அமுதோடு நரமாமிசத்தைக்கலந்து படைத்தான். படைத்த அமுதில் நரமாமிசங் கலந்திருப்பதை அவரறிந்து அது அரக்கன் செய்த வஞ்சனை யென்றுணராமல் ராஜன்மேற் கோபங்கொண்டு, அவனைப்பார்த்து 'அரசனே! சிரார்த்த தினத்தில் † அஜமாமிசம் படைப்பது வேதவிதியாயிருக்க அதைவிட்டு நீ நரமாமிசம் படைத்தாய். இவ்வக்கிரமத்தினால் நீ காட்டிற் சஞ்சரித்து நரமாமிசத்தைத்

* வரித்தல்=குறித்தகாரியத்துக்காகத் தெரிந்தெடுத்துக் கொள்ளுதல்.

† அஜமாமிசம்=ஆட்டிறைச்சி.

இன்னும் அரக்கனாகக்கடவை' என்று சபித்தார். பின்பு கோபந்தணிந்து அது அரக்கன் செய்த *திருக்கென்றுணர்ந்து வருத்தப்பட்டு, 'மன்னனே! நீ யாதொரு குற்றமுஞ் செய்யாதிருக்கவும் நான் அதை யுணராமல் அநியாயமாய் உன்னைச் சபித்துவிட்டேன். இந்தச்சாபம் பன்னிரண்டு வருஷஞ் சென்றபின் நீங்கிப்போம்' என்று சொல்ல, அரசன் அவர்மேல் கோபங்கொண்டு 'நிர்த்தோஷியாகிய என்னை நீர் அக்கிரமமாகச் சபித்தபடியால், உமக்கும் நான்சாபங்கொடுக்கிறேன்' என்று சாபநீரைக் கையிலெடுத்துக் கொண்டான். அதை யவன் மனைவியாகிய மதயந்திகண்டு, மனங்கலங்கி "பிராண நாயகரே! மன்னவர்களுள் ஆசாரியரைக் கோபித்தவர் ஒருவருமில்லை. ஆதலாலிப்போது உமக்குண்டான கோபத்தைத் தணிப்பீராக" என்று வேண்டிக்கொண்டாள். அரசனுங் கோபம் நீங்கிச் சாபநீரைத் தன் காலில் விட்டான். உடனே அவன் பாதம் கருநிறமாய்விட்டது. அதனால் அவனுக்கு அதுமுதல் † கன்மாட பாதன் எனப் பெயராயிற்று. அப்போது குருசாபத்தால் ராக்ஷதரூபமும் வந்துவிட, அரசன் அரணியம்சென்று அங்குள்ள மிருகங்களைக் கொன்றுதின்று காலங்கழித்துக் கொண்டிருந்தான்.

இப்படி யிருக்கும்போ தொருநாள், § நவமாய் விவாகம்

* திருக்கு=குற்றம்.

† கன்மாடபாதன்=கறுத்தபாதமுடையவன்.

§ நவமாய்=புதிதாய்.

செய்துகொண்ட ஓர் ருஷிபுத்திரன் தனது பத்தினியோடு, ராக்ஷதனிருப்பதை யறியாதவனாய், அவ்வாரணிய மார்க்கமாய் வந்தான். அரக்கன் அவனைக் கண்ட மாத்திரத்தில் மானைக்கண்டபுலிபோல் அவன்மேற் பாய்ந்து, அவனைப் பிடித்துக் கொல்லத் தொடங்கினான். அதை அவன் மனைவி பார்த்துப் பயந்து, நிலைகலங்கிக், கைகளை நெரித்துக் கொண்டு, கண்ணீர்விட்டு, 'ராஜனே! சாபத்தால் உனக்கிந்த உருவம் வந்ததேயன்றி நீ ராக்ஷத குலத்திற் பிறந்தவனல்லை. கொல்லுவதுன் குணமன்று, பிறருயிரைக்காப்பதே உன்குணமாகும். என் புருஷனிறந்தால் நானும் இறப்பேன். ஆதலால் நீ எனக்கிப்போது மாங்கல்யபிக்ஷை தரவேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள். ராக்ஷதனோ அவள் சொன்னதைச் சிறிதுங் கவனியாமல், ருஷிபுத்திரனைக்கொன்று மாமிசத்தைத்தின்று எலும்புகளையெல்லாங் கழித்துத் துப்பிவிட்டான். அவள் ஒன்றுஞ் செய்யக்கூடாதவளாய் எலும்புகளைச் சேர்த்து எடுத்துக்கொண்டு போய், காட்டுத்தீயிற்போட்டு, அக்கினிதேவனை வணங்கி 'என் புருஷனைக் கொன்ற பாதகன் சாபம் நீங்கி, நகருஞ் சேர்ந்து, தன்மனைவியைத் தழுவும்போது உயிர்மாண்டுபோகக் கடவன்' என்று சபித்துவிட்டுத் தானும் அந்தத் தீயில் விழுந்திறந்து போனாள்.

பின்பு பன்னிரண்டுவருஷமுஞ் செல்லவே, அரசனுக்குச் சாபம் நீங்கி, ராக்ஷதரூபமாறிப், பழைய நல்லுருவம் வந்தது. உடனே அவன் தன் நகரஞ்சேர்ந்து, மனைவி

யிடத்திற் கலவியின்பம் அநுபவிக்க வேண்டி, மிகுந்த விருப்பத்தோடு அந்தப்புரஞ்சென்று அவளை ஆலிங்கனஞ் செய்ய யத்தனிக்கையில், அந்தப்பதிவிரதை, ருஷிபுத்திரன் மனைவியிட்டசாபத்தைச் சொல்லி 'சம்யோகித்தால் இறப்பாய்' என்று தடுக்க, அரசன் பொற்பாத்திரத்தில் அன்னமிடப்பெற்றும் உண்ணுதற் குபயோகமான உறுப்புக்களில்லாமற் போன பசியாளனைப்போல் துன்பமடைந்து இடைந்து நின்று, 'பெண்ணின்பத்தை அநுபவிக்கப் பெற்றவர்களே புத்திரபாக்கியம் முதலிய எல்லாப் பாக்கியங்களையும் பெறுவார்கள். பெண்ணின்பத்தை அநுபவிக்கப் பெறாதவர்கள் புத்திர பாக்கியத்தையிழந்து அதனால் இம்மை மறுமைப் பயன்களையும் இழப்பார்கள். உலகமெல்லாம் வந்து தன்னை வணங்கும்படி அரசு செய்தாலும் புத்திரரில்லாத வாழ்வு வாழ்வல்ல. இனி வனத்திற் சென்று தவஞ்செய்வதே தகுதி' என்று நினைத்து, நகரத்தை விட்டுக் காட்டுக்குப்போய் அருந்தவஞ் செய்துகொண்டிருந்தான்.

நாட்டில் அரசனில்லாமல் பிரஜைகள் வருந்துவதை வசிஷ்டமுனிவ ரறிந்து தருமசந்தானம் உண்டாக்கலாம் என்னும் வாக்கியத்தை யநுசரித்து, மதயந்தியைச் சேர்ந்து புத்திர சந்தான முண்டாக்கிக் குடிகளுக்கு நேரிட்டிருந்த குறைதீரும்படி செய்தார்.

கன்மாடபாதன் காட்டிலே தவஞ்செய்து கொண்டிருக்கையில், அவனை ஓர் பேய்மகள் தொடர்ந்து வருத்தத்தலைப்

பட்டாள். அதனால் அரசன் துயரமடைந்து அங்கிருந்த முனிவர்களை அதன் காரணமென்னவென்று கேட்க, அவர்கள் 'அரசனே! நீ முன்னே அரக்கனாய்க் காட்டிற் சஞ்சரித்தபோது அங்கே வந்த ருஷிபுத்திரனைக் கொன்றாய். அந்தப் பாவம் இப்போது பேயாய் வந்து உன்னைப் பற்றிக்கொண்டது' என்றார்கள். அரசன் அப்பாவம் நீங்குதற்காகச் சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களிற் சென்று மூழ்கினேன். அநேக புண்ணிய ஸ்தலங்களைத் தெரிசித்து வணங்கினேன். அருந்தவங்கள் இயற்றினேன். எதனாலும் பாவம் தீராமலிருக்கவே, மிகவருத்தமுற்று மிதிலை நகரத்தின் சமீபத்திலுள்ள ஓர் சோலையைச் சேர்ந்து அங்கே யிருக்கும்போது கோதமருஷி சில முனிவர்களுடன் அங்கே வந்தார். அரசன் அவரைக்கண்டு களிப்புற்று வணங்கி நிற்கக் கோதமர் 'ராஜனே! க்ஷேமமா யிருக்கின்றாயா'? என்று வினவ, அரசன் 'சுவாமீ! தேவரீருடைய கிருபையைப் பெற்றவர்களுக்கு ஓர் குறையுமில்லை. ஆகிலும் எனக்கோர் குறையுண்டு. அதாவது, எங்கள் குல குருவாகிய வசிஷ்டர் முன்னாளிட்ட சாபத்தினால் நான் ராக்ஷதனாகி ஓர் ருஷிபுத்திரனைக் கொன்றேன். அப்பாவம் ஓர் பேயாகிவந் தென்னைப் பற்றிக்கொண்டது. அதையொழிக்கு நிமித்தம் எத்தனையோ அருந்தவங்கள் செய்தேன். எவற்றாலுந் தீர்ந்திலது. என் தவப்பயனாக இப்போது உம்முடைய தரிசனம் பெற்றேன். இனி நான் கடைத்தேறும் வண்ணம் தேவரீரே அருள் செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

அப்போது கோதமர் மனமிரங்கிச்சொல்லுகின்றார்:—'அரசனே! கோகன்னம் என்றொரு திவ்வியக்ஷேத்திர முண்டு. அங்கே பரமசிவன் கைலாசத்தில் வீற்றிருப்பது போல் வீற்றிருந்தருளுவர். பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களும் அந்த ஸ்தலத்தில் தவஞ்செய்திருக்கின்றார்கள். பஞ்சமாபாதகரே யானாலும் அந்த ஸ்தலத்துக்குப் போவார்களானால் பாவம் நீங்கிப் பரகதியடைவார்கள். எந்த ஸ்தலத்திலும் நீங்காத பாவம் அந்த ஸ்தலத்தை நினைத்தவுடனே நீங்கிப்போம். மற்ற ஸ்தலங்களில் அருந்தவங்கள் செய்வதனால் பெறும்பயன்களையெல்லாம் கோகன்னத்தில் ஒரு நிமிஷநேரம் தங்கியிருப்பதனால் பெறலாம். அந்த ஸ்தலத்திலுள்ள இலிங்கத்துக்கு "மஹாபலலிங்கம்" என்றுபெயர். அதன் சரித்திரத்தையும் சொல்லுகின்றோம் கேள்.

முன்னொருகாலத்தில் இராவணன் கைலாசகிரியிற்சென்று தவஞ்செய்து கொண்டிருந்தான். அதைக்கண்ட பரமசிவன் கிருபைகூர்ந்து அவனிடத்தில் ஓர் லிங்கத்தைக் கொடுத்து 'இதை எடுத்துக் கொண்டுபோய் உன்னுடைய இலங்கைப் பட்டணத்தில் ஸ்தாபனஞ் செய்தால் அந்தப்பட்டணம் ஒருக்காலும் அழியாது. வழியிலெங்கும் இதை வையாதே. வைத்தால் பின்னர் எடுக்க உன்னால் முடியாது' என்று சொல்லியருள, இராவணன் அதை யெடுத்துக்கொண்டு வழிநடந்தான். தேவர்களிதை யறிந்து இராவணன் தங்களுக்குத் துன்பஞ் செய்கிறவனானதால் பயந்து, விநாயகரிடத்திற் சென்று முறையிட்டு 'இலிங்கம் இலங்கைபோய்ச் சேராதபடிக்குச் செய்ய வேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள். பிள்ளையார் அருள்

கூர்ந்து இராவணனுடைய வயிற்றில் நீர் நிறையச்செய்யும்படி வருணனுக்குக் கட்டளையிட, அவனப்படியேசெய்தான். பின்பு தாமொரு பிராமண ரூபங்கொண்டு இராவணன் முன்பாக வந்தார். அவன் 'பிராமணரே! நான் ஜலஸ்பரிசஞ் செய்து வருகிறேன்; அதுவரையில் இந்தச் சிவலிங்கத்தை வைத்திரும்,' என்றுசொல்ல, பிராமணர் 'நான் இதைத்தாங்கும் சக்தியுள்ளவனல்லன். ஆதலால் நான் மூன்றுதரம் அழைப்பேன். அதற்குள் நீ வாராவிடில் இதைப் பூமியில் வைத்துவிடுவேன்' என்று சொன்னார். இராவணன் சம்மதித்துச் சிவலிங்கத்தை விநாயகர் கையிற் கொடுத்துவிட்டு அப்புறம் போனான். உடனே விநாயகமூர்த்தி இராவணனை மூன்றுதரம் அழைத்து, அவன் வாராமையால் சிவலிங்கத்தைப் பூமியில் வைத்துவிட்டார். பின்பு இராவணன் ஓடிவந்து, சிவலிங்கம் பூமியினிடத்தி லிருப்பதைக்கண்டு அதை யெடுக்க, அது எடுக்கக்கூடாததா யிருந்ததனாலே, இது, 'மஹாபலலிங்கம்' என்றான். சிவநேசத்தில் பழுதில்லாத இராவணன் அப்படிச் சொன்னபடியால் அந்த இலிங்கத்துக்கு 'மஹாபலலிங்கம்' என்றே பெயராயிற்று. இராவணன் திரும்பவும் அந்த இலிங்கத்தைத் தன்பலங் கொண்டமட்டும் எடுக்க, அது வாராமல் பசுவின் காதுபோற் குழைந்து நீண்டது. அக்காரணத்தால் அந்த ஸ்தலத்துக்குக் 'கோகர்ணம்' என்று பெயராயிற்று. இராவணன் அதுகண்டு, கோபங்கொண்டு, விநாயகமூர்த்தியைக் குட்டினான். உடனே அவர்கோபித்தெழுந்து விசுவரூபங்கொண்டு துதிக்கையினால் இராவணனைப் பிடித்துப் பந்துபோல் மேலே எறிந்தெறிந்து பிடித்தார். அப்போது அவன்

துன்புற்றுச் 'சுவாமி! நான் தெரியாமற் செய்த பிழையைத் தேவரீர் பொறுத்தருளல் வேண்டும்' என்று பலதரம் பிரார்த்திக்க விநாயகமூர்த்தி கோபந்தணிந்து அவனைப் பூமியில் விட்டு, 'இராவணா! நீ செய்த குற்றத்துக்காக உன்னிருபது கைகளினாலும் பத்துத் தலைகளிலுங் குட்டிக்கொள்' என்று சொன்னார். உடனே இராவணன் தலைகள் சிவக்கக் குட்டிக்கொண்டு குதித்துக் குதித்துக் கூத்தாட, விநாயகமூர்த்தி சந்தோஷப்பட்டு 'இன்றுமுதல் உன்னைப்போல் எம்மிடத்தில் அன்பாய்க் குட்டிக் கொள்ளுபவர்களிடத்தில் நாம் மகிழ்ச்சி அடைவோம்' என்று சொல்லியருளி மின்னலைப்போல் மறைந்துவிட்டார். இராவணனும் இலங்கைக்குச் சென்றான்.

அரசனே! இவ்வாறு விநாயகமூர்த்தியால் ஸ்தாபிக்கப்பட்ட மஹாபல லிங்கேசுரர் வீற்றிருந்தருளும் கோகர்ணமானது சிவலோகம்போல் எக்காலமும் தேவர்களால் நிறைந்திருக்கும். இம்மகத்துவமுள்ள க்ஷேத்திரத்துக்கு நாம் மஹா சிவராத்திரிக்குப் போயிருந்து நம் பெருமானாகிய மஹாபல லிங்கேசுரரைப் பூஜித்துவிட்டு இன்றைத்தினம் ஜனகராஜன் செய்யும் யாகத்தினிமித்தம் மிதிலைக்கு வந்தோம். வரும் வழியில் ஓரதிசயங் கண்டோம். அதையுங்கேள்' என்று சொல்வாராயினர்.

சிவமயம்.

மூன்றாவது

சிவராத்திரிமகிமை.

கன்மாடபாதராஜன் முத்திபெற்ற அத்தியாயம்.

——(0)——

ராஜனே! நாம் வனத்தில் வரும்போது இளைப்பினால் ஓர்தடாகத்தில் நீரருந்தி, அதன் கரையிலிருக்கும் ஆலமர நிழலில் தங்கியிருந்தோம். அப்போது மிகுகோரரூபமான ஒரு நீசக்கிழவி பலவித நோயால் வருத்தப்பட்டுக் கொண்டு அவ்வழியில் வந்து, வெய்யில் சகிக்கலாற்றாது, துவண்டு விழுந்து இறந்தாள். அக்ஷணமே ஆகாயத்தினின்று சொர்ண விமானம் ஒன்று இழிந்தது. அதனோடு அநேகம் கணநாதர்கள் வந்தார்கள். நாம் அவர்களைக்கண்டு வணங்கி 'நீவிர் இவ்விடம் வந்தகாரணம் என்' என்று கேட்டோம். அவர்கள் 'இந்த நீசஸ்திரீயை இவ்விமானத்தி லேற்றிக் கொண்டு வரும்படி பரமசிவன் கட்டளை யிட்டனுப்பினார், அதனால் வந்தோம்' என்றார்கள். 'ஒரு விதத்திலும் விசேஷமில்லாதவளா யிருக்கும் இவளைச் சிவலோகத்துக்குக் கொண்டு போக நீங்கள் எப்படிச் சம்மதித்து வந்தீர்கள்' என்று கேட்டோம். கணநாதர்கள் 'முனி சிரேஷ்டரே! இவள் சரித்திரத்தைக் கேட்கில் ஆச்சரியமுண்டாகும். இவள் கேகயநாட்டுப் பிராமணஸ்திரி. இவள் புருஷனோடு சிறிதுகாலம் வாழ்ந்

திருந்து, பின்பு அவனிறக்கவே காமம் சகிக்கலாற்றாதவளாய்க், கற்புநீங்கிச் சோரப்புணர்ச்சி செய்துவந்தாள். அதனால் கருப்பமு முண்டாயிற்று. சுற்றத்தார் கண்டு இவளைத் தங்கள் ஊரினின்றுந் துரத்திவிட்டார்கள். அப்போது அழுது கொண்டு, காட்டிற்போக, அங்கே, தூர்நடத்தையுள்ள ஓர் வேளாளன் கண்டு இவளைத் தன்வீட்டிற் கொண்டுபோய் வைத்துக்கொண்டான். இவள் அவனுடன் மதுவுண்டு, மாமிசம் புசித்துக் கூடிக்குலாவிக் குழந்தைகளையும் பெற்றாள். இப்படி யிருக்கும்போ தொருநாள் அவ்வேளாளன் அயலூருக்குச் சென்றான். வீட்டில் வேறொருவரு மில்லாமையால் இவள் தன்னிஷ்டப்படி மதுவுண்டு மாமிசமுந்தின்ன இச்சை கொண்டு அந்தவீட்டின் ஒருபுறத்திலிருக்கும் தொழுவத்திற் புகுந்து, கள்ளுண்ட வெறியால் அறிவழிந்து, வெள்ளாடு என்றும் பசுவின் இளங்கன்று என்றும் தெரியாமல் ஒரு பசுவின் கன்றின் தலையைப் பிடித்து அரிந்து வந்து, சமைப்பதற்காகத் தீபவெளிச்சத்தில் கொண்டுபோய்த் திருத்தப் போம்போது பசுவின் கன்றென அறிந்து 'சிவசிவ! மஹாபாவஞ் செய்தேனே' என்று சோர்வடைந்து, இரண்டு நாழிகை வரையில் ஒன்றுந் தோன்றாமற் சும்மாவிருந்தாள். பின்பு விதிவலியினால் மாமிசந்தின்னும் இச்சையுண்டாகவே, அப்பசுவின் கன்றின் மாமிசத்தையே சமைத்து, உண்டு, உதவாத எலும்பு முதலியவற்றைத் தெருவிற் கொண்டுவந்து போட்டு 'ஐயோ! பசுவின் இளங்கன்றைப் புலிவந்துகொன்று தின்றுவிட்டுப்போயிற்றே' என்று கூச்சலிட்டாள். பொழுது விடிந்தவுடனே ஊருக்குப் போயிருந்த கணவன் வந்தான்.

அவனுடன் பசுவின்கன்று இறந்த செய்தியைச் சொன்னாள். அவன் அதைக்கேட்டுச் சிறிதுநேரம் வருத்தப்பட்டுப் பின்பு முன்போல் அவளுடன் கூடியிருந்தான். சிலகாலஞ் சென்ற பின் இவள் இறந்தாள். இயமதூதர்கள் வந்து இவள் உயிரை வலிந்துகொண்டுபோய் யமனெதிரில் விட்டார்கள். இயமன் 'நீ நரகத்தில் விழத்தக்கவளல்லை. ஆனால் புலைச்சியாய்ப் பூலோகத்திற் பிறக்கக்கடவை' என்றுசொல்ல, அப்படியே வந்து பிறந்தாள். இவளைப் பெற்றவர்கள் சிறிதுகாலத்திற்குப் பின் இறந்துவிட்டார்கள். அதனால் இவள் ஆதரவற்றவளாய்ப் பசியினாலும் பலவித வியாதிகளினாலும் மிக மெலிவுற்றுப் புலையர் சேரியில் இருந்துகொண்டு காலங்கழித்து வருகையில், மூப்புப்பருவமும் வந்துவிட்டது. இந்த ஸ்திதியில், சிவராத்திரிக்குக் கோகன்னத்துக்குப் போகின்ற கூட்டத்தாருடன் போய், அந்த க்ஷேத்திரத்தின் திருவீதியைச் சேர்ந்து ஓரிடத்தி லிருந்துகொண்டு, கொடிய பசியினால் மிக வருந்திக் 'கண்ணில்லாதவளாகிய எனக்கு அன்னமிடுங்கள்' என்று கூவினாள். அதைக்கேட்ட இடையப்புள்ளை ஒருவன் தன்கையி லிருந்த வில்வத்தளை 'இதோ சோறு' என்று அவள் கையிற் கொடுத்தான். இவள் அது சோறல்லவென்று தெரிந்து கொண்டு பக்கத்தில் எறிய, அந்த வில்வபத்திரம் அங்கிருந்த ஓர் சிவலிங்கத்தின்மேல் விழுந்தது. அன்று முழுதும் ஆகார மில்லாமலும், இரவில் பனியாகிய நீரில் நனைந்து நித்திரை யில்லாமலும், இருந்த இவள் எறிந்த வில்வம் பரமசிவனுக்குச் சிவராத்திரி பூஜையின் அருச்சனை போலாகியது. பொழுது விடிந்தபின் ஓர் நீசஸ்திரீயின் தோளை ஆதரவாகப் பற்றிக்

கொண்டு, தளர்ந்த நடையோடுவந்து, இங்கே விழுந்திறந்தாள். சர்வபரிபூரண பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் 'இவளை இப்போது நாம் கைதூக்கிவிடாவிடில் இவளுக்கு உய்வேகிடையாது' என்றுணர்ந்து, இவள் அறியாது செய்த அவ்வர்ச்சனையையே அன்பர்கள் விதிப்படி அறிந்து செய்யும் சிவார்ச்சனையாகக் கொண்டு இவளை யழைத்து வரும்படி எங்களுக்கு ஆக்ஞாபித்தருளினார். இவள் முன்ஜன்மத்தில் ஐயமிட்டுப் புசித்தறியாள். அதனாலிந்த ஜன்மத்தில் பசியால் வருந்தினாள். கள்ளுண்டு பலபாவஞ் செய்தமையால் கண்ணிழந்தாள். பசுவின்கன்றின் தசையைத் தின்றமையால் நீசஸ்திரீயாய்ப் பிறந்தாள். கற்பு நிலைகடந்த தோஷத்தினால் குஷ்டம் முதலிய நோய்களுண்டாகித் தன்னை விவாகஞ் செய்துகொள்ள விரும்புகிறவர்கள் ஒருவருமில்லாமல் வருந்தினாள். இவ்வித பாவங்கள் செய்திருந்தும் சிவாநுக்கிரகத்தால் சிவராத்திரியில் சிவலிங்கப் பெருமானுக்கு வில்வார்ச்சனை செய்தபெரும்புண்ணியத்தைப் பெற்று அழியாதமோக்ஷத்தை அடைவாளாயினாள்' என்றுசொல்லி, அவளுயிரை ஓர் திவ்ய தேகத்திற் சேர்த்துப், பொன் விமானத்தில் ஏற்றிக்கொண்டு போய்ச் சிவலோகத்திலே பரமேசுவரரும் பார்வதிதேவியாரும் மகிழும்படி விடுத்தார்கள்.

ஆதலால், அரசனே! நீயும் கோகன்னத்துக்குச் சென்று சிவராத்திரியில் நித்திரை நீங்கியிருந்து, மஹாபல லிங்கேசுவரரை வில்வத்தினால் அர்ச்சனை செய்தால், உன்னுடைய துன்பம் நீங்கும்' என்று கோதமர் சொல்லி ராஜனுக்கு விடைகொடுத்துத் தாம் மிதிலைக்குச்சென்றார். கன்மாட

பாதராஜன் அவர் கட்டளையின்படியே கோகர்ணத்துக்குச் சென்று, சிவராத்திரியில் கிரமப்படி விரதமநுஷ்டித்து, மஹாபல லிங்கேசுரருக்கு வில்வார்ச்சனை செய்தான். அப்பெரும் புண்ணியத்தினால், குருவிபுத்திரனைக்கொன்ற பாவமும் முன் ஜன்மங்களிற்செய்த தீவினைகளும் நீங்கிப், பரிசுத்தனாகி இன்புற்று வாழ்ந்திருந்தான்.

௳

சிவமயம்.

சிவராத்திரிமகிமைதொடர்ச்சி.

விமரிசன் முத்திபெற்ற அத்தியாயம்.

அதுவன்றியும், விமரிசன் என்றொரு வேடராஜன் இருந்தான். அவன் சகலஜாதி ஸ்திரீகளையும் புணரும் கொடுங்காமமுடையவனாயிருந்த போதிலும், சதுர்த்தசி தோறும் 'சங்கரவாழ்க, சம்புவாழ்க, சதாசிவவாழ்க,' என்று சிவநாமங்களைப் பலவாறுசொல்லிப் பரமசிவனைப் பூஜைசெய்வான். பூஜைமுடிவில், மனமுருகி, வாக்குத்தழுதழுப்ப, தேகம் புளகித்துக் கூத்தாடித் துதிப்பான். கீதம்பாடுவான். பின்பு அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிவான். அவனுடைய சிவநேசம் இவ்வளவென்று சொல்வதரிது. ஒருநாள் அவன் மனைவியாகிய குமுதவதி யென்பவள் அவனிடத்தில் வந்து, 'என் நாயகரே! பரமசிவனுடைய பூஜையைக் கிரமமாகச் செய்கின்ற நீர், மாமிசங்களைப் புசிக்கின்றீர், முறைமையில்லா

மல் பல ஸ்திரீகளையும் புணருகின்றீர். இப்படிப் பாவமான கிருத்தியங்களைச் செய்வதற்குக் காரணம் என்ன' என்று கேட்க, வேடராஜன் சொல்லுகிறான்:

'பெண்மணி! நான் பூர்வஞ்செய்த தவப்பயனால் திரிகாலமும் அறிவேன். முன் ஜன்மத்தில் நானொரு நாயாய்ப்பிறந்து பம்பையென்னும் நகரத்தில் வாசமாயிருந்தேன். ஒருநாள், அந்த ஸ்தலத்திலுள்ள சிவாலயத்திற் சென்று, பலிச்சோற்றைத் தின்னப்போனேன். அப்போது அங்கிருந்தவர்கள் என்னை அடித்துத் துரத்தினார்கள். நான் பயந்து, குரைத்துக்கொண்டு, ஆலயத்தை வலமாகச் சுற்றிக்கொண்டோடினேன். ஓடும்போது வழிதெரியாமல் திகைத்துப், பலிபீடத்தினருகில் நின்று சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தேன். அன்று சிவராத்திரியாதலால், அங்கு நடக்கும் அருமையான திருவாராதனை முதலியவற்றையுங் கண்டேன். உடனே ஒருவன் என்மேல் பாணப்பிரயோகஞ் செய்தான். அது பட்டமாத்திரத்தில் இறந்தேன். இறக்குஞ் சமயத்தில் தீபவொளியோடு பரமசிவனைத் தரிசித்தபடியாலும், அவர் ஆலயத்தைப் பிரதக்ஷிணமாய் வந்ததனாலும், திரிகாலவுணர்ச்சியோடு அரசனாய்ப்பிறந்து பெருவாழ்வடைந்தேன். சதுர்த்தசியாகிய சிவராத்திரி தரிசன பலத்தினால் நாயாயிருந்த எனக்கும் ராஜபோகங் கிடைத்தபடியால் எந்தச் சதுர்த்தசியிலும் சிவராத்திரி போலவே விசேஷமாகப் பூஜைசெய்து வருகின்றேன். கைலாசபதியைத் தோத்திரஞ்செய்வதினால் சகல பாவங்களும் ஒழிந்துபோம். ஆதலால் நீயும் அவருடைய திருவடித் தாமரைகளில் அருச்சனைசெய்யக்கடவை' என்று சொன்னான்.

குமுதவதி அதைக்கேட்டு 'நாயகரே! நீர் திரிகாலமும் அறிவீரானால் நான் முற்பிறப்பில் எப்படியிருந்தேன் சொல்லும்' என்றாள். வேடராஜன், 'பெண்ணே! நீ முற்பிறப்பில் மல்லிகார்ச்சுனேஸ்வரருடைய கோயிற் புறாவாயிருந்தாய். ஒருநாள் நீ இரைக்காக மாமிசத் துண்டொன்றை யெடுத்துக்கொண்டு வரும்போது, ஓர் பருந்து அதைக்கிரகித்துக்கொள்ள நினைத்து, உன்னைத் தொடர்ந்தது. நீ பயந்து அந்தக் கோயிலைப் பிரதக்ஷிணமாகப் பறந்து ஓடிப்போய், துவஜஸ்தம்பத்தின் பக்கத்தில் மறைந்திருந்தாய். பருந்து விடாமற் றொடர்ந்துவந்து உன்னைக்கொன்று, மாமிசத்தைப் பிடுங்கிக்கொண்டுபோய்விட்டது. நீ, சிவ சந்நிதிக்கு நேராக விழுந்திறந்தாய். அதனாலும், முன்னே பிரதக்ஷிணம் செய்ததினாலும் ராஜபுத்திரியாய்ப் பிறந்து ராஜனான என்னை விவாகஞ் செய்துகொண்டாய்' என்று சொல்ல, அவள் 'முற்பிறப்பும் இப்பிறப்புந் தெரிந்தன இனிமேலெப்படிப்பிறப்போம்' என்றுகேட்டாள். அதற்கு வேடராஜன் சொல்லுகிறான்:—

'பெண்ணே! இனிவரும் பிறப்பில் நான் சிந்துதேசத்திற் பிறந்து எல்லா அரசர்களும் என்னை வணங்கும்படி அரசாட்சி செய்வேன்; நீ சஞ்சயன் என்னும் அரசன் புத்திரியாய்ப் பிறந்து எனக்கே மனைவியாவாய். மூன்றாம் பிறப்பில் நான் சவுராட்டிர நாட்டிற் பிறந்து அத்தேசமுழுதும் ஆள்வேன்; நீ, கலிங்கராஜன் புத்திரியாய்ப் பிறந்து என்மனைவியாவாய். நான்காம் பிறப்பில், காந்தார தேசத்திற் பிறந்து அரசாட்சி செய்வேன்; நீ, மகததேசாதிபதி மகளாய்ப் பிறந்து எனக்கு

மனைவியாகி மிகுந்த செல்வத்தோடு வாழ்ந்திருப்பாய். ஐந்தாம் பிறப்பில் அவந்திதேசத்தை ஆளும் அரசனாவேன்; நீ, தசாருக ராஜன் மகளாய்ப்பிறந்து எனக்குமனைவியாவாய். ஆறாம்பிறப்பில் அஸ்தினபுரிக்கு அரசனாகப் பிறப்பேன்; நீ, யயாதிராஜன் மகளாய்ப்பிறந்து என்மனைவியாய் வாழ்வாய். ஏழாம் பிறப்பில் நான் பாண்டியராஜன் புத்திரனாய்ப் பிறந்து, அழகிலும், ஆண்மையிலும் சிறந்தவனாகி, பதுமவர்ணன் என்னும் பெயர்பெற்று வளருவேன்; நீ, விதேகநாட்டரசன் புத்திரியாகி, வசுமதியென்னும் பெயர்பெற்று, மகா சௌந்தரியவதியாய் வளருவை. அப்போது உன்பிதா மந்திரிகளையழைத்து 'நம்முடைய புத்திரிக்கு மங்கைப்பருவம் வந்தது. ஆதலால் சுயம்வரமண்டபம் ஏற்படுத்தி ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் கலியாணவோலை யெழுதியனுப்புங்கள்' என்று சொல்வார். அவர்கள் அப்படியே கலியாணமண்டபம் அலங்காரஞ்செய்து கலியாணவோலை யனுப்புவார்கள். அதைப்பார்த்தவுடன், ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் தங்கள் தங்கள் தேரிலேறிக்கொண்டு. காடு, நாடு, காறு முதலியவற்றைக்கடந்து விதேக நாட்டைச் சேர்ந்து, கலியாணமண்டபத்தில் வந்து கூடுவார்கள். நானும் வந்துசேர்வேன். அப்போது நீ பூமாலையை யெடுத்து என்புஜத்திற் சூட்டுவை. அதை மற்ற அரசர்கள் கண்டு, மனம் வெம்பி எல்லாரும் ஒருங்குசேர்ந்து என்னை யெதிர்ப்பார்கள். நான் அவர்களுடன் பெரும்போர் செய்து, வென்று, உன்னைத் தேரிலேற்றிக் கொண்டு மதுரைக்கு வந்துசேருவேன். பின்பு பரமசிவனுடைய அனுக்கிரகத்தினால் நமக்கொரு புத்திரன் பிறப்பான். அவன்

வல்லவனானவுடனே, இராச்சியத்தை அவனிடத்தொப்பித்து விட்டு நாமிருவரும் பொதியமலைக்குச் சென்று தவஞ்செய்து கொண்டிருப்போம். இருக்குங்கால் அகஸ்தியமுனிவர் வந்து அநுக்கிரகஞ் செய்வார். அதனால் நாம் ஞானவந்தராய் மோக்ஷ மடைந்து பேரின்பமுற்றிருப்போம். சிவராத்திரியில் பரம சிவனைத்தரிசித்த பலத்தினால் பிறப்புக்களையெல்லாமறிந்து சொல்லுந் திறத்தைப்பெற்றேன். ஆதலால் பிராணநாயகியே! நீயும் சிவராத்திரிதோறும் பரமசிவனைப் பூசித்துப் பிறவியை நீக்கிக்கொள்' என்றான்.

குமுதவதி அங்ஙனமே பூசித்துவந்தாள். எழுபிறப்பும் முடிந்தவுடன், வேடராஜனும் அவன்மனைவியும் ஒரே தினத்தில் தேகவியோகமாய்ப், பரமசிவனுடைய திருவடி நிழலைச் சேர்ந்து, பேரின்ப முற்றிருந்தார்கள்

கவி

கண்ணுதலா னைநோக்குங் கண்களே கண்கள்,
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்,
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்,
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்,
பண்ணவன்றன் சீர்பாடு நன்றேவ நன்றே,
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்,
அண்ணல்பொலங் கழனினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்,
அரனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.

உ

சிவமயம்.

நாலாவது

சனிப்பிரதோஷமகிமை.

சனிப்பிரதோஷத்தில் சந்திரசேனன் பூசைசெய்த அத்தியாயம்.

———()———

முனிவர்களே! சனிப்பிரதோஷ மகிமையைச் சொல்லுகிறேம் கேளுங்கள். உஜ்ஜயினிபட்டணத்திலே சந்திரசேனன் என்னும் அரசன் ஒருவனிருந்தான். அவன் அந்நகரத்தில் வீற்றிருக்கும் மாகாளேசுவரஸ்வாமியை மிகுந்த பத்தியோடு பூஜைசெய்து வருபவன். ஒருநாள் மாணிபத்திரர் என்னும் சிவகணநாதர் அவனிடத்துக்குவந்து 'ராஜனே! சிவபூசையில் சிறந்த பத்தியையுடைய உன்னைப்பார்க்க விரும்பிவந்தேன்' என்றுசொல்ல, இருவரும் சிநேகமானார்கள். சிலநாள் சென்றபின், சிவகணநாதர் அரசனிடத்துக் கொண்ட அன்பினுக்காக அகமகிழ்ந்து உயர்ந்த சிந்தாமணியென்னும் ஓர்இரத்தினத்தை அவனுக்குக் கொடுத்தருள, அதை அவன் ஆபரணமாக்கித் தன்மார்பிலணிந்து கொண்டான். அம்மணியின் பெருமையைக் கேள்விப்பட்ட வேற்றரசர்கள், அதன்மேலாசை கொண்டு, சிலர் சிநேகத்தினால் அது தமக்கு வேண்டுமென்றும், சிலர் அதனைத் தாரவிடில் போர்செய்து வென்று பெற்றுக் கொள்வோமென்றுந், தூதர்களால் தெரிவித்தார்கள்.

சந்திரசேனன் அவைகளைக்கேட்டு 'என் புஜபலமும் நான் பெற்றவரங்களும் ஒழிந்த பின்னரேயன்றி அதற்குமுன் இந்தச் சிந்தாமணியைத் தருவேனல்லேன்' என்று சொல்லி யனுப்பினான். தூதர்கள்போய் இந்தச்சமாசாரத்தை அவ்வரசர்களிடத்திற் சொல்லவே, அவர்கள் கோபங்கொண்டு, திரண்டசேனையோடும் வந்து உச்சினிப்பட்டணத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். சந்திரசேனன் சிறிதும் அஞ்சாதவனாய்ச் சந்தனம், புஷ்பம், ஆபரணம், தூபதீபம், திருமஞ்சனம், முதலிய பூஜாதிரவியங்களுடன் ஆலயத்திற் சென்று, மகாளேசுவரரை விதிப்படி பூஜைசெய்து, அவருடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் ஓர் இடைப்பிள்ளை சுவாமியை வணங்க அவ்வாலயத்துக்குப்போய் ராஜன் செய்தவை யெல்லாம் பார்த்திருந்து வீட்டுக்குவந்து, மறுநாள், தானும் அப்படியே பூஜைசெய்ய நினைத்து, பூஜாதிரவியங்கள் எல்லாந் தனக்குக் கிடைக்காமையால், மணலையும் பச்சிலைகளையும் எடுத்து 'இது மாலை, இது சந்தனம், இது தூபம், இது தீபம், இது திருமஞ்சனம், இது ஆபரணம், இது அன்னம், இது வஸ்திரம்' என்று இப்படி யேற்படுத்திக்கொண்டு அவைகளால் மிகுந்த அன்போடு பூஜைசெய்து கொண்டிருந்தான். அப்போது அவன் தாய்வந்து 'அப்பா மகனே! போஜனம் செய்ய வா' என்றழைக்க, அவன் எழுந்திராமல் சிவத்யானத்திலேயே யிருந்தான். அவள் அது விளையாட்டென்று நினைத்துக்கோபித்து அவனை யடித்து, சிவலிங்கமாகவைத்துப் பூஜைசெய்துகொண்டிருந்த கருங்கல்லை யெடுத்தெறிந்துவிட்டு, வீட்டுக்குப்

போனாள். சிறுவன் 'ஐயோ! என்சுவாமியை யெடுத்தெறிந்து விட்டாளே' என்று மிகுந்த வருத்தமுற்று அழுது, தனக்கு நேரிட்ட துயரம் சகிக்கமாட்டாமல் இரண்டுநாழிகை வரையில் மூர்ச்சையாயிருந்தான். பின்பு மூர்ச்சை தெளிந்து, கண்ணைத்திறந்து பார்க்கத், தன்வீடுமுழுதும் நவரத்தின கசிதமாகவும், தாயார் எடுத்து எறிந்துவிட்ட கல் இரத்தினமயமான சிவலிங்கமாகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கக்கண்டு, பேரானந்தங்கொண்டு, அருந்தவஞ் செய்தவர்களுக்கும் கிடைக்காத இந்தநன்மை ஏழையாகிய எனக்குக் கிடைத்தது, நான் பரமசிவனைப் பூசித்தபலனோ? அன்றேல், அவருடைய திருவிளையாட்டோ? அல்லது, என் குலத்தார் செய்த புண்ணியமோ? என்று அதிசயித்துத் தன் தாய்செய்த குற்றத்தைப் பொறுத்தருளி யநுக்கிரகித்த கடவுளுடைய பெருங்கருணைத் திறத்தைப் பலவாறு புகழ்ந்து நின்றான்.

வீட்டிற்போய் நித்திரை செய்துகொண்டிருந்த தாயார், நித்திரை நீங்கியெழுந்து பார்க்கும்போது, தன் வீடெல்லாம் பொன்மயமா யிருப்பதைக்கண்டு ஆச்சரியங் கொண்டு 'நல்ல புத்திரனைப் பெற்றேன்' என்று மனங்களித்து, 'இந்த விருத்தாந்தத்தை ராஜனுக்கு அறிவிக்கவேண்டும்' என்று அரண்மனைக்குப்போய் அரசனைக் கண்டு நடந்தவைகளை யெல்லாஞ் சொன்னாள். அதைக்கேட்டு அரசன் மந்திரி பிரதானிகளோடு ஆயர்சேரிக்கு வந்து அங்கே பொன்மயமாய் விளங்குகிற வீட்டையும், திவ்யஸ்வரூபத்தோடு பரமசிவன் வீற்றிருக்கின்ற ஆலயத்தையுங்கண்டு பிரதக்ஷிணஞ்செய்து, சந்நிதியிற்போய்த் தொழுது, 'அரிபிரமாதிகட்கும் அரிய

பரமசிவன், அடியார்செய்யும் அன்புக்காகத் திருவுளமிரங்கித் திருக்கோயில்கொண்டமர்ந்தார்' என்று ஆநந்தித்து, அந்த இடைப்பிள்ளையைத் தழுவிக் கொண்டான். இவ்வதிசயங்களைக்கண்ட அந்நகரத்தாரெல்லோரும் ஆநந்த கோஷஞ் செய்தது சமுத்திர கோஷம்போலிருந்தது. அப்போது சூரியனும் உதயமானான்.

நடந்தவைகளையெல்லாம் போர்செய்ய வந்த அரசர்கள் கேட்டு 'இது ஆச்சரியமாயிருக்கிறதே' என்று நடுக்கமுற்றுச் 'சந்திரசேனமகாராஜன் பரமசிவனுடைய மெய்யன்பனாயிருக்கின்றான். இதையறியாமல் அவனை அவமதித்து அவன்மேற் போர்செய்ய வந்தோமே' யென்று தங்களைத் தாங்களே வெறுத்துக்கொண்டு, சேனைகளை யெல்லாம் தத்தம் இடங்களுக் கனுப்பிவிட்டுத் தாங்கள் உச்சயினிபட்டணத்திற் போய், சந்திரசேன மகாராஜனைக்கண்டு வணங்கி 'ராஜனே! உம்முடைய சிநேகம் எங்களுக் கெப்போது மிருக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள் சந்திரசேனன் அதுகேட்டு 'அரசர்களே! உங்களுடையசிநேகமும் எனக்கு அப்படியேயிருக்க வேண்டும் என நானும் விரும்புகிறேன்' என்றான். இவ்வாறு சமாதானமான பின்பு சந்திரசேன மகாராஜனும் மறுதேசத் தரசர்களும் ஒன்று சேர்ந்து மாகாளேசுவரரை வணங்கி, அப்பால் இடைப்பிள்ளை செய்த பூசைக்காக மகிழ்ந்துவீற்றிருக்கும் சிவலிங்கப் பெருமானையும் பணிந்து, தங்களெதிரில் நின்றுவணங்கிய அந்தப்பிள்ளையைத் தழுவி உபசாரவார்த்தைகள் சொல்லி 'இவ்வுலகத்திலிருக்கும் ஆயர் குலத்துக்கெல்லாம் நீயே யிறைவனா யிருக்கக்கடவை' என்றுவாழ்த்தினார்கள்.

அச்சமயத்தில் ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சனேயர் அவ்விடம் வந்தார். சந்திரசேனன் அவரைக் கண்டுமகிழ்ந்து சேவித்து உபசாரஞ் செய்தபிறகு, அவர் அந்த இடைப்பிள்ளையைத் தம் மார்பிலணைத்துக்கொண்டு 'அரசர்களே! கேளுங்கள், உலகிய லறியாத இச்சிறுவன்செய்த ஆராதனைக்குத் திருவுளமகிழ்ந்து பரமசிவன் தரிசனந் தந்தருளியதைக்கண்டீர்களே. இது சந்திர சேனமகாராஜன் சனிப்பிரதோஷத்திலப்போது பரமசிவனைப் பூசித்ததைப் பார்த்திருந்து, அதுபோற் செய்யவேண்டும் என்னும் அன்பினாற்செய்த பூஜையின் பலமாகும். சனிப்பிரதோஷ பூஜையைக் கண்டவர்கள் பெறும்பேறு இவ்வளவி லடங்குவதோ! இச்சிறுவனுடைய சந்ததியாய்வரும் எட்டாந்தலை முறையில் மகாவிஷ்ணு அவதாரஞ்செய்வார். அவ்வண்ணம் வளர்க்க நந்தன் என்னும் ஆயர்கோனொருவன் இந்தக் குலம்விளங்கத் தோன்றுவான். இன்று முதல் இப்புத்திரனை ஸ்ரீதரன் என்று பெயரிட்டழையுங்கள்' என்று சொல்லி, அப்போதே அப் புத்திரனுக்குச் சிவபூசையின்கிரமத்தையும் உபதேசித்தருளிப் போனார். அரசர்களும் தத்தம் நகரங்களுக்குச் சென்றார்கள். சந்திரசேன மகாராஜனும் ஸ்ரீதரனும் உச்சினிபட்டணத்தில் நெடுங்காலம் பரமசிவனுடைய திருவடிகளைப் பூசித்து வாழ்ந்திருந்தார்கள்.

—()—

சனிப்பிரதோஷமகிமைதொடர்ச்சி.

சத்தியாதனன் பூஜைசெய்த அத்தியாயம்.

நைமிசாரணிய முனிவர்கள் 'முன்னம் சொல்லிய பிரதோஷகாலமும், அதன்கிரமமும்பூசிப்பவர்கள், பெறும்பேறும், தெளிவாகச் சொல்லியருள வேண்டும்' என்று பிரார்த்திக்கச் சூதமுனிவர் சொல்லுகின்றார்:—

பதின்மூன்றாம் திதியாகிய திரயோதசியின் மாலைப் பொழுதே பிரதோஷகாலமாம். அது பரமசிவனுக்கு மிகவும் விருப்பமுள்ள காலம். அக்காலத்தில் பரமசிவனைப் பூசியாமல் பிரமா, விஷ்ணுமுதலிய தேவர்களைப் பூசிப்பவர்கள் நரகத்தில் வீழ்வார்கள். பரமசிவனைப் பூசிக்கின்ற பரிசுத்தர்கள், பூலோகத்தில் எல்லா இன்பங்களையும் அநுபவித்து மோக்ஷமாகிய பெரும்பேறும் பெறுவார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக நடந்த சரித்திரம் ஒன்று சொல்லுகிறோம்:—

விதர்ப்பதேசத்திலே சத்தியாதனன் என்னும் அரசன் அரசாட்சி செய்கையில், அவனுடைய பகைவர்கள் படையெடுத்துவந்து, நகரத்தை வளைத்துக்கொண்டார்கள். சத்தியாதனன் சேனைசமேதனாய்ச் சென்று அவர்களை யெதிர்த்துப் போர்செய்து தான் அப்போரில் மடிந்துபோனான். ஜயம் பெற்ற அரசர்கள் நகரத்தைக் கொள்ளையிடும்படி தங்கள்

சேனைகளுக்குக் கட்டளையிட்டார்கள். அப்போது இராக்காலமும் வந்துவிட்டது. கொள்ளையடிக்கும்படி சேனைகள் பட்டணத்திற் புகுந்த செய்தியை சத்தியாதனன் மனைவியாகிய சதீஎன்பவள் கேள்வியுற்று வயிற்றிலடித்துக்கொண்டழுது அந்த இராத்திரியிலே தனியாய் ஒருவருக்குந் தெரியாமல் மேற்குத் திசையை நோக்கிச் சென்றாள். பூரண கருப்பமுள்ளவளாதலால் மிகவருத்தத்தோடு தள்ளாடிக் கொண்டுபோய், காட்டுக்குள்ளிருந்த ஓர் தடாகத்தில் தங்கிப், பிள்ளையைப் பெற்றுக் கரையில் வைத்துவிட்டு, நீருண்ணும் பொருட்டு ஒரு பக்கத்தில் இறங்கினாள். அந்தக்ஷணத்தில் ஓர் முதலை வந்து அவளைப் பற்றி விழுங்கிவிட்டது.

கரையின்மேல் குழந்தை அழுதுகொண்டிருக்க, அச்சமயத்தில் உமையென்னும் பெயருடைய ஒரு பிராமணஸ்திரீ அவ்வழியே வந்தாள். அவளுக்கு ஒருவயதுள்ள குழந்தையொன்றிருந்தது. அதனுடன் வந்தவள் அழுதுகொண்டிருந்த குழந்தையைப் பார்த்து 'சூரியனைப்போல் தேஜஸ்பொருந்திய இந்தக்குழந்தை ராஜகுமாரனாயிருக்கவேண்டும். அல்லது பிராமணப் பிள்ளையாயிருக்கவேண்டும். இதைப்பெற்றவள் எவளோ? எங்கேயிருக்கிறாளோ? காக்கைகூட இன்னம் அறுக்கவில்லையே! மத்தியில் என்ன சம்பவித்ததோ தெரியவில்லை. நம்முடைய குழந்தையோடுகூட இதையும் வளர்த்து வருவோமென்றாலோ மேற்சொன்ன இரண்டு வருணமுமல்லாமல் அன்னியகுலத்துப் பிள்ளையாயிருந்தால் அதை வளர்ப்பது நங்குலத்துக்குத் தகாதே' யென்று யோசித்துக் கொண்டிருந்தாள். அக்காலையில் அங்கேவந்த ஓர் ருஷியானவர்

தம்முடைய ஞானதிருஷ்டியினால் நடந்தவைகளை யறிந்து கொண்டு பிராமணஸ்திரீயைப் பார்த்து 'அம்மா! நீ யிந்த ராஜபுத்திரனை யெடுத்துக் கொண்டுபோய் வளர்த்தால் உன்குலமும் இவ்வுலகமும் ஈடேறும்' என்று சொன்னார். அதைக்கேட்டு அந்தஅம்மாள் சந்தோஷமாய் அந்தப்பிள்ளையை யெடுத்துக் கொண்டுபோய் ஏகசக்கிரம் என்னும் நகரத்தை யடைந்து அங்கே பிக்ஷையெடுத்துச் சீவனஞ்செய்துகொண்டு, இரண்டு பிள்ளைகளையும் வளர்த்துவந்தாள். அவர்களுக்கு உபநயனஞ் செய்யத்தக்க பருவம்வர அந்நகரவாசிகளாகிய தக்கோர்களைக்கொண்டு அதுவுஞ் செய்வித்து, அரியவேதங்களையும் ஓதுவித்தாள். அப்பால்அந்தப்பிள்ளைகளே பிராமணர் வீடுகள்தோறுஞ் சென்று பிக்ஷை வாங்கிக்கொண்டு வந்து அதனைத் தாயுந் தாங்களுமாக உண்டு, மற்றப்பிராமணப் பிள்ளைகளோடு நான்குவேதங்களையும் அத்தியயனஞ் செய்து வந்தார்கள். இவ்வகையாகப் பிராமணீகத்திலும் ஆயுதப் பயிற்சியிலும் வல்லவர்களாய்த் தாயுடன் சிவாலயத்திற்கும் நாள்தோறுஞ்சென்று, வந்தனை வழிபாடுகள் செய்து வந்தார்கள்.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் சாண்டில்லிய ரென்னும் முனிவர் அவர்கள் தாயிடத்தில்வந்து 'அம்மா! பரமசிவனுடைய திருவிளையாடலை பிரமவிஷ்ணுக்களும் அறியார்கள். உன்புத்திரர் இருவரில் இளையவன் உனக்குப் புத்திரனாய் வந்தது மிகுஅதிசயம்' என்று சொல்ல, உமையம்மை அவரை வணங்கி 'ஐயா பெரியோரே! இவன் வரலாற்றை யெனக்கு விளங்கச் சொல்லவேண்டும்' என்று பிரார்த்தித்தாள். முனிவர், அவனுடைய தகப்பனாகிய சத்தியாதனன் பகைவரால்

யுத்தகளத்தில் இறந்ததும், தாய், காட்டிற்சென்று பிள்ளை பெற்று நீருண்ணப்போனவிடத்தில் முதலையால் விழுங்கப்பட்டதும், பின்பு நடந்ததுஞ் சொல்ல, உமையம்மை கேட்டு அதிக ஆச்சரியங்கொண்டு 'ஐயரே! சகலபோகங்களையும் அநுபவித்துக் கொண்டிருந்த அந்த அரசனுக்கு இவ்வகையான விபத்துக்கள் வந்ததற்கு காரணம்யாதோ' என்ன முனிவர் சொல்லுகிறார்:—

'அம்மா! இவன்பிதா முற்பிறப்பில் பாண்டிய ராஜனாயிருந்து மதுராபுரியில் அரசுசெய்து வந்தான். அந்நகரத்திலிருக்கும் திருவாலவாயென்னும் திருக்கோயிலுக்குப் பிரதோஷகாலந்தோறுஞ் சென்று பூசைசெய்து வருவான். அப்படி ஓர் பிரதோஷதினத்தில் பூஜை செய்துகொண்டிருக்கும் போது, சோழராஜன் முதலாகிய பலதேசத்து அரசர்கள் தன்மேல் படையெடுத்து வந்தார்களென்று தூதர்கள் ஓடிவந்து சொல்லக்கேட்டு மிகுந்த கோபங்கொண்டு, பூசை செய்வதை விட்டு, வெளியேவந்து, சேனைகளைக் கூட்டிவரும்படி திட்டஞ்செய்தான். அதற்கு முன்பே மந்திரி பகைவர்வந்த செய்தியை யுணர்ந்து, இதை நமதரசனுக்குத் தெரிவித்தால் சிவபூசைக்கு விக்கினம் வருமே என்று அஞ்சி, தானேசென்று போர்செய்து எதிரிகளைச் செயித்துச் சோழனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்து பாண்டியன் முன்னே விட்டான். பாண்டியன் சிறிதும் இரக்கமின்றிச் சோழனைத் தன்வாளால் துணித்துப்போட்டு வெற்றியடைந்த இறுமாப்பினால் குறையாகவிட்ட சிவபூஜையையும் நினையாமல், அன்றிரவு ஷட்ரச பதார்த்தங்களோடும் புசித்துச் சுகித்திருந்தான். அந்தக் குற

றந்தால் இந்தப்பிறப்பில் பூரணயுகடனிருந்து போகங்களை யநுபவியாமல் பாதிவயதிலேதானே பகைவனுடைய ஆயுதத்தால் போர்க்களத்தில் மடிந்தான். இந்தப்பிள்ளை அங்காளிலும் அப்பாண்டியனுடைய புத்திரனாயிருந்தான். இருந்தும், தகப்பன் முற்றுவிக்காதுவிட்ட குறைப்பூஜையினால் தங்களுக்குக் குறைவுவந்து சம்பவிக்குமே யென்பதை யெண்ணாமல் தகப்பனுடன் தானும் உண்டு இன்புற்றிருந்தான். அதனாலிப்பிறப்பில் இத்தன்மையாகிய வறுமைத்துயரம் சம்பவித்தது. இவன் தாயும் அந்தப்பாண்டியராசன் மனைவியாயிருந்து அவனுடைய மற்றை மனைவியர்களை விஷமிட்டுக்கொன்றாள். அந்தப்பாவத்தால் இவனைப்பெற்றவுடனே முதலைக்கிரையானாள். முற்பிறப்பில் பரமசிவனுடைய பூசையை முற்றச்செய்யாத கீழ்மக்களே இப்பிறப்பில் தரித்திரராய்ப் பிறந்து பிச்சையெடுத்துழல்பவர்கள். அப்பரமசிவனை நாடோறுந் தியானஞ்செய்து குறைவில்லாமல் அருச்சிப்பவர்களே சகல போகங்களையும் பெற்று வாழ்வார்கள். சிவபூஜையே உண்மையான மோக்ஷ இன்பந்தரும் என்று வேதாகமங்கள் முறையிடுகின்றன. பிரதோஷ பூஜைக்கு இவ்வளவு மகத்துவமுண்டானதற்குக் காரணம் என்னவென்றால் பிரதோஷகாலந்தோறும், கைலாசகிரியிலே பரமேஸ்வரர் பார்வதிதேவியார் கண்டுகளிக்கவும், விஷ்ணு குடமுழா முழக்கவும், தும்புரு நாரதர்கள் இசை பாடவும், திருமகளும் கலைமகளும் மகாவீணை வாசிக்கவும், சதுர்முகப்பிரமன் கைத்தாளம்போடவும், தேவர்களெல்லாந் துதிசெய்யவும், பலகோடி சூரியர்களை யொத்துவிளங்குந் திருமேனியோடு ஆநந்ததாண்டவஞ் செய்தருளுவர். அக்காலத்

திலே விஷ்ணுமுதலிய தேவர்களெல்லோரும் பரமசிவனுடைய சதாநந்த நிருத்தத்திற்குரிய பணியாளராய்ச் செல்ல வேண்டியிருத்தலால் அப்போது தங்களை ஒருவரும் பூசிக்கக்கூடாதென்று கட்டளையிட்டுப், பரமசிவனுக்குச் செய்யப்படும் பூஜையையே தங்களுக்கும் செய்யப்படுவதாகவெண்ணி மகிழ்ச்சியடைவார்கள். இது வேதாகமாதி சாஸ்திரங்களின் துணிபு.

அதுநிற்க, உன்மூத்தபிள்ளை முற்பிறப்பில் பிராமண குலத்திற் பிறந்து மிகுந்த செல்வமுடையவனாயிருந்தான். அப்படியிருந்தும், அதைக்கொண்டு சுகித்திராமல் எவர்களென்னதானங் கொடுத்தாலும் அவைகளையெல்லாம் ஏற்றுச் சீவனஞ் செய்வான். தான் யாசகருக்கு ஒன்றுங் கொடான். அந்தப்பாவங்களால் இப்பிறப்பில் வறுமையடைந்தான். இனி இவர்களிருவரும் சனிப்பிரதோஷத்தில் பரமசிவனைப் பூசிப்பார்களானால் இவர்கள் படுகிற வறுமைத்துன்பங்கள் சூரியனைக் கண்ட இருள்போல் நீங்கிவிடும்,'—என்று சொன்னார். அதைக்கேட்டு உமையம்மை மிகவுஞ் சந்தோஷமடைந்து 'சுவாமீ! பரமசிவனைப் பூசிக்கும் கிரமங்களை அடியேனுக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று பிரார்த்திக்க, சாண்டில்ய முனிவர் கிருபை கூர்ந்து சொல்லுவாராயினார்:—

116619

பிரதோஷபூஜை மகிமை தொடர்ச்சி.

பிரதோஷதினத்தில் பரிசுத்தமாகிய நீரில் ஸ்நானஞ் செய்து, பகற்பொழுதில் உணவொழித்து, மாலைப்பொழுது வருகிறகாலத்தில் சித்திரச் செவ்வாடையினால் விதானித்துப் பந்தலிட்டு, அதிலிருந்துகொண்டு, வேத சிவாகம விதிப்படி,

ஐம்புலன்களையும் அடக்கிப், பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துப் பரமசிவனையும் அவருடைய இடப்பாகத்தில் பார்வதி தேவியாரையும் எழுந்தருளப்பண்ணித், தூபதீபமுதலிய எல்லா உபசாரங்களோடும் குறைவுபடாமல் ஆராதிப்பவர் யாவராயினும் துன்பம்நீங்கிச் சுகமுறுவார்கள். இவ்விதமாய் இவ்விரண்டு பிள்ளைகளும் பூஜை செய்வார்களானால் மூத்தவனுடைய தரித்திரம் தொலைந்துபோம்; இளையவன் ஏக சக்கிராதிபதி யாவன்' எனத்திருவுளம்பற்ற, இதைக்கேட்டவுடனே அந்தப் பிள்ளைகளெழுந்து வணங்கிச் 'சுவாமீ! தேவரீருடைய அநுக்கிரகத்தால் அடியேங்கள் உய்ந்தோம்' என்றுகூற, முனிவர் அகமகிழ்ந்து அவர்களை ஆசீர்வதித்துச், சிவபெருமானுடைய மூலமந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்தருளினார். அவ்வுபதேசத்தைப்பெற்ற அவ்விருவரும் முனிவருடைய திருவடிகளைத் தொழுதுநிற்க அவர் பிராமணப்பிள்ளைக்குச் 'சுசிவிரதன்' என்றும், ராஜகுமாரனுக்குத் 'தருமகுப்தன்' என்றும், பெயரிட்டு மகிழ்ச்சியோடு விடைகொடுத்தனுப்பினார். பிள்ளைகள் இருவரும் தாயும் முனிவரிடத்து விடைபெற்றுக்கொண்டு வீடுசேர்ந்து அவர்சொல்லிய வண்ணமே பிரதோஷ காலந்தோறும் பரமசிவனைப் பூசித்து வந்தார்கள்.

இப்படி நாலுமாதம் சென்றபின்பு ஒருநாள் பிராமணப் பிள்ளை ஸ்நானஞ்செய்ய ஆற்றுக்குப்போனான். அங்கே ஒரு குடத்தில் திரவியமிருக்கக்கண்டு மகிழ்ந்து 'பரமசிவனைப் பிரதோஷகாலத்திற் பூசித்தபலன் இதுவாகும்' என்று அவரது திருவருளைப்புகழ்ந்து, அதை யெடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து தாயுடன் சொன்னான். தாயார் அதுகேட்டுச் சந்தோஷ

மடைந்து 'புத்திரர்களே! நீங்களிருவரும் இந்தத் திரவியத்தைப் பங்கிட்டுக்கொள்ளுங்கள்' என்று சொல்ல, ராஜகுமாரன் 'தாயே! இது பரமசிவன் என்றமையனுக் கருளிச்செய்ததாதலால் அவருக்கே உரியதாம். அந்தக்கடவுள் எனக்கும் கிருபைசெய்வார். நீ வருந்தாதே' என்று வணங்கிக் கூறினான். அதற்கு அவள் சம்மதித்து அவ்விரண்டு புத்திரர்களோடும் சௌக்கியமாய்க் காலங்கழித்து வந்தாள். ராஜகுமாரனும் மிகுந்த பக்தியுடன் பரமசிவனைப் பூஜைசெய்து வந்தான்.

இங்ஙனம் ஒருவருஷஞ் செல்லுகையில் வேனிற்காலம் வந்தது. அப்போது பூங்காவனங்களெல்லாம் விதம் விதமாகப் புஷ்பித்துத் தேனைச்சொரிந்தன. இளந்தென்றல் மகரந்தப் பொடிகளை யெங்கும் வீசிற்று. கிளிகள் குயில்கள் முதலிய பக்ஷி சாலங்களெல்லாம் இனியஇசைபாடிக் களிப்படைந்தன. வண்டுகள்மலர்த்தேனையுண்டு ரீங்காரஞ்செய்தன. ஸ்திரீகளும் ஆடவர்களும் தங்கள் மாளிகைகளை விட்டுச் சோலைகளிற் சென்று அங்குள்ள தடாகங்களில் நீர்விளையாடல், போது கொய்தல், முதலிய விளையாட்டியற்றி இன்புற்றிருந்தார்கள். அந்தக்காலத்தில் ஒருநாள் ராஜகுமாரனும் பிராமணப் பிள்ளையும் வேடிக்கையாக ஒருசோலையிற் சென்று அங்குள்ள விநோதங்களைப் பார்த்திருந்தார்கள். அத்தருணத்தில் ராஜகுமாரன் தனியாய் வேறொருசோலையிற் சென்று, அங்கே தோழிமாருடன் விளையாடிக் கொண்டிருந்த அதிசுந்தரமான ஓர் கன்னிகையைக் கண்டுமயங்கி நின்றான். அவளும் அவனுடைய அழகைப் பார்த்து

மோகங்கொண்டு தோழிமார்களை மலர்பறித்து வரும்படி யனுப்பிவிட்டு, ராஜகுமாரனிடத்து வந்து, அவன் வரலாறுகளை அவனோடு வினவ, அவன் தன் தகப்பனாகிய சத்தியரதனராஜன் அரசாண்டு கொண்டிருந்ததும், பகைவர்களால் யுத்தகளத்தில் மாண்டதும், தன் தாயார் காட்டிற் சென்று அவ்விடத்தில் தன்னைப்பெற்று வைத்துவிட்டு நீர்பருகப் போன சமயத்தில் முதலைக்கிரையானதும், பின்பு உமையென்னும் பிராமணஸ்திரீ தன்னை யெடுத்துக்கொண்டுபோய் வளர்த்ததும், சாண்டில்லிய முனிவர்வந்து அநுக்கிரகஞ் செய்ததும், அதுமுதல் பரமசிவனை நெறியோடு வழிபட்டு வருவதும், ஆகிய இவைகளை யெல்லாம் விவரமா யெடுத்தோதிப் 'பெண்ணே! நான்செய்த அப்பூஜாபலந்தான் உன்னைக் காணும்படிக் கூட்டுவித்தது, உன் வரலாறுகளைச் சொல்' என்று கேட்டான். அவள் 'அரசனே! கயிலாயகிரிக்குத் தென்புறத்தில் தேடியென்றொரு நகருண்டு. அதில் வாழுங் காந்தருவர்களுக்கு அரசனாகிய த்ரிவிதநன் என்பவன் என் பிதா. தாரணியென்பவள் என் அன்னை. என்பெயர் அம்சுமதி. மலர்கள் கொய்ய இந்தச்சோலைக்கு வந்தேன். உம்மைப் பார்க்கவே கூடஇருந்த தோழிமார்களை அப்புறமனுப்பிவிட்டுத் தனியாய் உம்மிடம் வந்தேன். உம்முடைய வடிவழகைக்கண்டு அளவில்லாத மோகங்கொண்டேன். சங்கீத வித்தையில் நான் மிகவுந் தேர்ந்தவள். ஞான திருஷ்டியினாலே எல்லாருடைய கருத்தையும் அறிந்துகொள்வேன். இப்போது என்னிடத்தில் உமக்கிச்சை யுண்டென்பதையுந் தெரிந்துகொண்டேன். வேதசாஸ்திரங்களில் சொல்லியிருக்கப்பட்ட எண்வகை விவா

கத்தில் காந்தர்வ விவாகமே எங்களுக்கியல்பா யிருப்பது ஆகலால், எனக்குண்டாகிய ஒருதலைக் காமத்தின் மட்டாகாமல் நீரும் என்னிடத்தில் மோகங்கொண்டது ஊழ்வினையினால் உண்டானகாரியமாகும்' என்று சொல்லித் தானணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றி அவனுக்குத் தரித்தாள். அவன் மகிழ்ந்து 'பெண்ணரசியே! அரசாட்சியை யிழந்து வறியனாயுழன்று கொண்டிருக்கிற எனக்கு நீ உன்பிதாவின் அநுமதியின்றி முத்துமாலையைத் தரித்தது தகுதியா?' என்ன, அவள் 'ராஜகுமாரரே! நீர் சொன்ன வார்த்தை நன்றாயிருக்கின்றது. நான் உம்முடைய அடியாளல்லவோ? உம்முடைய எண்ணங்களெல்லாம் நிறைவேறும்படி செய்கின்றேன். நீர் நாளைத்தினம் இவ்விடத்துக்கு வாரும்' என்று சொல்லிவிட்டுத் தோழிமார்களுடன் தன் இருப்பிடம் போயினாள்.

ராஜகுமாரன் நடந்தவைகளைத் தன் தமையனுக்குச் சொல்லி யிருப்பிடம்போய்ச் சேர்ந்து தாயைக்கண்டு அவளுடனும் இந்தச்சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லிப் பரமசிவனை ஆராதித்துப்போற்றி 'அருள்செய்ய வேண்டும்' என்று வேண்டிக்கொண்டு, மறுநாள் காந்தர்வஸ்திரீ வரச்சொன்ன சோலையினிடத்துத் தமையனுடன் சென்று, அங்கே காந்தர்வ ராசனையும் அவன் குமாரத்தியையுங் கண்டான். காந்தர்வராசன் இருவரையுந் தழுவித் தன்னருகிலிருத்தி 'அரசனே! தேவர் பெருமானாகிய பரமசிவனை வணங்குவதற்கு நேற்றைத்தினம் கைலாயகிரிக்குப் போயிருந்தேன். அங்கே கைலாசபதியானவர் திருவுளமகிழ்ந்து உன் வரலாற்றையும், அவரிடத்தில் உனக்குண்டா யிருக்கும் பத்தியையும், உன்னிடத்திலவர்

வைத்திருக்குங் கிருபையையும், அவரைப் பூசித்த பலத்தினாலே உன்பிதாவின் இராச்சியத்தை நீ மறுபடியும் பெறப்போகிறதையும், திருவாய் மலர்ந்தருளி, உனக்குத் துணை செய்யும்படிக்கு எனக்குக் கட்டளையு மிட்டருளினார். அவர் திருவாக்கைச் சிரமேற்கொண்டு அவ்விடத்திலிருந்து என் நகரம் வந்து சேர்ந்தேன். அப்போது என்புத்திரியாகிய இவள் வந்து உன்மரபு முதலியவற்றைச் சொன்னாள். அது கேட்டு மகிழ்ந்து உன்னைக் காணும்பொருட்டு இவ்விடத்திற்கு வந்தேன். பரமசிவனுடைய கிருபையைப் பெற்றவர்களுக்குக் கிடையாத பொருளும் உண்டோ? இந்தக் கன்னிகையை உனக்கு மனைவியாகக் கொடுத்தேன்' என்றுசொல்லித் தன் கரத்திலிருந்த நீரை அவன் கரத்தில் விட்டுத் தத்தஞ்செய்து, ஆடையாபரணம், யானை சேனை, முதலிய எல்லாவரிசைகளுங் கொடுத்துத் தன்மகளை மருமகனோடு கூட்டி அனுப்பிவிட்டுத் தான் விமானமேற்கொண்டு வெள்ளியங்கிரிக்குச் சென்றான். பின்பு, ராஜகுமாரன் சேனைகள் புடைசூழ்ந்துவர மனைவி, தாய், தமையன் முதலியோரோடும் சென்று தன் குலத்தார்க்குரியதாகிய விதர்ப்பதேசத்தையடைந்து, அங்கிருந்த பகைமன்னர்களைப் போர்க்குவரும்படியாகவும், வாராவிடில் தனக்கு வணங்கிவிடும்படியாகவும் தூதரைக்கொண்டு தெரிவித்தான். அதைக்கேட்ட அரசர்கள் உடல்குலுங்க நகைத்து, கண்கள் சிவக்கக் கோபங்கொண்டு 'இச்சிறுவன் ஒருவனோ எங்களை எதிர்க்கவல்லவன்' என்றிகழ்ந்து, தத்தஞ்சேனைகளுடன் யுத்தகளத்தில் வந்துசேர்ந்தார்கள். தருமகுத்தன் என்னும் ராஜகுமாரனும் தன்சேனையோடு அங்குவரவே, இருதிறத்தா

ருடைய சேனைகளும் கைகலந்து கொடும்போர் செய்தன. அந்தச்சண்டையில் பகைமன்னர்களுடைய சேனைகளெல்லாம் பட்டு மடிந்து மலைபோல்குவியத் தருமகுத்தன், ஆதியில் தன் பிதாவைக்கொன்ற பகைவனைக் கொன்று வெற்றிபெற்றுச் செயபேரிகை முழக்கினான். அப்போது மந்திரி பிரதானி முதலானவர்களும் வந்து வணங்கினார்கள். தருமகுத்தன் அவர்களுடன் தன்னகரத்திற் பிரவேசித்துக் குடிகளெல்லாங் கூடி வாழ்த்தப் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு பிரதோஷ பூஜையின் பலத்தால் சகல வைபவங்களோடும் அரசாட்சி செய்து வாழ்ந்திருந்தான்.

உ

சிவமயம்.

ஐந்தாவது

சோமவாரவிரதமகிமை.

——(०)——

நைமிசாரணிய வாசிகளே! சனிப்பிரதோஷமகிமையை ஒருவாறு சொன்னோம்; இனிச் சொல்வதையுங் கருத்தாய்க் கேளுங்கள்:—

பிறவித்துன்பம் நீங்கி அழியாத முத்தியின்பம் அடைய வேண்டினோர், சச்சிதானந்த நித்தியபரிபூரண அகண்டாகார சிவதத்துவத்தின் நிலைமையைச் சற்குரு கடாக்ஷத்தினா

னுணர்ந்து சுத்தநிலையில் நிற்றல்வேண்டும். அது கூடாதாயின், மண், பெண், பொன் ஆசைகளைத் துறந்து மனதைப் பஞ்சேந்திரியங்களிற் செல்லவொட்டாது நிறுத்தி, வேதாகம விதிப்படி சிவபூஜை செய்யல்வேண்டும். அப்படிக்கன்றி, விஷயாதிகளுடன் கூடினபோதிலும், சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை இடைவிடாது சிந்தித்திருக்கும் அன்பர்கள் இம்மை மறுமை யின்பங்களை யனுபவித்து அப்பால் முத்தியடைவார்கள்.

இம்மை யின்பங்களாகிய போகாதிகளின் இச்சை யொழியாதவர்கள் முத்தி யடையவேண்டுமானல், சிவபூசையினுலன்றி வேறுவிதத்தாற் கூடாது.

சிவபூஜையினும், வேதசிவாகமங்களில் விதித்த சோமவாரபூசையே அதிகமாம். சோமவார பூஜையாவது, திங்கட்கிழமைதோறும் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு உபவாசமாயிருந்து அஸ்தமனவேளையில் பரமசிவனைப் பார்வதி தேவியாருடன் எழுந்தருளப்பண்ணி அவருக்குச் சிவாகமவிதி தவறாமற்செய்யும் பூஜையாம். இந்தப்பூஜை காளையர்கள், கன்னிகைகள், இல்லறம்பூண்ட புருஷர்கள், ஸ்திரீகள், சுமங்கலிகள், அமங்கலிகள் ஆகிய யாவரும் செய்தற்குரியது. அன்போடு இச்சோமவார பூஜையைச் செய்பவர்கள் துன்பம் நீங்கி இஷ்டகாமிய சித்திகளை அடைவார்கள். இப்பூஜை புரிந்து பேறு பெற்றோர்களுடைய சரித்திரம் அனந்தமுள. அவற்றுள் சீமந்தினி பூஜைபுரிந்த கதையைச் சொல்லுகிறோம்:—

29

ஆரியவர்த்தநாட்டிலே சித்திரவர்மன் என்னும் அரசன் ஒருவனிருந்தான். அவன் தனக்குப் புத்திரர்க ளிருந்தும் புத்திரியில்லாமையால் வருந்தித் தவஞ்செய்ய ஓர் புத்திரியும் பிறந்தாள். அதுகண்டு அரசன் ஆநந்தங்கொண்டு அவளுக்குச் சீமந்தினியென்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தான். ஒருநாள் அரசன் சோதிடசாஸ்திரத்தில் வல்ல பண்டிதர்களை வரவழைத்துத் தன்மகளுக்குச் சாதகம் எழுதும்படிச்சொல்ல, அவர்களிலொருவன், கிரகநிலைகளை ஆராய்ந்து பார்த்து, 'அரசனே! உன்மகள் பதினாயிரம் வருஷம் கணவனோடு வாழ்ந்திருப்பாள்' என்றான். அரசன் அதுகேட்டு மனமகிழ்ந்து அவனுக்கு மிகுந்த திரவியங்களைக் கொடுத்தனுப்பிச் சிம்மாசனமாகவிருக்கையில், மற்றொரு ஜோசியன் 'மன்னனே! உன் புத்திரி பதினாலாம் வருஷத்தில் மாங்கலியம் இழப்பாள்' என்று சொன்னான். சொல்லவே, அரசன் மூர்ச்சை யடைந்து ஆசனத்தின்மேல்விழுந்து, இரண்டுநாழிகை பரியந்தம் சோர்ந்திருந்து, பின்பு ஒருவாறு தெளிந்து, ஜோசியர்களை யனுப்பிவிட்டு, சீமந்தினி எப்படிநடக்குமோ பார்ப்போமென்றிருந்தான்.

அப்பால் ராஜகுமாரத்திக்கு மங்கைப்பருவம் வர, அவளுடைய தோழியர்கள் அவளிடத்திற்கு வந்து, 'அம்மா! நீ பதினாலாம் வருடத்தில் மாங்கலியம் இழந்துவிடுவா யென்று சோதிடர்கள் உன் பிதாவுக்குச் சொல்லி யிருக்கிறார்கள்' என்றார்கள். அவள் அதைக் கேட்டுத் துக்கித்து, யாக்கிய வற்கமுனிவர் பத்தினியாகிய மயித்ரேயி யென்பவ ளிருக்கும் பன்னசாலைக்குப்போய், அம்மாதைத் தொழுது, தனக்கு நேரப்போகிற துயர் நிலையைச் சொல்லித் 'தாயே! இது

நீங்குமாறெனக்கருளிச்செய்ய வேண்டும்' என்று பிரார்த்திக்க, அந்த அம்மாள் 'ராஜ கன்னிகையே! சோமவாரத்தில் பரிசுத்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து, உணவொழித்து, ஒருவருடனும் பேசாமல், மலர்களை ஆய்ந்துகொண்டு வந்து, பரமசிவனையும் பார்வதி தேவியாரையும் விதிப்படி பூசை செய்து, விரதம் அநுஷ்டித்தால் உன் துன்பம் நீங்கிவிடும்; இது நிச்சயம்' என்று சொல்லச், சீமந்தனி விடைபெற்றுத் தன் மாளிகையைச் சேர்ந்து, சோமவார விரதத்தைக் கிரமப்படி யநுஷ்டித்து வந்தாள்.

அந்நாளில் அரசன் அவளை நளச்சக்கிரவர்த்திக்குப் பேரனாகிய சந்திராங்கதன் என்பவனுக்கு விவாகஞ் செய்து கொடுக்க அவனுடன் கூடிச் சுகித்திருந்தாள்.

இங்ஙன மிருக்கையில், ஒருநாள் சந்திராங்கதன் தன் தோழர்களோடும் யமுனை யாற்றங் கரைக்குச்சென்று விதிவசத்தால் அங்கிருந்த தோணியிலேறி, அதை ஆற்றிலே விரைவாய்ச் செலுத்தினான். அவ்விரைவினாலும், தோணியில் சனங்கள் நெருங்கினதினாலும், அலைகள் மோதினதினாலும், தோணி கவிழ்ந்து அதிலிருந்தவர்களெல்லாம் ஆற்றில் விழுந்து முதலைகளுக் கிரையானார்கள். சந்திராங்கதன் மட்டும் முன் ஜனனங்களிற் செய்திருந்த பூசாபலத்தால் தப்பி, ஓர் பிலத்தின் வழியாய்ச் சென்று, நாகலோகத்திலிருக்கும் ஒரு நதிக்கரையைச் சேர்ந்தான். அந்த நதியில் விளையாடிக்கொண்டிருந்த நாககன்னியர்கள் அவனைக்கண்டு ஆச்சரியங்கொண்டு அழைத்துப்போய்த் தங்களரசன்முன்னே

விட்டார்கள். சந்திராங்கதன் நாகராசனைக்கண்டு தொழுது நிற்க, நாகராசன் அவனுடைய வரலாறுகளை விசாரித்தான். சந்திராங்கதன் தான்பிறந்து வளர்ந்ததும், சீமந்தனியை விவாகஞ் செய்ததும், தோழரோடு தோணியேறி ஆற்றிற்சென்றதும், தோணிகவிழ்ந்ததும், தான்மாத்திரம் தப்பிவந்ததும் ஆகிய இவையெல்லாம் விவரமாய்ச் சொன்னான். நாகராசன் கேட்டு ஆச்சரியமுற்று 'அரசனே! நீங்கள் தொழுங்கடவுள் யாவர்' என்று வினாவ, சந்திராங்கதன் சொல்லுகிறான்:—

'யாவ னொருவன் எவ்வுயிரும் எல்லாவுலகுங் கருவுடையான்
யாவ னொருவன் விட்புலோர்க் கெல்லாம்இறைமைபூண்டுள்ளான்
யாவ னொருவன் திரிபுரமும் எரியக் கனகச் சிலைகுனித்தான்
யாவ னொருவன் விடம்நுகர்ந்தான் அவனேயெங்கட்கிறையோ
[னே.'

'ஆரணந் தனக்கு முன்னே ஆரண மாகி மன்னும்
காரணங் களுக்கு முன்னைக் காரண மாகித் தோன்றும்
பூரண வெளிகட் கெல்லாம் பூரண வொளியாய் நின்று
நாரணன் உணர்கி லாத நாதன்யாம் உணரும் நாதன்.'

'கங்கையை முடியிற் சூடிக் கவுரியைப் பாகம் வைத்தாய்
பொங்கர வங்கள் தம்மைப் புரிகுழை யணிந்து பாதச்
செங்கம லத்தை வேதச் சிரத்தினில் இருத்தித் தேவர்
அங்கைகள் கூப்ப நின்ற எவ்வெமை அளிக்குந் தேவே.'

'சகல ஆன்மாக்களையும், சகலலோகங்களையும் தமக்கு உடைமைப்பொருளாகப் பெற்றுத் தாம் உடையவரா யிருப்பவர் எவரோ, தேவர்களுக் கெல்லாந் தேவராய் மகாதேவ

ரென்றும் பெயர் பெற்றவர் எவரோ, திரிபுரங்களும் வெந்து நீறாய்விழும்படி பொன்மலையாகிய மகமேருவை வில்லாக வளைத்துப் பாணப்பிரயோகஞ் செய்தவர் எவரோ, அமரர்களெல்லாம் அஞ்சியோடும்படி அதிபயங்கரமாய் வந்த ஆலகால விஷத்தை அருந்தி, அவர்களுடைய அச்சந்தவிர்த்தருளிய ஆபத்சகாயர் எவரோ, அவரே எங்கள் தெய்வம்.

'வேதங்களுக்கெல்லாம் மூலவேதமாயும், காரணங்களுக்கெல்லாம் அனாதி காரணமாகியும், சோம சூரிய அக்கினி என்று சிறந்த வொளிகளுக்கெல்லாம் ஒளியைக்கொடுக்கும் பூரணவொளியாயும் இருந்து, விஷ்ணுவினாலும் அறியப்படாத ஸ்வாமி எவரோ, அவரே நாங்கள் தியானஞ்செய்யும் ஸ்வாமி.'

'கங்கையைத் தமது திருமுடியில் தரித்து, பார்வதி தேவியாரைத் தம்முடைய இடப்பாகத்தில் வைத்து, சர்ப்பங்களைக் குண்டலங்களாகத் தமது இருசெவிகளில் அணிந்து, தமது திருவடித்தாமரைகளை வேதசிரசுகளின்மேல் வைத்து, சகலதேவர்களும் கைகூப்பி நின்று தம்மைத் தொழும்படி வீற்றிருந்தருளும் பெருமான் எவரோ அவரே எங்களை ரக்ஷிக்கும் பெருமான்.'

என்று சொல்லக்கேட்டு நாகராசன் மிகவும் சந்தோஷமடைந்து 'ராசகுமாரனே! நீ சிறியவனாயிருந்தும் பரமசிவனுடைய பெருமைகளை மிகவும் தெளிவாகச் சொன்னாய். நான் உனக்குச் சொல்லுவ தொன்றுண்டு. அஃதென்னவெனில், என்னூரெல்லாம் மாணிக்கமயமாயுள்ளது. இங்குள்ள நாகமகளிரோ அரம்பாஸ்திரீகளையொத்தவர்கள். ஜலமோ அமிர்தம்

போன்றது. சோலைகள் கற்பகச்சோலைகளேயாகும். இங்கிருப்பவர்களை நரையுந் திரையும் பொருந்தாது. இயமதூதரும் இவ்விடத்திற்கு வாரார்கள். ஆதலால் நீ இங்கேதானே யிருத்தல்வேண்டும்' என்றான். ராஜகுமாரன் 'ஐயா! நீர் சொல்வதெல்லாம் சரிதான். என்பிதாவுக்கு நான் ஒரே புத்திரன். என்மனைவியும் சிறியவள். இதுவுமல்லாமல், ஆற்றில் தோணி கவிழ்ந்ததனால் நான் இறந்தேனென்று நினைத்து அவர்கள் எப்படி வியசனப்படுகிறார்களோ அறியேன். ஆதலால் நான் என்னூருக்குப்போகவே வேண்டும். உத்தரவு கொடுப்பீர்' என்று கேட்க, நாகராசன் சம்மதித்து, ராஜகுமாரனுக்கு வஸ்திராபரணமுதலிய வெகுமதிசெய்து, அவைகளை யெடுத்துக்கொண்டுபோக ஒருநாகதூதனையும், ராஜகுமாரனுக்குத் துணையாக வேறொரு நாகராசனையும் கூட்டி, ஏழுகடலையும் ஒரு நிமிஷத்தில் கடந்துபோம்படியான வேகத்தையுடைய ஒரு குதிரையையுங் கொடுத்து ஏறிச்செல்லும்படி யனுப்பினான். ராசகுமாரன் வணங்கி விடைபெற்றுக் குதிரையை விரைவாகச் செலுத்திக்கொண்டுவந்து, யமுனையாற்றங்கரையைச் சேர்ந்தான். இது நிற்க.

சந்திராங்கதன் தோழர்களுடன் ஏறிச்செலுத்திய தோணி கவிழ்ந்துபோன செய்தியை அவன் மாமனாகிய சித்திரவர்மனும் அவன் புத்திரர்களுங் கேள்விப்பட்டு அலறிக்கொண்டு ஆற்றங்கரைக்கோடிவந்து பார்க்கும்போது ஒருவரையுங்காணாமையால் எல்லோரும் ஆற்றில் அமிழ்ந்து இறந்தார்களென்று துணிந்து அழுது புலம்பினார்கள். சீமந்தனிக்கும் இந்தச்சமாசாரம் எட்டினவுடனே அவள் புரண்டு புரண்டழுது 'தீயில்

விழுந்து நானும் இறந்தாலன்றி என் துயரந் தீராது' என்றாள். அப்போது, அவள் தகப்பன் வந்து பலவாறு தேற்ற, ஒருவாறு தெளிந்து 'இனிப் பரமசிவனைப் பூசைசெய்து கொண்டிருப்பதே கடமை' யென்று துணிந்திருந்தாள்.

இந்தச் செய்திகளையெல்லாம் சந்திராங்கதனுடைய தகப்பனாகிய இந்திரசேனனும், தாயார் முதலானவர்களும், நிடததேசத்தா ரெல்லோருங்கேட்டு, மிகுந்ததுயரம் அடைந்தார்கள். பகைமன்னர்கள் இதுதான் நல்லசமயம் என்று படையெடுத்து வந்து போர்செய்து இந்திரசேனனையும் அவன் மனைவியையும் பிடித்துச் சிறைச்சாலையி லடைத்துவிட்டு நாட்டைத் தங்கள் வசப்படுத்தி ஆண்டுவந்தார்கள்.

முன்னே நாகலோகஞ்சென்று திரும்பி யமுனையாற்றங் கரையைச்சேர்ந்த சந்திராங்கதன் அங்கே குதிரையின்மே லிருந்தபடி விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது, அவன் மனைவியாகிய சீமந்தனி தோழிமாருடன் நீராடுதற்பொருட்டு யமுனையாற்றங் கரைக்குவந்து, ராஜகுமாரனைக் கண்டு மயங்கிநிற்க, அவன் சீமந்தனியைப் பார்த்து 'நீ யார்? உன் புருஷன் யாவன்? இப்போது நீ கைம்பெண்ணாகவிருக்கும் காரணம் என்ன? என்றுவினவ சீமந்தனி நாணித் தலையிறங்கி நின்றாள். தோழிகளிலொருத்தி நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னாள். பின்பு சீமந்தனி அரசனை நோக்கி, 'மன்னனே! எனக்கு நேரிட்ட துன்பம் முதலானவையை யெல்லாம் ஒன்றும் வழுவாமற் கேட்டீர். நீர் என்னை யறிவீரோ? நானும்மைக் கனவில் கண்டேன். நீர் யார்? ஒளிக்காமற் சொல்லும்' என்று

கேட்கச், சந்திராங்கதன் 'மாதே! நான் மனிதனல்லன். தேவர்களிலொருவன். இவ்வுலகமெல்லாம் ஒருநொடியில் சுற்றிவருவேன்,' என்று சொல்லி, அவள் கையைப்பற்றித் தன்னருகில் வரும்படி யழைத்து 'உன் கணவன் வேறோருலகத்திலிருக்கிறான். அவனுக்கு நான் பிராண சிநேகன். இரண்டு நாளைக்குள்ளே அவன் வந்து உன் துக்கத்தைத் தீர்ப்பான். இந்தச் செய்தியை யுனக்குச் சொல்லுவதற்காகவே வந்தேன். நான் சொல்வதை உண்மையாக நம்பு. இதை யாருடனுஞ் சொல்லாதே. இனி நான் என் தேசத்துக்குப்போய் என் தாய்தந்தையரைப் பார்க்கவேண்டும்' என்று சொல்லிவிட்டுக் குதிரையை வேகமாய்ச் செலுத்திக்கொண்டு போனான்.

பின்பு சீமந்தனி 'இவன்சொன்னதெல்லாம் மாயையோ! அன்றேல் நம்முடைய மனத்திலிருக்கும் மயக்கமோ! அல்லது சொப்பனமோ! இன்னதென்று நிச்சயிக்கக் கூடவில்லையே' என்று நினைத்துத் தோழிமார்களைப் பார்த்து, 'என்மனம் என் கணவனிடத்தன்றி மற்றொருவரிடத்திலும்பொருந்தாது. இப்போது நடந்ததையெல்லாம் யோசித்தால் இங்கு வந்துபோன மகாபுருஷன் என் புருஷனே யாகும். மயித்திரையம்மாள் சொன்னபடி சோமவாரத்திற் பரமசிவனைப் பூசித்து வருகின்றோமே, அந்தப்பலன் தான் கைகூடிவந்தது போலும். இதுவுமன்றி, முன்னம் ஒருசோதிடன் 'உன்குமாரத்தி பதினாயிரம் வருஷம் கணவனுடன் வாழ்ந்திருப்பாள்' என்று என் பிதாவுடன் சொன்னசொல்தான் உண்மையாயிற்றோ? நற்சகுனங்களும் உண்டாகின்றனவே. சிவன்செய லெப்படியிருக்குமோ?' என்று சொல்லி வருந்தினாள். தோழிமார்கள்

அவளைத்தேற்றி ஸ்நானஞ்செய்வித்து அரண்மனைக்கழைத்துக் கொண்டு போனார்கள்.

குதிரை யேறிச்சென்ற சந்திராங்கதன் நிடத நாட்டைச் சேர்ந்து ஒரு சோலையிலிறங்கி, இளைப்பாறின பின்பு, தன்னுடன் கூடவந்த நாககுமாரனை அழைத்து 'நீ போய், யமுனையாற்றில் விழுந்த நான் பாதாளலோகஞ்சென்றதும் அங்கு நாகராசனால் வரம்பெற்றதும், இப்போது இங்குவந்திருப்பதுமாகிய இவைகளை யெல்லாம் எனனுடைய பகைவர்களுக்குத் தெரிவித்து 'நீங்கள் என்பிதா முதலானவர்களையும் சிறைவிடுவித்து என்தேசத்தை எனக்கே விட்டுவிடுவீர்களாயின் உயிர்தப்புவீர்கள். இல்லாவிடின், உங்களை மண்ணுலகத்தினின்றும் விண்ணுலகத்துக் கனுப்பவருகிறேன்' என்று நான் சொன்னதாகச் சொல்லிவா' எனக்கட்டளையிட்டனுப்பினான். அவன்போய் இதையெல்லாஞ் சொல்லவே, பகைமன்னர்கள் பயந்து, இந்திரசேனன் முதலானவர்களைச் சிறைநீக்கிவிட்டுத் தத்தம் நகரம்போய்ச் சேர்ந்தார்கள்.

இந்திரசேனன் தன்மகன்வந்த செய்தியைக் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்து புத்திரனை அழைத்துவரும்படி மந்திரிமார்களை யனுப்பினான். அழைக்கப்போன மந்திரிமார்களுடன் சந்திராங்கதன் வந்து தன்பிதாவின் பாதத்திற்பணிந்தான். இந்திரசேனன் தன்மகனை யெடுத்து மார்போடணைத்து 'என்னையனே! ஆற்றில்விழுந்த நீ எப்படியானாயோவென்று ஏங்கியிருந்தோமே. சிவகிருபையினால் தப்பிப்பிழைத்து வந்தாயா?' என்றுசொல்லி முத்தமிட்டுக் கரையற்ற களிப்பின் பெருக்கில் மூழ்கினான். பின்பு சந்திராங்கதன் தாயாரைக்கண்டு அவளு

டைய துக்கத்தைநீக்கி அளவிறந்த சந்தோஷத்தை யுண்டாக்கினான். சந்திராங்கதன்வந்து சேர்ந்தசெய்தியைக் கேட்டுப் பெற்றோரேயன்றி மற்றோரும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். இந்திரசேனன் தன்மகனை நோக்கி 'அப்பா! நீ நதியில் விழுந்தபின்பு நடந்ததையெல்லாஞ் சொல்'என்றுகேட்க, சகலமும் விவரமாகச்சொல்லி நாகராசன் தனக்கு வெகுமதி செய்த பொருள்களையெல்லாம் பிதாவின்முன்னே வைக்கப், பிதா அவைகளைப் பார்த்து அகமகிழ்ந்து அப்பொழுதே திருமுகமெழுதித் தூதர்கையில் கொடுத்து 'நீங்கள் சித்திரவன்மராசனிடத்திற்குப் போய், என்குமாரன் வந்த செய்தியைச் சொல்லி துக்கநிவர்த்தி செய்யுங்கள்' என்றனுப்பினான். அவர்கள் அந்தத்திருமுகத்தைக் கொண்டுபோய்க் கொடுக்கவே சித்திரவன்மன் வாங்கிப்படித்துத் தன்மருமகன் பிழைத்து வந்த செய்தியைக் கண்டு பேரானந்தங்கொண்டு, தன்மகளை வரவழைத்து 'அம்மா! நீ பரமசிவனைப் பூசித்தபலத்தினால் உன் கணவன் பிழைத்துவந்தான்' என்றுசொல்ல அவள் சந்தோஷசாகரத்தில் மூழ்கினாள். பின்பு சித்திரவன்மன் தன்மகளுக்கு மங்கலதீர்த்த ஸ்நானஞ்செய்வித்து விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் அணிவித்து சகலவைபவங்களுடன் அழைத்துக்கொண்டு நிடத நாட்டுக்குச் சென்றான். இங்ஙனம் சித்திரவன்மன் வருவதை இந்திரசேனன் அறிந்து மந்திரிபிரதானிகளுடன் எதிர்கொண்டு வந்து, தன் அரண்மனைக்கு அழைத்துப்போனான். அப்போது சந்திராங்கதன்வந்து தன் மாமனாருடைய பாதத்திற்பணிய, அவனையெடுத்து மார்போடணைத்துக்கொண்டு, 'நீ உயிர்பிழைத்து வந்தது இந்தச்சீமந்தனி உயி

ரும் எங்களுயிரும் பிழைத்து வாழும்படிக்கேயன்றி வேறல்ல என்று சொல்லிச் சந்தோஷமடைந்தான்.

அதன்பிறகு சோதிடர்களை வரவழைத்துச் சுபமுகூர்த்தம் ஒன்று நியமித்து, அந்தத்தினத்தில் சீமந்தனியைச் சந்திராங்கதனுக்கு மறுமணஞ்செய்வித்தார்கள். அது நிறைவேறினவுடன், சித்திரவன்மன் தன்னகரம்போய்ச் சேர்ந்தான். சந்திராங்கதன் சீமந்தனியுடன் இன்பமனுபவித்துக் கொண்டிருக்கும் நாளில், அவன்பிதா, உலக இன்பங்களில் வெறுப்படைந்தவனாய் மகனுக்கு முடிசூட்டி, இராச்சியத்தை அவன்வசம் ஒப்புவித்துவிட்டு, வனத்திற்சென்று தவஞ்செய்துகொண்டிருந்தான். சந்திராங்கதன் செங்கோல்தவறாமல் நீதிசெலுத்தி அரசாட்சிசெய்து எட்டுப்புத்திரர்களையும் ஒரு புத்திரியையும் உடையவனாய்ப் பதினாயிரம் வருஷம் குறைவில்லாமல் வாழ்ந்திருந்தான்.

சோமவாரவிரதமகிமைதொடர்ச்சி.

சீமந்தனிபாவனை பெற்ற அத்தியாயம்.

வைதர்ப்ப நாட்டில் வசித்திருந்த வேதமித்திரன், சாரஸ்வதன் என்னும் இரண்டு பிராமணர்களுக்கும் சுமேதா, சாமவான் என்று இரண்டுபுத்திரர்களிருந்தார்கள். அவர்களிருவரும் வேதாகமபுராண சாஸ்திரங்களை யெல்லாங் கற்றுணர்ந்து வல்லவர்களானதைப் பிதாக்கள் கண்டு மகிழ்ந்து,

 34

'புத்திரர்களே! நீங்கள் நம்மரசனிடத்திற் சென்று உங்கள் கல்வித்திறத்தைக் காட்டி வியப்பித்துப் பரிசுபெற்று வந்து விவாகஞ் செய்துகொள்ளுங்கள்' என்று சொன்னார்கள். அவர்கள் அங்ஙனமே சென்று பிரசங்கிக்க, அரசன் அவர்களை மெச்சி 'உங்களுக்குவேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்றான். பிராமணப்பிள்ளைகள் 'அரசனே! நாங்கள் விவாகஞ்செய்துகொள்ள உத்தேசித்து உம்மிடம் வந்தோம். ஆதலால் அதற்குப் போதுமான திரவியம் கொடுக்கவேண்டும்' என்ன, அரசன் நகைத்துப் 'பிராமணர்களே! விதர்ப்பதேசத்தரசன் மனைவியாகிய சீமந்தனி யென்பவள் சோமவாரந்தோறும் பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் பூசைசெய்து வருகின்றாள். அதுவன்றியும் அத்தினத்தில் பிராமணர்களைப் பத்தினிசகிதராய் வரவழைத்து அவர்களைப் பார்வதி பரமேசுவரராகப் பாவித்து அருச்சனைசெய்து அவர்களுக்குவேண்டிய பொருள்களையுங் கொடுத்து வருகிறாள். ஆதலால் உங்களிலொருவன் பெண்வேடந்தரித்துப் புருஷனும் ஸ்திரீயுமாக அவளிடம் சென்றால், வேண்டும் பொருள்பெற்று வரலாம். அப்படியே போய்ப் பெற்றுவந்து விவாகஞ்செய்துகொள்ளுங்கள்' என்று சொன்னான். பிராமணப்பிள்ளைகள் 'ஐயையோ! வேதசாஸ்திரமறிந்த நாங்களிந்த வஞ்சகஞ்செய்யலாமோ? இது தகாத காரியமாயிற்றே' என்ன, அரசன் கோபங்கொண்டு 'நான் சொன்னபடி செய்யீர்களாயின் உங்களுக்குத் தகுந்த சிக்ஷை செய்விப்பேன்' என்று பயமுறுத்தினான். அதனாலவர்கள் 'அப்படியே செய்கிறோம்' என்று ஒத்துக்கொண்டார்கள். அரசன் சந்தோஷப்பட்டு அலங்காரஞ் செய்யுந்தொழிலில் வல்லவர்

களை யழைப்பித்து 'இந்தச் சாமவானுக்குப் பெண்வேடந் தரியுங்கள்' என்று ஆஞ்ஞாபிக்க, அவர்கள் அவனை ரம்பையைப் போல் அழகுள்ள ஸ்திரீயாகச் சிங்காரித்துக் கண்டவர்கள் மயங்கும்படி செய்தார்கள். அரசன் பார்த்து 'நன்றாயிருக்கிறது. போய்வாருங்கள்' என்று சொல்லி யனுப்பினான்.

அவர்களிருவரும் சீமந்தனி யிடத்துக்குத் தத்தம் பத்தினிகளோடும் செல்லுகின்ற பிராமணர்களோடு கலந்துபோய் அரண்மனையைச்சேரச் சீமந்தனி கண்டுமகிழ்ந்து அவர்களை அழைத்துக் கொண்டுபோய், மற்றப் பிராமணர்களுடன் ஆசனத்திலிருத்தினாள். பின்பு சகல பிராமணர்களையும் அவர்கள் பத்தினிமாருடன் பூசைசெய்து வரும்போது, இவர்களிடத்திலும் வந்து இவர்கள் முகத்தைப்பார்த்து, இவ்விருவரும் ஆண்மக்கள் என்றறிந்து, சற்று வருத்தப்பட்டு, வேடத்துக்கேனும் பூசிக்கவேண்டியதே நமது கடமையென்று, அவர்களைப் பரமசிவனும் பார்வதிதேவியுமாகப் பாவித்துக் கிரமப்படி பூசைசெய்து வஸ்திராபரணாதிகளும் திரவியமும் வேண்டியமட்டுங் கொடுத்தனுப்பினாள்.

சீமந்தனி சோமவாரதினத்தில் பார்வதியும் பரமேஸ்வரனுமாகப் பாவித்துப் பூசித்த பலத்தினாலே பெண்வேடம் பூண்ட சாமவான் யதார்த்தமாய்ப் பெண்ணேயாய்க் காமமீறித் தன்னோடு வந்த சுமேதாவைத் தன்னை யணையும்படி வருந்திக் கேட்டான். சுமேதா 'இதென்ன புதையலெடுக்கப்போன இடத்தில் பூதம் புறப்பட்டாற்போலாயிற்றே! என்று திடுக்கிட்டுச் சந்தேகமுற்று நிற்கப், பெண்ணுருவடைந்த சாமவான் தன் அவயவக்குறிகளைக் காட்டிச் சந்தேகந்தீர்த்துத் தன்னைப்

புணரும்படி மிக நிர்ப்பந்தஞ் செய்தான். சுமேதா 'இது தகாத காரியம்' என்று பலவிதங்களா லெடுத்துக்காட்டியும், சாமவான் கேளாமல், அவனை வலிதிற்புணர்ந்து தன்காமத்தை நீக்கிக்கொண்டான். சுமேதா வருத்தத்தோடும் அவனை அழைத்துக்கொண்டுபோய்த் தன் ஊர்சேர்ந்து தகப்பனிடத்தில், அரசன் கட்டளைப்படி தாங்கள் வேடமாறிச்சென்றதும், சீமந்தனி தங்களை ஸ்திரீபுருஷராகப் பாவித்துப் பூஜைசெய்ததும், அதனால் சாமவான் பெண்ணாய்விட்டதுமாகிய எல்லாச்செய்தியையும் சொல்லி முறையிட்டு அழுதான். அதை அவன் சாமவானுடைய தகப்பனிடத்திற் சொல்ல அவன் மிகுந்தகோபங் கொண்டு, உடனே அரசனிடத்திற் சென்று, நடந்தவைகளைச் சொல்லி, 'அரசனே! மன்னவர்களிடத்தில் யாசகர்கள் பொருளை விரும்பிவரில் கொடுக்கவிருப்பமிருந்தாற் கொடுக்கவேண்டும். இல்லையாயின் யாதேனுமோர் காரணங்காட்டி யனுப்பிவிடவேண்டும். அப்படிச் செய்யாமல் உலோபகுணத்தினாலும் கபடத்தினாலும் இரப்பவர்களைத் துன்பத்துக்குள்ளாக்குதல் மன்னவர்களுக்கு முறைமையோ? என் புத்திரனுக்கு இப்படிக்கொத்த தீமையை உண்டாக்கி யென்னை நரகத்துக் காளாக்கினையே. இந்தக் கோரத்தைப் பார்த்துப் புலம்பிக்கொண்டு இனி நானும் என்மனைவியும் உயிரோடிரோம். உலகத்தாரெல்லோரும் உன்னை நிந்திக்கும்படி உன் முன்பாகவே இறந்து பழிவாங்குகிறோம்' என்றான்.

இப்படிப் பிராமணன் சொல்லியவார்த்தை அக்கினியிற் காய்ச்சிய நாராசம்போல் அரசனுடைய செவியிற் புகுந்து வருத்த அவன் தியக்கமும் நடுக்கமுமுற்று முனிவர்கள் கூட்டத்

திற்சென்று நடந்த செய்தியைச்சொல்லி இப்போ இந்தப் பிராமணப்பிள்ளையின் பெண்வடிவு நீங்க யான்செய்யவேண்டியது யாதென்றுகேட்க, அப்போதங்கிருந்த பாரத்துவாச முனிவர் 'அரசனே! நீ பார்வதிதேவியாரைத் தியானித்தால் இந்தப் பாவந்தொலைந்துபோம்' என்று சொல்லி உமாதேவியின் பீஜாக்ஷரத்தையும் உபதேசித்தருளினர். அரசனுடனே உமாதேவியாருடைய சந்நிதிக்குச்சென்று ஐம்பொறிகளையும் அடக்கி மூன்றுநாள் வேதாகம நியமப்படியே பூசைசெய்தான். தேவி திருவுளமகிழ்ந்து மூன்றாநாளிரவில் தரிசனங்கொடுத்தருள, அரசன் பேரானந்தங்கொண்டு பலவாறு புகழ்ந்து ஸ்தோத்திரஞ்செய்து 'தாயே! என் துயரம் தீருமாறு அருள் செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தான். தேவி 'நீ விரும்பியது என்ன' என்றுகேட்க, அரசன் 'அன்னையே, இப்போது இந்தப்பிராமணப்பிள்ளை பெண்ணுருவம் நீங்கி முன்போல் ஆணுருவெய்தும்படிக்குக் கிருபை செய்யவேண்டும்' என்றான். பார்வதிதேவியார் 'அரசனே! கோடிவருஷம் தவஞ்செய்தாலும் என் அன்பர்கள் நினைத்த பாவனையை யொழிக்க எம்மிறைவராலு மாகாது. ஆதலால் வேறே வரங்கள் கேள்-தருகிறேம்' என்றருளிச்செய்ய, 'இந்தப்பிராமணன் புத்திரனின்றி வருந்தாவண்ணம் இவன் மனைவியிடத்து வேறோர் புத்திரனுண்டாகும்படியேனும் அருள்செய்யவேண்டும்' என்று வேண்டிக்கொள்ள, அம்பாள் அப்படியே அநுக்கிரகித்து, பெண்ணுருவடைந்த பிராமணப்பிள்ளைக்குச் சாமவதியென்று பெயரிட்டு, அவளைச் சுமேதாவுக்கே விவாகஞ் செய்விக்கும்படித் திருவாய்மலர்ந்தருளித் திருக்கோயிலுக் கெழுந்தருளினர்.

அரசன் பெருமகிழ்ச்சியடைந்து மகாதேவியின் கட்டளைப்படியே சாமவதிக்கும் சுமேதாவுக்குங் கலியாணஞ் செய்வித்து நீதிதவறாமல் செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தான். பெண்ணுருவான தன் புத்திரனைக் குறித்துத் துன்பமடைந்த பிராமணனும் அவன் மனைவியும் தங்கள் துயரந்தீர வேறோர் புத்திரனைப்பெற்று அவன் கல்வி கேள்விகளில் வல்லவனாயிருக்கக்கண்டு மகிழ்ச்சியடைந்திருந்தார்கள்.

உ

சிவமயம்.

ஆறாவது

சிவயோகிமகிமை.

அவந்திதேசத்திலே மந்தரன் என்றொரு பிராமணனிருந்தான். அவனுக்கு மிகுந்த திரவியமிருந்தமையால், அவன் அச்செல்வச் செருக்கினால், நித்திய கர்மாநுஷ்டான செபதபங்களாகிய தன்குலத்துக்குரிய கருமங்களை யெல்லாம் விட்டு அற்பபுத்தி யெய்திக் காமவெள்ளத்தில் மூழ்கினவனாய் இழிகுலஸ்திரீகளைப் புணர்ந்தும், மதுமாமிசங்களைப்புசித்தும், யாவருந் தூஷிக்கும்படி நடந்துவருகிற நாளில், ஒருநாள் மகாதபசியாகிய விடபர் என்னும் ஓர் சிவயோகி அவன் வீட்டுக்கு வந்தார். வரவே, மந்தரனும் அவனுடைய காமக்கிழத்தியர்களில் அவனுக்கு அதிவிருப்பமுள்ளவளாகிய பிங்கலை யென்பவளும் எதிர்சென்று வணங்கி அவரை உபசரித்து, அழைத்து

வந்து, ஆசனத்திருத்திப், பாலும் பழமுங் கொடுத்து, அன்றிரா முழுதும் அவருடையபாதங்களை வருடிக்கொண்டிருந்தார்கள். உதயகாலத்திற் சிவயோகியாரெழுந்து போய்விட்டார்.

மந்தரனும் பிங்கலையும் முன்போல் கூடிக்குலாவிச் சிலகாலம் வாழ்ந்திருந்து முன்னும் பின்னுமாக இறந்துபோனார்கள். அவர்களில், பிராமணன் தசார்ணநகரத்தை யாளும் வச்சிரவாகு மகாராஜாவின் மனைவியாகிய சுமதியென்பவளுடைய வயிற்றிற் கருவாய்ப் பொருந்தினான். அரசனுடைய மற்றமனைவியர்கள் அழுக்காறு பொறாமை கொண்டு, அவளைக் கொல்ல நினைத்து ஆகாரத்தில் விஷத்தைக் கலந்து கொடுப்பித்தார்கள். அவள் அதை யறியாமல் வாங்கி உண்ணவே அவ்விஷவேகம் வயிற்றிற்சென்று நெருப்புப்போல் பற்றியெரிய அவளுருவங்கரிந்து, உடல் முழுதும் பலவித பிணிகளுண்டாயின. இப்படிக்கெல்லாம் சம்பவித்தும், ஆயுள் பலத்தால், இறவாமல், பரமசிவனுடைய கிருபையினால் ஓர் புத்திரனையும் பெற்றாள்.

உள்ளும் புறம்பும் விஷத்தின் கொடுமை தாக்கப்பெற்ற அவ்வரசியும் அவள்வயிற்றில் அதன் வேகத்தினூறிய சிசுவும், சகிக்கக்கூடாத பெருந்துன்பத்தினால் எந்நேரமும் அழுது கொண்டிருந்தார்கள். அதனால் அரசன் துயரமடைந்து வைத்தியர்களை யழைப்பித்து அவர்கள்படுந் துன்பநோய்க்குப் பரிகாரஞ்செய்யும்படி உத்தரவுசெய்ய, அவர்கள் தங்களால் கூடிய சிகிச்சைகள் செய்தும் பிணி நீங்காமல் அதிகப்பட்டதால் 'இது எங்களால்தீருகிற வியாதியல்ல' என்று சொல்லிப்போய்

விட்டார்கள். இளைய மனைவியரிடத்து அன்புமிகுந்த அரசன் மூத்தமனைவியும் புத்திரனும் படுகிற வேதனையைக் கண்டு வெறுப்புள்ளவனாய், 'இவர்கள் மகாபாபிகள். நரகசேஷத்தை யநுபவிக்கப் பிறந்து நம்மிடம் சேர்ந்தார்கள். நோயால் இவர்கள் இறப்பதுமில்லை, நோய்நீங்கிச் சுகப்படுவதுமில்லை. இவர்களழுகையால் நித்திரையுங் கெட்டுப்போகிறது. ஆதலால் இவர்களிருவரையுங் காட்டிற்கொண்டுபோய் விட்டுவிடும்படி திட்டஞ்செய்வதே கருமம்' என்று துணிந்து தேர்ப்பாகனுக்கு ஆக்ஞாபிக்க, அவன் அவர்களைத் தேர்மேலேற்றிக் கொண்டு போய் நிர்மானுஷியமான நடுக்காட்டில் விட்டுவந்தான்.

சுமதியம்மை அந்தக் கொடுங்காட்டில் வழி தெரியாமல் பசி, நோய், வெயில் முதலியவற்றால் ஆற்றொணாத் துயரமடைந்து, தன்கணவன் செய்தகொடுமையை நினைந்து நினைந்தழுவாள், விதியை வெறுப்பாள், நொந்து சோர்வாள். மிகுந்த நோயால்வருந்தியழுகின்ற பிள்ளைக்குப் பாலூட்டுவாள், இப்படிச் சங்கடப்பட்டுக் கொண்டு பஞ்சினும் மிருதுவாகிய தன் பாதத்தில் உதிரம் பெருகும்படி நடந்து காட்டைக்கடந்து சென்று ஒருநகரத்தை யடைந்தாள். அந்நகரத்தில் அளவற்ற திரவியங்களைப் படைத்துள்ள பத்மாகரன் என்னும் பிரபல வர்த்தகன் ஒருவனிருந்தான். அவன் வீட்டில் பணிவிடை செய்யுந் தோழியர்கள் அநேகருண்டு. அவர்களிலொருத்தி சுமதியம்மையைக்கண்டு 'அம்மா! நீ ராஜஸ்திரீபோ லிருக்கின்றாய். நீயுன்புத்திரனோடு ஏழைகளைப்போல்சோர்வடைந்து இந்த வீதியில் வந்து பரிதவித்தற்குக் காரணம் என்ன' என்று கேட்டாள். சுமதி அழுதுகொண்டு 'அம்மா! என் விதியை

வென்னென்று சொல்வேன். என் சக்களத்தியார் செய்த வஞ்சனையால், இந்தக்கோலத்தோடு இங்கே வரலானேன்' என்று சொல்ல, அந்தத்தோழி ஓடிப்போய் தன்எஜமானுக்குத் தெரிவிக்க, அவன் தர்மசிந்தை யுடையவனாதலால் மனமிரங்கி வந்து பார்த்து, ராஜஸ்திரீயையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டுபோய் ஒரு பிராமணன் வீட்டிலிருத்தி வைத்தியர்களை யழைப்பித்து அவர்களுக்குவேண்டிய திரவியங்கொடுத்து 'இந்தஅம்மாள் என்தாய். இந்தப்பிள்ளை என்சகோதரன், இவர்களுடைய விஷரோகம் முறியும்படி தக்க ஔஷதாதிகள் கொடுத்துச் சௌக்கியப்படுத்துங்கள்' என்றுசொல்ல, அவர்கள் தங்களுக்குத் தெரிந்த ஔஷதாதி பிரயோகங்களெல்லாம் செய்துபார்த்தும் ஒன்றினாலும் நோய் தீராமல் அதிகப்பட்டுப் பிள்ளையிறந்துவிட்டது. அதுகண்டு சுமதி இடிவிழுந்த சர்ப்பம்போல் பூமியில் விழுந்து புரண்டு, அலறி அழுது தீராத் துக்கமடைந்தாள். அப்போது வர்த்தகனும் அயலிலுள்ள மற்றவர்களும் வந்து பலவாறுதேற்றியும் சுமதி அயர்வு நீங்கிலள்.

அந்தச்சமயத்தில் திரிகாலமுமுணர்ந்த ரிஷபர் என்னும் சிவயோகியார் அவ்விடம் வந்தார். பத்மாகரன் அவருடைய பாதங்களில் வணங்கிச் 'சுவாமீ! இந்த அம்மாளுடைய துயரத்தைத் தீர்த்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, சிவயோகியார் சுமதியைநோக்கி 'அம்மா! நீயேனிப்படி வருந்தவேண்டும்? பூமியிற் பிறந்தவர்களில் இறவாதவர் யார்? தோன்றி அழிவதில் மின்னலும், சரீரமும், செல்வமும் சரி. இவன் உன் வயிற்றிற் பிறக்கும்போது உன்னைக்கேட்டுவந்து பிறந்தானா? இல்லையே. அப்படியே, இப்போதும் சொல்லாமற்

போய்விட்டான். கூட்டில் பக்ஷிவந்து தங்குவதுபோலச் சரீரத்தில் ஆத்மா வந்து பொருந்துகிறது. அப்பக்ஷி கூட்டைவிட்டுப் பறந்து விடுவதுபோல, ஆத்மா சரீரத்திலிருந்து பிரிந்து விடுகிறது. இதைக்குறித்து அழுகிறதிற் பயனில்லை. யாராவது அழுது, இறந்தவர்களை மறுபடி பிழைப்பித்துக் கொண்டார்களா? விழித்திருக்கிறவன் நித்திரைகொள்வதுபோல் பிறந்திருக்கிறவன் இறந்து போகிறான். இதைக் குறித்து அழவேண்டாம்' என்று பலவாறு தேற்றினார். சுமதி, என்ன சொல்லித் தேற்றியும் சிறிதுந் துயர் நீங்காதவளாய், எழுந்து நின்று 'முனிவரே! என்புத்திரனுடன் நானும் இறந்தாலன்றி என் துயரந் தீராது. இறக்கும் சமயத்தில், மகாதபசியாகிய தேவரீருடைய கிருபாநோக்கமுங் கிடைத்தது. இனி யாதொரு தீவினையும் என்னை வருத்தாதென்பதிற் சந்தேகமில்லை' என்று சொல்லி உயிர்விடத் துணிந்தாள். சிவயோகியார் அதுகண்டு 'இறந்த இப்பிள்ளை யார்' என்று தமது ஞான திருஷ்டியால்நோக்கி, முற்பிறப்பில் தமக்கு உபசாரஞ்செய்த பிராமணனென் றுணர்ந்து, அவன்மீதுவைத்த அன்பினாலும், அவனை யெழுப்பிவிடில் அவனைப் புத்திரனாகப் பெற்ற இவளும் துன்பநீங்கி உயிர்தரிப்பாள் என்பது பற்றியும், காருண்ணியத்தினால் சிவபெருமானைத் தியானித்துத் திருநீற்றை யெடுத்து அவன் நெற்றியில் தரித்துப் பஞ்சாக்ஷரத்தையும் அவன்காதில் உபதேசித்தார். உடனே இறந்தபிள்ளை நித்திரை நீங்கினவன்போல் எழுந்தான். தாயார் புத்திரனைத் தழுவிக் கொண்டு பெருங்களிப்படைந்தான்.

பின்பு சிவயோகியார் திருநீறெடுத்து அந்தப் பிள்ளையினுடைய சரீரத்திலும் தாயாருடைய சரீரத்திலும் தரித்தார். உடனே அவர்கள் நோயெல்லாந் தீர்ந்து பொன்னிற மடைந்தார்கள். வர்த்தகன் முதலானவர்கள் அவ்வதிசயத்தைக்கண்டு களிப்படைந்து, பரமசிவனைத் தோத்திரஞ் செய்தார்கள். சுமதியம்மை, சிவயோகியாரைத் துதிசெய்து 'சுவாமி! இறந்த என் புத்திரனை எழுப்பி, யாவராலும் நீக்குதற்கரிய எங்கள் நோயையும் வருத்தத்தையும் தீர்த்த தேவரீருடைய பெருங் கருணைக்கு எளியேம் என்ன கைம்மாறளிக்க வல்லேம்?. தேவரீர் திருவடிகளே அடியேங்களுக் காதரவு' என்று சொல்லிப் புத்திரனுந் தானுமாக அவருடைய பாதத்தில் வீழ்ந்து பணிந்தாள். சிவயோகியார் அவர்களிருவரையும் தம்முடைய திருக்கைகளாலெடுத்து ஆசீர்வாதஞ்செய்து, இராச குமாரனுக்குப் 'பத்திராயு' என்று பெயரிட்டு 'இவன் இந்த வர்த்தகன் வீட்டிலேயே வளர்ந்து, சகலசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்து, பரமசிவனுடைய கிருபையால் கெடாத செல்வமும் நல்ல அரசாட்சியும் பெற்று, தேவர்களைப்போல் நெடுநாள் வாழ்ந்திருக்கக் கடவன்' என்றருளிச்செய்து, பின்னும் அந்தப் புத்திரனுக்கு வரத்தக்கவையெல்லாம் அவன் தாயுடனேசொல்லிவிட்டுத் தாம் வேறோரிடத்துக்குச் சென்றார்.

சிவயோகிமகிமை தொடர்ச்சி.

பத்திராயுவுக்கு ஆசியளித்த அத்தியாயம்.

சிவயோகியாருக்கு ஒரிராத்திரி முழுதும் பாதம்வருடிக் கொண்டிருந்த பிங்கலை யென்னுங் கணிகை மாது அந்தச்சிவ புண்ணிய பலத்தினாலே சந்திராங்கதராஜன் மனைவியாகிய சீமந்தனியின் வயிற்றில் புத்திரியாய்ப் பிறந்து கீர்த்திமாலினி யென்னும் பெயர்பெற்றுத் திருமகள்போல்செல்வமாகவளர்ந்து வந்தாள்.

பத்திராயுவும் வணிகேசனுடைய புத்திரனாகிய சுநயன் என்பவனும் வேதசாஸ்திரம், ராஜநீதி, ஆயுதப்பயிற்சி, முதலியவற்றை யெல்லாம் கற்று வல்லவர்களாய், இணைபிரியாமலிருந்தார்கள். வணிகேசன் அவ்விருவருக்கும் உபநயனஞ் செய்வித்தான். பிள்ளைகளுக்குப் பதினாறுவயதாயிற்று.

அப்போது விடபர் என்னும் சிவயோகியார் மறுபடியும் அவ்விடத்திற்கு வந்தார். சுமதியம்மையும் பத்திராயுவுங்கண்டு அவர்பாதத்தில் விழுந்து வணங்கி, மலர்தூவி அருச்சித்துப், பால், பழம் முதலியவைத்து ஆராதனைசெய்து, அமுதுகொள்ளச் செய்தார்கள். முனிவர் அவர்களை ஆசீர்வதித்து, க்ஷேமங்களை விசாரித்து, ராஜகுமாரனைப் பார்த்து 'அப்பா! நீ அறுபத்துநாலு கலைகளையும் கற்றுக்கொண்டனையா? ஆசாரியரைக் கடவுளாகப் பாவனைசெய்து அவர்மனம் சந்தோஷிக்கும்படி செய்தனையா? எம்மையும் எப்போதாவது நினைத்திருப்பாயா?' என்று கேட்டார். சுமதி அவரைவணங்கி நின்று 'சுவாமீ! இறந்த என்மகனுக்கு உயிரளித்த கிருபாநிதியாகிய

உம்மையும் நாங்கள் மறந்திருப்போமோ? உமதருளால் பிறைத்திருக்கும் என்புத்திரனைச் சீஷனாக்கிக்கொண்டு ராஜநீதியையறிவித்து, ஞானோபதேசமுஞ்செய்தருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

சிவயோகியார் சந்தோஷித்துப் பத்திராயுவைப் பார்த்து, 'ராஜகுமாரனே! கேள். செங்கோல் கோணினால் எங்கும் கோணும். ஆதலால் நீதிதவறாமல் உலகாளவேண்டும். மன்னுயிரைத் தன்னுயிர்போலெண்ணிப் பாதுகாக்கவேண்டும். பெரியோரிடத்தில் குற்றஞ்செய்யலாகாது. பொய்சொல்லலாகாது. தகுந்த மந்திரி, பிரதானி, பெரியோர், இவர்களைத் துணையாகக் கொள்ளல்வேண்டும். குடிகள் நடுங்கும்படி தீங்குசெய்யலாகாது. வேடரைப்போல்வேட்டைத்தொழில்செய்யலாகாது. சூதாடல், மதுபானஞ்செய்தல், இவைகளை நினைக்கவுங்கூடாது. நன்றி மறத்தலாகாது. யுத்தத்தில் தன்னுயிரைப் பெரிதாக வெண்ணக்கூடாது. காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து பரமசிவனைப் பணியவேண்டும். சிவனடியார்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கவேண்டும். வீண் நேரம்போக்காமல் உலகத்துக்கு நன்மையுண்டாக்கத்தக்க நல்லவழிகளையோசிக்கவேண்டும். இப்படிக் கிரமமாகஅரசாட்சிசெய்யுமரசர்கள், இம்மையில் சகலபோகங்களையு மநுபவித்து, மறுமையிலும் விண்ணுலகத்தில் தேவராகிச் சிறப்புற்று வாழ்வார்கள். ஆதலால் நீயும் இங்ஙனமே நடந்து பரமசிவனுடைய கிருபையால் பூலோக முழுவதும் ஆளக்கடவை' யென்று அருளிச்செய்து, சகல பாவங்களையும் நீக்கத்தக்க சிவகவசத்தையும் உரைத்தருளினார்.

—:o:—

சிவயோகி மகிமை தொடர்ச்சி.

சிவகவசம் உரைத்த அத்தியாயம்.

—:o:—

சிவகவசம்.

பங்கயத் தவிசின் மேவி யிருந்துடற் பற்று நீக்கி
அங்குறும் பூத சுத்தி அடைவுடன் செய்த பின்னர்
கங்கையைத் தரித்த சென்னிக் கற்பகத் தருவைச் செம்பொற்
கொங்கைவெற் பனைய பச்சைக் கொடியொடு முளத்தில்
[வைத்தே. (க)

அகிலநா யகனை ஞான ஆனந்த ரூபி யாகித்
துகடரு மணுவாய் வெற்பின் தோற்றமாய் உயிரை யெல்லாம்
தகவுடன் அவனி யாகித் தரிப்பவன் எம்மை யிந்த
மகிதல மதனிற் றீமை மருவிடா தருளிற் காக்க. (உ)

அரைபுன லுருவங் கொண்டு சூழ்தொறும் பயன்க ளல்கித்
தரையிடை யுயிர்கள் யாவுந் தளர்ந்திடா வண்ணங் காப்போன்
நிரைநிரை முகில்க ளீண்டி நெடுவரை முகட்டிற் பெய்ய
விரைபுன லதனுள் வீழ்ந்து விளிந்திடா தெம்மைக் காக்க. (௩)

கடையுகந் தன்னி லெல்லா வுலகமுங் கடவுட் டீயால்
அடலைசெய் தயலே தானம் அறைதர நடிக்கு மீசன்
இடைநெறி வனைதா பத்தில் எறிதரு சூறைக் காற்றில்
தடைபடா தெம்மை யிந்தத் தடங்கட லுலகிற் காக்க. (௪)

தூயகண் மூன்றி னோடு சுடரும்பொன் வதன நான்கும்
பாயுமான் மழுவி னோடும் பகர்வர தாபயங்கள்
மேயதிண் புயங்க ணான்கும் மிளிரும்மின் னனைய தேகம்
ஆயதற் புருட னெம்மைக் குணதிசை யதனிற் காக்க. (ரு)

மாண்மழுச் சூலந் தோட்டி வினைதரு நயன மாலை
கூன்மலி யங்குசந் தீத் தமருகங் கொண்ட செங்கை
நான்முக முக்க ணீல நள்ளிருள் வருணங் கொண்டே
ஆன்வரும் அகோர மூர்த்தி தென்றிசை யதனிற் காக்க. (சு)

சிவண்மறி யக்க மாலை செங்கையோ ரிரண்டுந் தாங்க
அவிர்தரு மிரண்டு செங்கை வரதத்தோ டபயந் தாங்கக்
கவினிறை வதன நான்குங் கண்ணொரு மூன்றுங் காட்டுந்
தவளமா மேனிச் சத்யோ சாதன்மேற் றிசையிற் காக்க. (எ)

கறைகெழு மழுவு மானும் அபயமுங் கண்ணி னோடும்
அறைதருந் தொடையுஞ் செய்ய அங்கைக ணான்கு மேந்திப்
பொறைகொணான் முகத்து முக்கட் பொன்னிற மேனி யோடு
மறைபுகழ் வாம தேவன் வடதிசை யதனிற் காக்க. (அ)

அங்குசங் கபாலஞ் சூலம் அணிவர தாப யங்கள்
சங்குமான் பாச பக்கம் தமருகங் கரங்க ளேந்தி
திங்களிற் றவள மேனி திருமுக மைந்தும் பெற்ற
எங்களீ சான தேவன் இருவிசும் பெங்குங் காக்க. (கூ)

சந்திர மௌலி சென்னி தனிநுதற் கண்ண னெற்றி
மைந்துறு பகன்கண் தொட்டோன் வரிவிழி யகில நாதன்
கொந்துணர் நாசி வேதங் கூறுவோன் செவி கபாலி
அந்திற்செங் கபோலந் தூய ஐம்முகன் வதன முற்றும். (க0)

வளமறை பயிலு நாவன் நாமணி நீல கண்டன்
களமடு பினாக பாணி கையிணை தருமவாகு
கிளர்புயந் தக்கன் யாகங் கெடுத்தவன் மார்புதூய
வொளிதரு மேருவில்லி யுதரமன் மதனைக் காய்ந்தோன். (கக)

இடையிப முகத்தோன் தாதை உந்திநம் மீசன் மன்னும்
புடைவளர் அரைகு பேர மித்திரன் பொருவில் வாமம்
படர்சக நிசன் சானுப் பாய்தரு மிடப கேது
மிடைநெறிக் கணைக்கா லேய்ந்த விமலன்செம் பாதங் காக்க. ()

வருபகல் முதல்யா மத்து மகேசன்பின் னிரண்டாம் யாமம்
பொருவரு வாமதேவன் புகன்றிடு மூன்றாம் யாமம்
செருமலி மழுவா ளங்கைத் திரியம்பக னாலாம் யாமம்
பெருவலி யிடப வூர்தி பிணியற இனிது காக்க. (கங)

கங்குலின் முதல் யாமத்துக் கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய இரண்டாம் யாமஞ் சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றாம் யாமம் புரிசடை அண்ணல் காக்க
பங்கமில் நாலாம் யாமம் கௌரிதன் பதியே காக்க. (கச)

அனைத்துள காலமெல்லாம் அந்தகற் கடிந்தோ னுள்ளும்
தனிப்பெரு முதலா யுள்ள சங்கரன் புறமுந் தானு
வனப்புறு நடுவுந் தூய பசுபதி மற்று மெங்கும்
நினைத்திடற் கரிய நோன்மைச் சதாசிவ நிமலன் காக்க. (௧௫)

நிற்புழிப் புவன நாதன் வருழி நிமல மேனிப்
பொற்பிர மதாதி நாதன் இருப்புழிப் பொருவி லாத
அற்புத வேத வேத்யன் அருந்துயர் கொள்ளு மாங்கட்
டற்பர சிவன் விழிக்கிற் சாமள ருத்ரன் காக்க. (௧௬)

மலைமுதற் றுருக்கந் தன்னிற் புராரிகாத் திடுக மன்னுஞ்
சிலைவலி வேட ரூபன் செறிந்தகா னகத்திற் காக்க
கொலையமர் கற்பத் தண்ட கோடிகள் குலுங்க நக்குப்
பலபடி நடிக்கும் வீர பத்திரன் முழுதுங் காக்க. (௧௭)

பல்லுளைப் புரவித் திண்டேர் படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு மிடைந்திடு மெண்ணில் கோடி
கொல்லியன் மாலை வைவேற் குறுகலர் குறுகுங் காலை
வல்லியோர் பங்கன் செங்கை மழுப்படை துணித்துக் காக்க.

தத்துநீர்ப் புணரி யாடைத் தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தள் பஃறலை யனைத்துந் தேய்ந்து
முத்தலை படைத்த தொக்கு மூரிவெங் கனல்கொள் சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப் பொருதழித் தினிது காக்க.

றடங்குளை முதலா யுள்ள முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பிறைகள் கொக்க என்றிவை யனைத்து முள்ளந்
திடம்பட நினைந்து பாவந் தெறுஞ்சிவ கவசந் தன்னை
உடன்படத் தரிப்பை யாஞல் உலம்பொரு குவவுத் தோளாய்.

வேறு.

பஞ்சபா தகங்கள்போம் பகைகள் மாய்ந்திடும்
அஞ்சலின் மறலியும் அஞ்சி யாட்செயும்
வஞ்சநோ யொழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சமென் றிதனைநீ தரித்தல் வேண்டுமால். (௨௧)

சிவகவசத் தாற்பரியம்.

* "பத்மாசனத்திலிருந்து சரீரப்பற்றினையொழித்து பூத சுத்திசெய்து, பரமசிவனையும் பார்வதி தேவியாரையும் மனத் திருத்தி *ஞானாநந்த சொரூபியாகிய உலகநாயகராய் யானை முதல் எறும்பீறாக உள்ள பிராணிகளை யெல்லாம் பூமியா யிருந்து தாங்குகின்ற கடவுள் இப்பூமியில்நீங்கு நேரிடாவண் ணம் எம்மைக்காக்கக்கடவர், சலரூபங்கொண்டு பயிர்களோரும் பயன்கொடுத்து, உயிர்களெல்லாந் தளர்ச்சியடையாதபடி காக்குங்கடவுள் சலத்திலமிழ்ந்திறவாத வண்ணம் எம்மைக் காக்கக்கடவர். கடையுகத்தில் ஊழித்தியால்எல்லாவுலகத்தை யுஞ் சாம்பலாகச்செய்து, பார்வதிதேவியார் தாளம்போட கட

* பத்மாசனமாவது இரண்டுதொடைமேலும் இரண்டு உள்ளங்கால்களையும் மாறித்தோன்ற வைத்தல்.

ளஞ் செய்யுங்கடவுள், வழிகளிலே வருத்துந் திவெப்பத்தினின்றும் சூறைக்காற்றினின்றும் எம்மைக்காக்கக்கடவர். திரிநேத்திரங்களும், நான்கு திருமுகங்களும், மானும், மழுவும், †வரதமும், அபயமும் பொருந்திய நான்கு புயங்களும், மின்னலைப்போல் பிரகாசிக்குந் திருமேனியும் உடைய தற்புருட மூர்த்தியானவர் எம்மைக்கிழக்குத் திசையிற் காக்கக்கடவர். மான், மழு, சூலம், அங்குசம், உருத்திராக்ஷ மாலை, தீ, தமருகம் என்னும் இவைகளைத்தாங்கிய கைகளும், நான்கு திருமுகங்களும், திரிநேத்திரங்களும் நீலமேகம்போற்செறிந்த இருள்நிறமுங் கொண்டு, இடபவாகனத்தில் ஏறிவருகின்ற அகோரமூர்த்தியானவர் எம்மைத்தெற்குத் திசையிற் காக்கக்கடவர். மான், உருத்திராக்ஷமாலை - அபயம் - வரதம் - இவைகளைத்தாங்கிய நான்கு திருக்கரங்களும், நான்கு திருமுகங்களும், திரிநேத்திரங்களும், வெண்மைநிறமுள்ள திருமேனியும் உடைய சத்தியோசாத மூர்த்தியானவர் எம்மை மேற்குத் திசையிற் காக்கக்கடவர். மான், மழு அபயம், உருத்திராக்ஷமாலை இவைகள் பொருந்திய நான்கு திருக்கரங்களையும், மும்மூன்று கண்களையுடைய நான்கு திருமுகங்களையும், பொன்னிறமான திருமேனியையும் உடையவாமதேவமூர்த்தியானவர் எம்மைவடக்குத் திசையிற் காக்கக்கடவர். அங்குசம், கபாலம், சூலம், வரதம், அபயம், சங்கு, மான், பாசம், உருத்திராக்ஷம், தமருகம், என்னும் இவைகள்பொருந்திய பத்துத்திருக்கரங்களையும்,

† வரதம் = வரங்கள் கொடுத்தல். அபயம் = அஞ்சேல் என்றுதரித்தல்.

ஐந்து திருமுகங்களையும், சந்திரனைப்போல் வெண்மையான திருமேனியையும் உடைய ஈசானமூர்த்தியானவர் எம்மை ஆகாயமெங்கும் காக்கக்கடவர். சந்திரசேகரமூர்த்தியானவர் சிரசையும், நெற்றிக்கண்ணையுடைய பாலலோசனமூர்த்தி நெற்றியையும், பகனென்னும் சூரியனுடையகண்ணைப்பறித்த மூர்த்தி கண்களையும், விசுவநாதர் நாசியையும், வேதமருளிச்செய்தமூர்த்தி காதுகளையும், கபாலியென்பவர் கபோலத்தையும், பஞ்சானனமூர்த்தி முகத்தையும், வேதங்களைப் பயில்கின்ற நாவையுடையமூர்த்தி நாவையும், நீலகண்டமூர்த்தி கழுத்தினையும், பினாகபாணி கைகளையும், தருமவாகு புயங்களையும், தக்கன்யாகத்தையழித்தமூர்த்தி மார்பினையும், மேருவில்லியென்னுமூர்த்தி வயிற்றினையும், காமதகனமூர்த்தி இடையினையும், கணபதியின் பிதாவாகியமூர்த்தி நாபியினையும், ஈசுவரனானவர் அரையினையும், குபேரனுடைய தோழராகிய மூர்த்தி தொடையினையும், ஜகதீசன் முழங்காலையும், இடபகேதுவானவர் கணைக்காலையும், விமலமூர்த்தி பாதத்தையும் காக்கக்கடவர்கள். பகல்முதற்சாமத்தில் மகேசுரமூர்த்தியும், இரண்டாஞ்சாமத்தில் வாமதேவரும், மூன்றாஞ்சாமத்தில் மழுவாயுதமேந்திய திரியம்பகரும், நாலாஞ்சாமத்தில் இடபவாகனமூர்த்தியும் காக்கக்கடவர்கள். இரவுமுதற்சாமத்தில் கலாதரமூர்த்தியும், இரண்டாஞ் சாமத்தில் கங்காதரமூர்த்தியும், மூன்றாஞ்சாமத்தில் சடாமகுட மூர்த்தியும், நாலாம்சாமத்தில் உமாபதியும் காக்கக்கடவர்கள். எல்லாக் காலங்களிலும் காலசங்கார மூர்த்தியும், உட்புறத்தில் சங்கரமூர்த்தியும், வெளிப்புறத்தில் ஸ்தாணு மூர்த்தியும், நடுப்புறத்தில் பசுபதியும்,

மற்ற இடமெங்கும் சதாசிவ மூர்த்தியும் காக்கக்கடவர்கள். நிற்குமிடத்துப் புவனநாதரும், நடக்குமிடத்துப் பிரமதாதிநாதரும், இருக்குமிடத்து வேதவேத்தியரும், நித்திரைசெய்யுமிடத்துத் தற்பரசிவனும், விழிக்கும்போது சாமள ருத்திரனும் காக்கக்கடவர்கள். மலைமுதலாகிய துருக்கங்களில் புராரியும், காட்டினிடத்தில் வேடரூபமூர்த்தியும், மற்ற எல்லா இடங்களிலும் வீரபத்திரரும் காக்கக்கடவர்கள். இரத-கஜ-துரக-பதாதிகளுடன் பகைவர் போருக்கு வருங்காலத்தில் "பார்வதிபாகர் திருக்கரத்திலிருக்கும் மழுவாயுதங் காக்கக்கடவது. மஹாவலிபொருந்திய முத்தலைச்சூலமானது திருடர்களினின்றும் எம்மைக் காக்கக்கடவது. சிங்கமுதலியகொடிய மிருகங்களையெல்லாம் பிநாகம் என்னும் வில்லானது கொல்லக்கடவது' என்று சொல்லித் தியானித்து சிவகவசமாகிய விபூதியைத் தரித்துக்கொண்டால் பஞ்சமாபாதகங்களும் நீங்கிப்போம். பகைகள் ஒழிந்துவிடும். ஒருவருக்கும் பயப்படாத இயமனும் உனக்குப்பயந்துபணிவிடைசெய்வான் கொடியவியாதிகளெல்லாந்தீரும். தரித்திரந் தொலையும். ஆதலால் இதுவே நமக்காதாரமென்று நீ திருநீற்றைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

என்றிந்தப் பிரகாரம் சிவகவசத்தின் தன்மையையருளிச்செய்துபின்னுஞ் சிவயோகியார் ராஜகுமாரனிடத்தில்வைத்த கிருபையால் அவனுக்கு யுத்தகளத்தில் பகைவர்களை வென்று ஜயங்கொடுக்கத் தக்க ஓர் மந்திரவாளும், சங்கமும், பன்னீராயிர யானைபலமுங்கொடுத்து, விபூதியை அவன்சரீரத்தில் தரித்து, 'நீ நெடுங்காலம் வாழக்கடவை' யென்றாசிர்வதித்துப்போயினர்.'

சிவயோகிமகிமை தொடர்ச்சி.

——()——

முன்னே விஷவேகநோயால் வருந்தின பத்திராயுவையும் அவன் தாயையும் காட்டிற்கனுப்பிவிட்டு இராச்சியபாரஞ் செய்துவந்த வச்சிரவாகு என்னும் அரசன்மேல் அவனுடைய பகைவனாகிய மகததேசாதிபதி படையெடுத்துவந்து தசார்ண நகரத்தை வளைத்துக்கொண்டான். வச்சிரவாகு தன்சேனைகளைக் கூட்டிக்கொண்டு போய்ப் போர்செய்து எதிரிசேனைகளை முறியடித்தான். மகததேசாதிபதி தன்சேனைகள் சின்னபின்னப்பட்டுப் போனதைக்கண்டு மிகவெகுண்டு வச்சிரவாகுவின்மேல் திரும்பவே, அவ்விருவருக்கும் பெரும்போர் உண்டாயிற்று. அதன் திறத்தைக்கண்டு தேவர்களும்மெச்சினார்கள். அப்போது மகததேசாதிபதியின் புத்திரர்கள் வந்துபுகுந்து வச்சிரவாகுவின் சேனைகளையெல்லாம் அநேகதியாயடித்து மடித்து வச்சிரவாகுவைப் பிடித்துக்கட்டித் தங்கள் தகப்பனுடைய தேர்த்தட்டிற்போட்டுக்கொண்டு 'ஒருநாளுந் தீராத பகையையின்றொழித்துவிட்டோம்' என்று தங்கள்புஜபலத்தை வியந்து ஜயபேரிகை முழக்கி அந்நகரத்திலுள்ள பொருள்களையெல்லாம் கவர்ந்துகொண்டு நகரத்தை அக்கினிக்கிரையாக்கிவிட்டுத் தங்கள் தேசம்நோக்கிச் சென்றார்கள்.

இதைக்கண்டுவந்த வழிப்போக்கர்கள் 'மகததேசத்தரசன் வந்து வச்சிரவாகுவென்னும் அரசனுடன் போர்செய்து வென்று அவனைக்கட்டிக்கொண்டு தன்னகரத்துக்குப் போனான். அந்த அரசன் புலம்புகிறதைப் பார்த்தால் பரிதா

யமாக விருக்கிறது' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு போன வார்த்தை பத்திராயுவின் காதில் நாராசம்போற் புகுந்தமாத்திரத்தில் பத்திராயுவுக்குக் கோபமூண்டு 'எங்களுக்குத் திறை செலுத்தி ஏவல்செய்துவந்த மகததேசத்தான் இப்போது இவ்வளவு வலிமைபெற்றானல்லவா? இனிச்சிங்கத்தைச் சிறிய முயற்குட்டியும் வெல்லப்பார்க்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆதலால் நான் இப்போதேசென்று அவன் சேனைகளை யெல்லாம் என் வாளுக்கிரையாக்குகிறேன். அப்படிச்செய்யேனாகில் சிவபெருமானுடைய அடியார்க்கடியனல்லனாகக்கடவேன்' என்று சபதஞ்செய்துகொண்டு, வணிகேசன் மகனாகிய தன்தோழனோடுசென்று, வழிப்போக்கர் சொன்னபடியே போகின்ற எதிரிசேனையைக் கண்டு, சிவயோகியார் கொடுத்த வாளாயுதத்தை உறையிலிருந்தெடுத்துக்கொண்டு, யானைகளையும், குதிரைகளையும், எதிர்த்த வீரர்களையும், அவர்களாயுதங்களையும், கண்டதுண்டமாகத் துண்டித்துத் தள்ளினான். தப்பிப்பிழைத்தவர்கள் ஓடிப்போய்விட்டார்கள். ஜயங்கொண்ட பத்திராயு, மகததேசத்தரசனையும் அவன் புத்திரர்களையுஞ்சிறையிலிருத்தித் தன் பிதாவைச் சிறைமீட்டான். சிறைநீங்கின வச்சிரவாகு, பத்திராயுவைப்பார்த்து 'என்குலத்தார்செய்த தவப்பயன்வந்து உதவினதுபோல் எனக்கு நேரிட்ட இழிவையும் இடரையும் நீக்கிய புண்ணியபுருஷனே! நீ செய்தபேருதவிக்கு நானென்ன கைம்மாறளிக்கப்போகின்றேன்? நீயார்? உன் ஊர் எது? நீ யிங்கு வந்த காரணமென்ன? விவரமாகச் சொல்' என்று கேட்டான். அதற்கு அவன் 'என்பெயர் பத்திராயு. என் துணைவனாகிய இந்தச் சுநதன் என்பவனுடைய பிதா என்னை ஆத

ரித்து வருகின்றார். மற்ற சங்கதிகளைப் பின்னிட்டுச்சொல்லுகிறேன். நான்மறுபடியும் வருகிறவரையில் இந்தப்பகைமன்னர் சிறையை விடுவிக்கவேண்டாம்' என்று சொல்லிப், பின்பு சேனாபதி முதலானவர்களை யழைத்து 'நம்முடைய அரசனோடு நகரத்துக்குச்செல்லுங்கள்' என்றாக்ஞாபித்து விட்டுத் தோழனோடுந் தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தான். தாயார் கண்டு 'பிள்ளைகளே! நடந்தசெய்தியென்ன'? என்றுகேட்கப் பத்திராயு 'அம்மா! மகததேசத்தரசனைவென்று சிறைப்படுத்தி என்பிதாவைச் சிறைமீட்டோம்' என்று சொன்னான். அதைக் கேட்டுத் தாயானவள் தன் துயரம்நீங்கிப் பெருமகிழ்ச்சியடைந்தாள். வணிகேசனும் பத்திராயுவினுடைய செய்கையை மெச்சினான். வச்சிரவாகு தன்னகரஞ்சேர்ந்து சுகமாயரசுசெய்து கொண்டுவந்தான்.

இப்படியிருக்க, ஒருநாள் விடபர் என்னுஞ் சிவயோகியார் நிடததேசத்தரசன் அரண்மனைக்குப்போனார். நிடததேசத்தரசனும் அவன் மனைவியாகிய சீமந்தினியும் அவரைக் கண்டுமகிழ்ந்து ஆராதனைசெய்து வணங்கி 'சுவாமீ! தேவரீர் திருவடிகள் வருந்த அடியேங்களிடத்து வந்ததற்குக் காரணம் யாதோ' என்றுகேட்கச், சிவயோகியார் 'அரசனே! நாம் பெண்பேச வந்தோம். யாருக்கோவெனில் சொல்லுகிறோம், கேள். தசாண நாட்டுக்கரசனாகிய வச்சிரவாகு, மனவியாகுலத்தினால் தீராவியாதியுற்ற தன்மனைவியையும் மைந்தனையும் காட்டுக் கனுப்பிவிட, அவர்கள் அங்கே திரிந்து வருந்திப் பின்பு ஓர் நகரம்போய்ச் சேர்ந்திருந்தார்கள். அப்போதந்தப் புத்திரனிறந்துவிடத் தாய் புலம்பிக்கொண்டிருக்

கையில் தெய்வச்செயலால் நாம் அங்கேபோய் அவனைப் பிழைப்பித்து அவனுக்கு வாளாயுத முதலானவைகளுங் கொடுத்திரக்ஷித்தோம். பின்பு பகைமன்னர்வந்து அவன் பிதாவோடு யுத்தஞ்செய்து வென்று பிதாவைச் சிறைப்பிடித்துக்கொண்டு போன செய்தியை அவன் கேள்விப்பட்டுத் தான்போய் அந்தப் பகைமன்னரை யெதிர்த்துப் போர்செய்து வென்று தன் பிதாவைச் சிறைமீட்டான். இத்தன்மையான அந்தப்புத்திரனுக்கு உன் குமாரத்தியாகிய கீர்த்திமாலினியைக் கொடுக்கவேண்டும்' என்று சொன்னார்.

அரசன் அதுகேட்டு மனமகிழ்ந்து 'தேசிகோத்தமரே! தங்களிஷ்டப்படியே என்மகளை அந்த இராசகுமாரனுக்கே கொடுக்கிறேன்' என்று சொல்லிச் சிவயோகியாரை ஆசிரமத்துக் கனுப்பிவிட்டு அந்த இராசகுமாரனை அழைத்துவரும்படித் தன் தளகர்த்தர்களை யனுப்பினான். அவர்கள்போய் இந்தச்செய்தியைச் சொல்லப், பத்திராயு சந்தோஷமடைந்து தன் தாயாரையும், தங்களை யாதரித்த வணிகேசனையும், அவன் புத்திரனையும், கூட அழைத்துக் கொண்டுவந்தான். சுபமுகூர்த்தத்திலே சந்திராங்கதன் தன்மகளைப் பத்திராயுவுக்கு விவாகஞ்செய்துகொடுத்தான். அவர்களிருவருங்கூடி யின்பமாக வாழ்ந்திருந்தார்கள்.

அப்படியிருக்கையில் ஒருநாள் நிடதராசன் பத்திராயுவின் தகப்பனாகிய வச்சிரவாகுவை வரவழைக்கக்கருதி அவனுக்கு நிருபம் எழுதித் தூதர்களிடத்திற் கொடுத்தனுப்பினான். வச்சிரவாகு அந்த நிருபத்தைப் பார்த்த வுடனே

சதுரங்க சேனைகளோடும் புறப்பட்டு இரத்தின கசிதமான ஓர் தேரிலேறிக்கொண்டு மிகுந்த ஆடம்பரத்தோடு புறப்பட்டு வந்தான். பட்டணத்துக்குச் சமீபத்தில் வருகிற செய்தியை நிடதராசன் கேள்விப்பட்டு எதிர்கொண்டுபோய் வச்சிரவாகுவை அழைத்துவந்து தன் மாளிகையிலிருத்தி உபசரித்தான். வச்சிரவாகு சந்தோஷமடைந்து நிடதராசனை மெச்சிப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது பத்திராயு வந்து தன் தகப்பன் பாதத்திற் பணிந்து நின்றான். அவனைப் பார்த்தவுடனே வச்சிரவாகு மிகுந்த மனக்களிப்படைந்து அவனைத் தன்னருகில் வரவழைத்து, நிடதராசனைப் பார்த்து 'ஐயா! இந்தப் பிள்ளை மகததேசத் தரசனுடைய இறுமாப்பை யழித்து என்னைக்காத்து இரட்சித்த புண்ணியவான்; இவன் யார்? இவன் வரலாற்றை யெனக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்க நிடதராசன் நகைத்து 'அரசனே! இவனை உனக்குத் தெரியாதா? ஆனால் அஃதிருக்கட்டும், நான் ஒரு கதை சொல்லுகிறேன் கேள்:—ஒரு தேசத்திலே ஓரரசனிருந்தான். அவன் பழிபாவமென்றெண்ணாமல் தன் மனைவியையும் புத்திரனையும் காட்டுக்கனுப்பிவிட்டான். அவர்களை ஒரு வணிகன் காப்பாற்றி வந்தான். அந்நாளில் புத்திரனிறந்துவிடத் தாய் அழுதுகொண்டிருக்கையில், ஒரு சிவயோகியார் வந்து அவனையெழுப்பி அவனுக்கு இராசநீதி முதலிய போதித்து மிகுந்தபலமும், மந்திரவாளுஞ் சங்கமுங்கொடுத்து இரக்ஷித்தார். பின்பு அப்பிள்ளை, தன் பிதாவைப் பகைவர் சிறைபிடித்துக்கொண்டுபோகிற செய்தி கேள்விப்பட்டு, உடனே சென்று பகைவரை வென்று பிதாவைச் சிறைமீட்டான்.

இதைப்போலொருகதை நீ கேட்டதுண்டோ? நான் சொன்ன கதைக்குரியவர்களையுங் காண்பிக்கிறேன். அந்தப் புத்திரன் இவன்தான், பிதா நீதான், தாய் உன் மனைவிதான்' என்றான். இதைக் கேட்டவுடனே வச்சிரவாகு மதிமயங்கிக் கீழே விழுந்துவிடப் பத்திராயு ஓடியெடுத்துச் சோகந்தெளிய வுபசரித்து 'ஐயா! நாங்கள் முன்செய்த தீவினையினாலே துன்பத்தை யநுபவித்தோம். அதற்காகத் தாங்கள் வருந்த வேண்டாம். எழுந்திருங்கள்' என்றுசொல்லித் தேற்ற, வச்சிரவாகு எழுந்து, தன்குற்றந் தன்னைச் சுட்டதினாலே சிறிது நேரம் ஒன்றுந்தோன்றாமலிருந்து பின்பு ஒருவாறுதெளிந்து, மகனை யணைத்துக்கொண்டு 'அப்பா! உன்னையும் உன்தாயையும் காட்டிற் கொண்டுபோய் விட்டுவிடச் செய்த கன்னெஞ்சுடைய பாவியாகிய என்னை மகததேசத்தான் கொல்லாதபடிகாத்து இப்போது உன்னைத் தழுவப்பெறும்படியாகவுங் கிருபை செய்தையே! இரக்கமுந் தருமநெறியு மில்லாத நானும் அரசனா? இனிமேலும் உயிர்தாங்கிக் கொண்டிருக்க வேண்டுமோ? இப்பொழுதே துணிவு' என்றெழுந்தான். அதைக் கண்டு நிடததேசாதிபதியும் மந்திரிகளும் சமாதானஞ் சொல்லித் தடுப்ப, வச்சிரவாகு மனத்துயரம் நீங்கிச் சிறிதுநாள் அவ்விடத்திலேயே யிருந்து பின்பு தன் மனைவியையும் மகனையும், மருமகளையும், அழைத்துக்கொண்டு தன் நகரத்துக்குச் சென்றான். ஜனங்கள் பத்திராயுவைப் பார்த்து பெருமகிழ்ச்சி யடைந்து அவனுடைய அருமையும் பெருமையுமான செய்கைகளை யெல்லா மெடுத்துச் சொல்லிப் புகழ்ந்து பலவித ஆசிகளும் கூறினார்கள். வச்சிரவாகு நெடுநாள் அரசுசெய்துகொண்

டிருந்து பின்பு மகதராசனைச் சிறைநீக்கித் திறைகட்டிக் கொண்டிருக்கும்படியாகத் திட்டஞ்செய்து அனுப்பிவிட்டுத் தான் இவ்வுலகம் நீங்கிச் சுவர்க்க பதவியைப் பெற்றான். அவனுக்குப் பின் பத்திராயு அரசுசெய்துவந்தான்.

சிவயோகிமகிமை தொடர்ச்சி.

பத்திராயு முத்திபெற்ற அத்தியாயம்.

---:o:---

பத்திராயுமகாராஜன் அரசாட்சிசெய்து வருகையில் ஒருநாள் வேட்டையாடக்கருதி, மந்திரிமுதலானவர்கள் சூழ்ந்துவர, பிரிந்திருக்கலாற்றாத தன் மனைவியுடன் தேரிலேறிக்கொண்டு காட்டுக்குச்சென்றான். வழியிலே சண்பகம், தேவதாரம், சந்தனம், பாதிரி, தேமா, பலா, கோங்கு, விளா, மந்தாரம், முதலிய விருக்ஷங்கள் நெருங்கி வளர்ந்திருந்த ஓர் சோலையைக்கண்டு, அது தளிர்த்துப் பூத்துக் காய் கனிகளுடன் காத தூரம் பரிமளம்வீசவும், குயில்கள் கிளிகள் முதலிய பக்ஷிசாலங்கள் கனிகளைக்கோதித் தின்று தமது இனிய குரல்களாற் கீதம்பாடிக் கொஞ்சிக்குலாவவும், வண்டுகள் தேனையுண்டு ரீங்காரஞ்செய்யவும் பெற்றுப், பார்ப்போர் கண்களையும் மனத்தையும் கவர்ந்து மகா ரமணீயமாக இருந்தமையால், அந்தச் சோலையிலே பத்திராயு இறங்கி யிளைப்பாறிக்கொண்டிருந்தான்.

அப்போது அங்கொரு பிராமணர் தம்முடைய மனைவியோடுவந்து 'ஓ இராசசிங்கமே! நாங்கள் உனக்கடைக்கலம். எங்களைக் கொல்லும்பொருட்டு இதோ ஓர் புலி தொடர்ந்து வருகின்றது. அதனை உன் கையம்பினாற் கொன்று எங்களைக் காக்கவேண்டும்' என்று முறையிட்டார். பத்திராயு புலியைக்கொல்ல யத்தனப்படுகைக்குள் அது பிராமணஸ்திரீயையடித்துப் பிடித்துக்கொள்ள, அவள் அழுதுகொண்டு 'அரசனே! நான் புலியின் வாயில் அகப்பட்டேன். என் உயிரைக்காப்பது உன்பாரம்' என்று சொல்லிச் சிவநாமத்தை உச்சரித்தாள். உடனே பிராணன்போயது அரசன், தான் பிரயோகஞ்செய்த பாணம் பூப்போற்சென்று புலியின்மேல்விழ, 'இதென்னமாயம்' என்று திகைக்கின்றான். புலி பார்ப்பினியை யிழுத்துக்கொண்டு மலைக்குகையை நாடிச்சென்றது. பிராமணர் 'என் மனைவியை யிழந்துவிட்டேனே. ஐயோ, பதிவிரதா தருமத்தில் அருந்ததியும் நிகராகாத என் நாயகியே! நீ புலிவாயி லகப்பட்டுச்சாக முன் சன்மத்தில் என்னபாவம் செய்தையோ? என்னாசை மனையாளே! நீ யிறந்ததைக்கண்டும் நான் இறவாமல் இன்னுமிருக்கின்றேனே!' என்றிவ்வாறு புலம்பிப், பின்பு பத்திராயுவின்மேல் திரும்பிக் கோபங்கொண்டவராய், 'பிராமணர்களுக்குத் துன்பம் வந்தபோது உதவிசெய்யாத இராசசிரேஷ்டனே! புலி வந்து உன்கண்ணுக் கெதிராக என் மனைவியை அடித்துக் கொன்று எடுத்துக்கொண்டு போகவும், பிடித்த வில்லுங் கையுமாய் நின்றாயே. பன்னீராயிரம் யானைபலம் உனக்குண்டே. அந்தப் பலத்தைப் பகைவருக்குக் கொடுத்துவிட்

டுப் பயத்தைவாங்கிக்கொண்டையோ? உன்னுயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டுப் புலிக்குப் பயந்துகின்ற நீ, இயமதூதர்கள்போல் எதிரிகள் வந்து யுத்தஞ்செய்தால் நடுங்காமல் அவர்களை யெதிர்த்துத் துரத்திவிட்டு உன் அரசாட்சியைக் காப்பாற்றவல்லையோ? பெண்பிறப்பாயும், அதிலும் பிராமணஸ்திரீயாயும், உன்னிடத்தில் வந்து அடைக்கலம் புகுந்தவளாயும் உள்ள அவளைக் காக்கவேண்டுமென்றெண்ணாமல், புலிக்கிரையாகக்கொடுத்துவிட்டு உயிரைக் காத்துக்கொண்டனை அரசனே! பலம் குறைந்தும் இன்னும் சீவித்திருந்து உலகாள நினைக்கின்றாயோ? பகைவர்கள் இழிவாய்ப் பேசுவார்களே, அதற்கும் நாணமுறாயோ?' என்று பலபல தூஷணவார்த்தைகளைப் பேசினார்.

இவைகளையெல்லாங்கேட்டுப் பத்திராயு துக்கசாகரத்தில் அழுந்தினவனாய்ப் 'பிராமணருக்கு நேரிட்ட இடரை நீக்காத அரசன் மிருகத்துக்குச்சமானம்' என்று வேதஞ் சொல்வதை நான் ஆதியிலேயே அறிந்திருந்தும் இப்பெரியவருக்குநேரிட்ட இடரை நீக்கத்துணியாமல் பயந்துநின்றேன். இனியெனக்குப் பழிவருமேயல்லது புகழுண்டாகுமோ? ஆதலால் உயிரைவிடுவதே உத்தமம்' என்றெண்ணிப் பிராமணருடைய பாதத்திற் பணிந்து 'ஐயா! நீர் துன்பப்படவேண்டாம். நான்செய்த குற்றத்திற்காகத் தீயில்விழுகின்றேன். என் தேசத்தையும் திரவியத்தையும் தேவரீருக்கே ஒப்பித்தேன். அவைகளைக் கைப்பற்றிக் கொள்ளும்' என்று சொன்னான். அதற்குப் பிராமணர் 'அரசனே! மனைவியையும் மற்றெல்

லாச்சுகங்களையும் இழந்துவருந்துகிற ஏழைப்பிராமணனாகிய நான் சொல்லத்தக்க தொன்றிருக்கிறது; அதென்னவென்றால்: நான் உயிரோடிருக்கவேண்டுமென்கிற எண்ணம் உனக்குண்டாயிருந்தால் உன்பத்தினியாகிய கீர்த்திமாலினியையெனக்குக்கொடு' என்றார். அதைக் கேட்டவுடனே பத்திராயு வெகு வருத்தப்பட்டு 'அந்தணரே! தர்மத்துக்கு மாறான இந்த இழிவானவார்த்தையையுஞ் சொல்லலாமோ? அரசர்களாயிருப்பவர்கள் பிராமணர்பொருட்டுத் தங்கள் பிராணனைக்கொடுப்பார்கள் - பொருளைக் கொடுப்பார்கள் - உபசாரவார்த்தைகளைச் சொல்வார்கள் - அவ்வளவேயன்றி இல்லறத்துக்குத் துணையாகிய மனைவியைக்கொடுத்த அரசர்களுமுண்டோ? சொல்லும்' எனவே பிராமணர் கோபங்கொண்டு 'கொடுங்கோல் மன்னனே! இதனால் எனக்குப் பாவஞ்சம்பவிக்கிறதாயிருந்தாலும் சாந்திசெய்துகொள்ள என்னாலாகும்; ஆதலால் உன் மனையாளைக் கொடுத்தாற் கொடு. கொடாவிட்டால் உன்னை நரகத்தில் விழும்படியாகச் சபிப்பேன், என்னசொல்லுகிறாய்? என்றார். அரசன் அதுகேட்டு மனம்நொந்து, அழுது பூமியில்விழுந்து, எழுந்து, ஒன்றுந்தோன்றாமல் நின்று 'ஐயோ! கற்புக்கரசியாகிய இவளை பிராமணருக்குக் கொடுத்தால் வசைவந்துநேரிடுமே - கொடாது மறுத்தாலோ பிராமணர் சபிப்பரே - நான்செய்வதென்ன? பரமசிவனுடைய திருவுளம் யாதோ அறிகிலேன் - கொடுநரகத்தில் விழுந்து துயருறுதல் எளிதான காரியமல்லவே - ஆதலால் மனையாளை மறையவருக்குக் கொடுத்துவிட்டுத் தீயில் விழுந்து இறப்பதேகருமம், என்று எண்ணி 'இச்செய்கையைக்

கல்வியில்லாத மாந்தர்கள்கேட்டு இழிவாகப் பேசினாலும் பேசட்டும். தெரிந்த மன்னவர்கள் வியப்பார்களேயன்றி அப்படிப் பேசார்கள்' என்று தனக்குள்ளே தீர்மானஞ் செய்துகொண்டு வேதியனைநோக்கிச் 'சுவாமீ! இவளை உமக்குக் கொடுத்துவிட்டேன்-உம்முடைய ஊருக்குக்கூட்டிக்கொண்டு போம்' என்று சொல்லிப் பின்பு மனைவியைப்பார்த்துத் 'தாயே! நீ இந்தப் பிராமணருடன்போ' என்று சொல்லிவிட்டு உடனே தீவளர்ப்பித்துத் தன் துக்கத்தையெல்லாம் அடக்கி, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ஸ்நானஞ் செய்துவந்து, பஞ்சாக்ஷரத்தை உச்சரித்தபடியே தீக்குண்டத்தைப் பிரதக்ஷிணமாக வந்தான்.

அப்போது கிருபைக்கடலாகிய பரமசிவன் காளகண்டம், திரிநேத்திரம், இளம்பிறை தரித்த சடாபாரம் முதலிய திருவுருப்பெல்லாந் தோன்றப் பார்வதிதேவியாருடனே இடபவாகனத்தி லேறிக்கொண்டு வந்து தரிசனங்கொடுத்தருள, மகாதபசிகளுக்குங் கிடைத்தற்கரிதாகிய அந்த அற்புதகாட்சியைப் பத்திராயு என்னும் அரசன் கண்ணும் மனமுங் குளிரக்கண்டு 'இன்றன்றோ பிறவித்துன்பத்தை யொழித்தேன்' என்று தேவாமிர்த முண்டவனைப்போலப் பெருங்களிப்படைந்து உலகமெல்லாம் நிறைந்தும் ஒருவராலுமறியப்படாத அச்சிவபிரானுடைய பாதாரவிந்தங்களிற் பணிந்து ஸ்தோத்திரஞ் செய்தான் :—

ஸ்தோத்திரம்.

'தேவாதி தேவனைச் சிற்குணனை யற்புதனைப்
மூவா முதலாய் முழுப்பொருளாய் நின்றாயை
காவாய் பிறவிக் கடல்நீந்திக் கையிளைத்தேன்
நாவா யெனவேநின் றாண்மலர்த்தாள் பெற்றேனே.

உண்ணா நறையாய் உவட்டாத தெள்ளமுதாய்
மண்ணா மணியாய் மறைப்பொருளாய் நின்றாயை
யெண்ணா லளவுபடாத் துன்பத் திடருழந்தேன்
கண்ணா லுறநோக்கிக் கையாற் றொழுகின்றேன்.

அன்புக்கோ ரன்பாய் அறத்துக்கு நல்லறமாய்
வன்புக்கு வன்பாய் வடிவொருவி நின்றாயை
முன்புக் குணர்விலனாய் மூங்கைத் தொழில்புரிந்தேன்
என்புக்குருக எளிதிற் பணிகின்றேன்.'

இவற்றின் கருத்து.

'தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனாகியும், சிற்குணனாகியும், அற்புதனாகியும், கெடாத முழுமுதற் பொருளாகியும் உள்ளகடவுளே! இந்நாள்வரையிற் பிறவிக்கடலை நீந்திக் கரையேறமாட்டாமல் கையிளைத்துப்போன நான் இப்போது உம்முடைய திருவடிகளாகிய மரக்கலத்தைப் பெற்றேன்.

நாவினாற் சுவைபார்த்து உண்ணப்படாத தேனாகியும், உண்ணும்வழியா லுண்போர்க்கு உண்ண உண்ணத் தெவிட்டாத தெள்ளமிர்தமாகியும், மனிதர்கள் அலங்கரித்துக்கொள்

ளும் மணிகளைப்போலல்லாத மாணிக்கமாகியும், வேதசிரப் பொருளாகியும் இருக்கின்ற இறைவனே! இந்நாள்வரையில் அளவிடப்படாத துன்பத்தில் வருந்திய நான் இப்போது உம்மைக் கண்ணாரக்கண்டு, கையாரத் தொழுகின்றேன்.

அன்புக்கு அன்பாகியும், அறத்துக்கு அறமாகியும்; வன்மைக்கு வன்மையாகியும் நிஷ்களவடிவாய் நிற்கின்ற நிமலனே! இந்நாள்வரையில் அறிவிழந்து ஊமைபோலிருந்த நான், இப்போது எலும்பும் நெக்குவிட் டுருகும்படியாக உம்மை எளிதில் வணங்குகின்றேன். ஆதலால் அடியேனைக் காத்தருளல் வேண்டும்.'

என்று இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்ய சுவாமி அவனை 'எழுந்திரு' என்று தம்முடைய திருக்கரங்களால் எடுத்தருளி "அன்பனே! உன்னுடைய பத்திநிலையை யெல்லோர்க்குந் தெரிவிக்கும்பொருட்டு முன்பு பிராமணவடிவாக வந்தது நாமே, பிராமணஸ்திரீயாக வந்தது பார்வதிதேவியே, புலியாகவந்தது மாயையேயென்றறி. இனிநீ கவலைப்படவேண்டாம். நீயும் உன்மனைவியும் எம்மையும் உமையவளையும் பூசித்ததனால் உளமகிழ்ந்தோம். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்' என்று திருவாய்மலர்ந்தருளினார். பத்திராயு பெருங்களிப்புற்று 'சுவாமீ! தேவரீர் பார்வதிதேவியாருடன் எழுந்தருளி வந்து தரிசனந் தந்தருளும்படியான பெரும் பாக்கியத்தைப் பெற்ற அடியேன் கேட்கவேண்டிய வரமும் வேறொன்றிருக்கின்றதா? அடியேனும் என்மனைவியும் என்தாயும், தகப்பனும், எங்களைக்காத்து இரக்ஷித்த வணிகேசனும் அவன் புத்தி

ரனும் ஆகிய நாங்களெல்லாம் தேவரீருடைய திருவடிகளைச் சேரும்படி அருள்செய்யவேண்டும்' என்று பணிந்தான். அப்போது அவன் மனைவியாகிய கீர்த்திமாலினியும் 'சுவாமீ! அடியாளைப்பெற்ற சந்திராங்கதனும் சீமந்தினியுங் கூட உம்முடைய திருவடிகளை யடையும்படிக் கிருபை செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தாள். கைலாசபதி அவர்கள் கேட்ட வரங்களை அருளிச்செய்து மறைந்தருளினார்.

பத்திராயு மனைவியுடன் தேரிலேறிக்கொண்டு தன்னகர்ஞ் சேர்ந்து, ஏகசக்கிரேஸ்வரனாய்ப் பதினாயிரம் வருஷம் செங்கோல் செலுத்தி, பின்பு தன் புத்திரனுக்கு அரசாட்சியைக் கொடுத்துவிட்டுப், பரமசிவனருளிய வரத்தினால் தன்மனையாளுடன் அரிபிரமாதிகட்கும் அடைதற் கரிதான சிவபதவியைப்பெற்று இன்புற்றிருந்தான்.

௰ஙாவது

விபூதி மகிமை.

—:o:—

இதுநிற்க, இனி விபூதி மான்மியத்தைச்சொல்லுகிறோம் கேளுங்கள்:—

வாமதேவர் என்றொரு முனிவரிருந்தார். அவர் உலககாரியத்தில் வெறுப்பும் உமாபதியாகிய சிவபெருமானிடத்தில் விருப்பும் உள்ளவர்; மாசில்லாத குணமும், விபூதியையே

பூஷணமாகத் தரித்த திருமேனியும், பரந்தசடையும், அரையில் மரவுரியும், கையிற் கபாலமும், உடையவர். அவர் உலகத்தாருக்கு நன்மை செய்யும் பொருட்டுப் பிக்ஷை யெடுப்பவர்போலத் தேசமெங்குந் திரிந்து வருகையில் ஒருநாள் அன்றில் வனம் என்னும் ஓர்பெருங் கானகத்தை யடைந்தார். அங்கே, வேல்போன்ற பற்களும் அகன்றவாயும் உள்ளவனும், கரும்பாம்பை அரைக்கச்சாகவும் சர்ப்பங்களைக் கங்கணமாகவும் தரித்தவனும், அக்கினி மயமாய் வட்டமிட்டுச் சுழன்றுகொண்டிருக்கும் கண்களையும், இடிபோன்ற குரலோசையையும், மலைபோன்ற தேகத்தையும் உடையவனுமான ஓரிராக்ஷதன் அவரைக்கண்டவுடனே கொல்ல நினைத்துப் 'போகாதே நில் நில்' என்று சொல்லிக்கொண்டு வந்து அவரைத் தன் கைகளால் தழுவிப்பிடித்து இறுக்கும்போது, அம்முனிவருடைய தோள்களிற் பூசியிருந்த விபூதியானது அவனுடைய சரீரத்திற்பட்டது. அதனாலும், அவர் திருமேனியைப் பரிசித்ததனாலும், இராக்ஷதன் தன்னுடைய கோரரூபமும் கொடிய பாவமும் நீங்கி மன்மதனைப்போல் அழகுள்ளவனானான். உடனே நல்லறிவும் ஞானமும் உதிக்க, அவன் முனிவரை நோக்கி 'ஐயா! உம்மைப் பரிசித்த மாத்திரத்தில் நான் இராக்ஷதரூபம் நீங்கி நல்லுருவடைந்தேன். உம்முடைய கிருபா நோக்கம் படும்படியான பாக்கியத்தைப் பெற்ற அடியேன் பிறவிப் பிணிநீங்கிப் பரமசிவனுடைய திருவடியைச்சேரும் வண்ணம் அருள் செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தான். முனிவர் 'நீ யாவன்? இங்குவந்த காரணமென்ன? இராக்ஷதனாகும்படி என்னபிழை செய்தாய்?' என்றுகேட்டார். அதற்

கவன் 'சுவாமீ! உம்முடைய கிருபையைப் பெற்றதனால் எழு பிறப்பும் அறிந்தவனானேன். என் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளும். இந்தப் பிறப்புக்கு முன் இருபத்தைந்தாம் பிறப்பில் நான் துர்ஜயர் என்னும் ராஜனாயிருந்து கொடுங்கோல் செலுத்தினேன். எனக்கு விருப்பமான மாதர்களையெல்லாம் விவாகஞ்செய்து ஒருநாள் அவர்களைப் புணர்ந்து பின்பு சிறைவைத்து விடுவேன். இவ்வாறு அநேகமாதர்களுக்குத் துன்பஞ்செய்தேன். சாதி குலம் பாராமல் கன்னிஸ்த் மாதர்களைப் புணர்ந்தும் என்காமம் தணிந்ததில்லை. கடைசியாய் நானாவித நோய் கொண்டு வருந்தி அதனாலேயே இறந்தேன். அப்போது இயமதூதர்கள் வந்து பாசத்தினால் என்னை இறுக்கிக்கட்டி மிகவும் வருத்தி யிழுத்துக்கொண்டு போய் இயமன் முன்னேவிட அவன் 'இந்தக் கொடும்பாவியை இந்திரியக்குழம்பு நிறைந்த நரகத்திற் றள்ளுங்கள்' என்று சொன்னான். அவர்கள் அப்படியே என்னைக்கொண்டுபோய்த் தள்ளிவிட்டார்கள். நான் அந்தக்கோரமான நரகத்தில் முப்பதினாயிரம் வருஷம் துன்புற்றிருந்து பின்பு அதைவிட்டு நீங்கிக் கோடி ஆண்குறி பொருந்திய பேயாகி நூறு தேவ வருஷம் காட்டில் திரிந்து இறந்தேன். அதற்கப்பால் புலி, பாம்பு, செந்நாய், பன்றி, பச்சோந்தி, நாய், நரி, முயல், மான், குரங்கு, பருந்து, கிளி, காக்கை, காடி, கோழி, கழுதை, கோட்டான், பூனை, தவளை, ஆமை, மீன், பெருச்சாளி, யானை இவைகளாய்ப் பிறந்திறந்து இருபத்தைந்தாம் பிறப்பில் இராக்ஷதனாய் உதித்து, இவ்வனத்திலுள்ள மிருகங்களையும் வந்த மனிதர்களையும் கொன்று தின்று உழன்றுகொண் டிருக்கை

யில், அமிர்தமழை பொழியும் மேகம்போன்ற உம்மைக்கண்டேன். கண்ட அளவில் என்துயரம் விண்டேன். கொடிய பாதகனாகிய நான் உம்முடைய தரிசனம் பெற்றதனால் தேவரூபங்கொண்டேன். இப்படியானதற்கு என்ன புண்ணியஞ் செய்தேனோ அறிகிலேன்' என்று தொழுதான். முனிவர் 'அப்பா! நீ ஓடிவந்து எம்மை யிழுக்கிப் பிடித்தபோது எம்முடைய சரீரத்திலிருந்த நீறு உன்மேற் பட்டபடியால் உன் பாவம் தொலைந்து உனக்கு ஞானம் உதித்தது. திவ்விய தேகத்தையும் பெற்றாய். பரமசிவனுடைய திருநீற்றின் பெருமையைப் பிரமவிட்டுணுக்களும் அறியார்களென்றால், பிறவித் துன்பத்தில் உழலுகின்ற மனிதர்களோ அறிவார்கள்? ஆயினும் அதன் பெருமையைச் சிறிது சொல்லுகிறேன் கேள்:—

'பாண்டிநாட்டிலே ஒரு பிராமணன் தன்குலாசாரங்களை முற்றுந் துறந்து, சூதாடியும் திருடியும் பணஞ் சம்பாதித்து வேசைகளுக்குக் கொடுத்துக் காமப்பித்தேறி அலைந்து உழன்று கொண்டிருந்தான். ஒருநாள் அவன் ஒரு நீசஸ்திரீயைச் சோரத்தனமாய்ப் புணர்ந்துகொண் டிருக்கையில் அவளுடைய புருஷன் கண்டு கோபங்கொண்டு தன் கைவாளால் அவனைக் கொன்று காலைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய், வேலிக்கப்புறம் எறிந்துவிட்டான். அப்போது சுடலைச் சாம்பல் படிந்தகாலோடு ஒருநாய் வந்து அந்தப் பிணத்தின்மேலேறி மாம்சத்தைப் பிடுங்கித்தின்றது. இயமதூதர்கள் இறந்தவனைக் கொண்டுபோய் நரகத்திற் றள்ளப்போனார்கள். அந்தரு

ணத்திற் சிவகணங்கள் வந்து அவர்களைத் தண்டித்துப் பிராமணனை இரத்தினவிமானத்தி லேற்றிக்கொண்டு ஆகாயமார்க்கத்திற் சென்றார்கள். இயமன் அதைக்கண்டு மனக்கொதிப்புள்ளவனாய் எருமைக்கடாவில் ஏறிக்கொண்டுபோய்ச் சிவகணங்களைப் பார்த்து 'இந்தப் பாவியைப் பரமசிவனுடைய சந்நிதானத்திற் கொண்டுபோவது யாது காரணம்?' என்று கேட்க, அவர்கள் 'இவனுடைய பிரேத சரீரத்தில் விபூதிபட்டதனாலே, பரமசிவன் விபூதியின் மகிமையைத் தெரிவிக்கும் பொருட்டு இவனைத் தம்மிடத்திற்குக் கொண்டுவரும்படி எங்களுக்குக் கட்டளையிட்டனுப்பினார்; எங்களை விலக்க உன்னாலாகாது' என்று சொல்லிவிட்டுப் பிராமணனைச் சிவலோகங் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். ஆதலால் புத்தி பூர்வமாகப் பாதகங்களைச் செய்யும் கொடும்பாவிகளே யாயினும் விபூதியைத் தொட்ட மாத்திரத்திற் புநிதர்களாய்ப் பொன்னுலகடைவார்கள். அத்தன்மையான விபூதியைத் தான், நாம் நம்முடைய தேகமுழுதும் தரித்துக்கொண்டிருக்கிறோம்' என்று வாமதேவமுநிவர் சொன்னார். அதைக் கேட்டுத் தேவரூபமடைந்த ராக்ஷதன் 'முனிவரே! நான் முன் பிறப்பில் மிலேச்சதேசத்தில் இராசனா யிருந்தபோது ஒரு வேதப் பிராமணருக்கு விளக்கிலக் தானஞ்செய்தேன்; அந்தப் பலத்தால் இருபத்தைந்தாம் பிறப்பில் ஒரு சிவயோகியைத் தரிசித்துப் பாவம் நீங்குவாய் என்று இயம தருமராசன் அந்நாளில் சொன்னான். அவ்வண்ணமே இப்போது உம்மைத் தரிசித்துப் புநிதனானேன். திருநீறு உண்டாக்குங் காலமும், தரிக்கும் கிரமமும், செபிக்கும் மந்திரமும் அடியே

னுக்குச் சொல்லவேண்டும்' என்று தொழுது நிற்க, வாமதேவர் சொல்லுகிறார்.

விபூதிமகிமை தொடர்ச்சி.

திரிபுண்டரம் உரைத்த அத்தியாயம்.

மகாசிறப்புப் பொருந்திய மந்தரகிரியில், பிரமா விஷ்ணு முதலிய தேவர்கள் வணங்கவும், எண்ணில்லாத முனிவர், வித்தியாதரர், இயக்கர் முதலாகிய சமஸ்தமான பேரும் போற்றித் துதிசெய்யவும், நவரத்தினகசிதமான திவ்ய சிங்காதனத்திற் பரமசிவன் கோடிசூரியரையொத்த திருமேனி காந்தியோடும் வீற்றிருந்தார். அப்போது, ஞானசாஸ்திரங்களையெல்லாம் பரமசிவன் அருளிச்செய்யக் கேட்டுணர்ந்த சநற்குமாரமஹாமுனிவர் சிவபிரானைப் பணிந்து 'எங்களையனே! அடியேன் செய்துகொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு. அதாவது, உலகபாசத்தில் அகப்பட்டுழலும் மானுடர்களும் மோக்ஷமடையும்படிச் செய்யத்தக்கதாயும், நாடுதற்கெளிதாயும், இருவினையையும் நீக்கி எல்லா நன்மைகளையுங் கொடுக்கத்தக்கதாயும், வேதத்திற் சொல்லப்பட்டதாயும், இருக்கிற சிவதருமம் ஒன்றை அருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதற்குப் பரமசிவன் திருவுளமகிழ்ந்து 'அன்பனே! வேதாகமங்களெல்லாம் திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரிப்பதையே

சிவதருமமாகச் சொல்லும்' என்றருளிச்செய்ய, சநற்குமார முனிவர் 'சுவாமீ! அந்தத் திருநீறு யாது? திரிபுண்டரம் என்பது என்ன? அதையெந்த இடத்தில் எந்தக்காலத்தில் எந்த அளவாக எந்தக்கிரமத்தில் எந்தத்தேவதையைத் தியானித்து எந்தமந்திரத்தை யுச்சரித்துத் தரிக்கவேண்டும்? அப்படித் தரித்தலால் வரும்பலன் யாது? இவைகளையெல்லாம் அருளிச்செய்ய வேண்டும்' என்று தொழுதார். அப்போது சிவபெருமான் திருவாய்மலர்ந் தருளுகின்றார்:—

பசுவின் சாணத்தை ஓமாக்கினியில் தகிப்பதனாலுண்டாகும் சாம்பரே திருநீறு. அதைச்சிரசு, நெற்றி, கழுத்து, தோள், மார்பு, கொப்பூழ், முதுகு, இந்தஇடங்களில் முதலில் உத்தூளனமாகப் பூசிப் பின்பு நீரை விட்டுக் குழைத்து மூன்று ரேகைகளாகத் தரிப்பது * திரிபுண்டரமாம். அதுவும், நெற்றியில் தரிக்குமிடத்து நடுவிரல் நீக்கி ‡ அநாமிகை தர்சனிகளாகிய இருவிரலால் முன்பு தரித்துப் பின்பு பெருவிரலால் நடுவே எதிராகத்தரித்தல் வேண்டும். சிவாகமத்திற் சொல்லப்பட்ட பஞ்சப்பிரமமும் வேதத்திற் கூறிய சடங்கமுமே மந்திரங்களாம். காலங்கள் காலை, உச்சி, மாலையென்னும் முப்போதுமாம். நெற்றியிற்தரிக்கின்றநீளம் புருவத்தின் அளவாம். திரிபுண்டரமாகிய மூன்றுரேகைகளுக்குள்ளும் ஒவ்வொன்றுக்கும் மத்தியில் ஒருவிரலளவு இடம் விட்டிருக்கவேண்டும்.

* திரிபுண்டரம் - ஆன்மாக்களுடைய மும்மலத்தையும் போக்கும் மூக்கீற்றுக்குறி.

‡ அநாமிகை—மோதிரவிரல். தர்சனி—சுட்டுவிரல்.

உருத்திரன், மகேசன், சதாசிவன் இவர்களே உரியதேவதைகள். விபூதியும் நீருமே திரவியங்கள் - இவ்வொழுக்கத்தை* ஒரு நாளும் மறவாதிருப்பாயாக. விபூதியைத் திரிபுண்டரமாகத் தரிப்பதனால் வரும்பலனை எவர்களறிந்து சொல்லத்தக்கவர்கள்? மனிதர்களுக்கு இதைப்போல் எளிதில் மோக்ஷந்தரத்தக்கது வேறொன்றில்லை. பிராமணர்முதலிய நான்குவருணத்தார், பிரமசரிய முதலிய நான்கு ஆசிரமத்தார், இழிகுலத்தோர், சுமங்கலியஸ்திரீகள், கைம்பெண்கள், ஆகிய இவர்களில் எவர்களேயாயினும், திரிபுண்டரம் தரிப்பார்களானால் அவர்கள் பாவபந்தம்நீங்கிச் சுவர்க்கத்திற் சென்று, தேவபோகத்தை யநுபவித்து, அப்பால் கிடைத்தற்கரிய முத்தியின்ப மடைவார்கள். எவ்வகைப்பட்ட கொடும்பாவத்தைச் செய்பவர்களும் திருநீறணியப் பெறுவார்களானால் அவர்கள் தீவினையெல்லாம் சூரியனைக்கண்ட இருள்போ லொழிந்துபோம். கீழ்மக்களே யாயினும் விபூதி ருத்திராக்ஷந் தரித்த பெருமையாளரைச் சிவனென்றே மதித்துத் தியானிக்கும் அறிவாளர்கள் பிறவியை யொழிப்பார்கள். ஒன்று மறியாத நிர்மூடனே யாயினும் விபூதியைச் சம்பாதித்து நெற்றியில் தரிப்பானானால், அவன் தன்னுடைய பிதிர்கள் அநேகரை நரகத்தில் விழவொட்டாமற் காத்துச் சிவலோகத்திற் சேர்ப்பான். பத்தியோடு விபூதியைத் தரிப்பவர்கள் இவ்வுலகத்தில் எல்லாப்போகங்களையு மநுபவித்துத் தேவவிமானத்திலேறிச் சென்று பொன்னுலகத்தில் அரம்பாஸ்திரீகளுடன் வாழ்ந்திருந்து பின்பு சிவசாயுச்சியமடைவார்கள். விபூதியின் மகிமை வேதங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்

கின்றது. உனக்கெளிதாகத் தெரியும்படி நாம் மிகவுஞ் சுருக்கிச்சொன்னோம்' என்றருளிச்செய்து, பரமசிவன் எழுந்தருளினார். சற்குமார முனிவரும் பிரமலோகம்போய்ச் சேர்ந்தார். இத்தன்மையுள்ள விபூதியின் மகத்துவம் எம்மாற்சொல்லி முடியுமோ? இந்த விபூதி பட்டதனாலன்றோ அரக்கனாயிருந்த நீ அமரனானாய்' என்று வாமதேவமுனிவர் சொல்லி, விபூதியையள்ளி அவனுக்குங் கொடுத்து, மந்திரோபதேசமுஞ் செய்து 'இம்மை மறுமை யின்பங்களைப்பெற்றுவாழக்கடவை' என்று ஆசீர்வதிக்க, அவன் அவருடைய திருவடிகளிற்பணிந்து விடைபெற்றுக்கொண்டு தேவலோக மடைந்தான். முனிவரும் தாம் போகவேண்டிய இடத்துக்குப் போயினார்.

எட்டாவது

சிவபூஜை மகிமை.

வேடன் சிவபூஜை கண்டுபிடித்த அத்தியாயம்.

விபூதி மகிமையைக்கேட்டு ஆனந்தமடைந்த நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி 'சுவாமீ! வேதங்களின் உண்மையைக் கற்றுணர்ந்த குருவினிடத்தில் உபதேசம் பெற்றோர் சிவபதம் அடைவரென்பதிற்சந்தேகமில்லை. அவ்வாறு கற்றுணராத குருவினிடத்தில் உபதேசம் பெறுபவர்கள் சிவபதஞ் சேர்வது எப்படி? இதை யருளிச் செய்ய வேண்டும்' என்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுகின்றார்:—

"சிவதருமக் கிரியையில் விருப்பம் உடையவர் ஆசாரியருடைய அறிவின் சிறுமை பெருமைகளைக் குறிக்கவேண்டுவதே யில்லை. உறுதியாகிய அன்பினாலேயே சிவகதியடையலாம். கல்லினாலாயினும், மண்ணினாலாயினும், மரமுதலியவற்றாலாயினும் அமைக்கப் பெற்ற ஒருருவத்தைப் பரமசிவனாகப் பாவித்து உறுதியுடைய அன்போடு பூசை செய்தால் அந்தக் கிரியையினாலேயே முத்தியடையலாம். ஆசான் சாஸ்திரவிசாரணை யில்லாதவனே யானாலும், சீஷன் விவேகமில்லாத மூடனே யானாலும், மந்திரம் பயனில்லாத சொல்லே யானாலும், அன்பு மாத்திரம் உண்டா யிருந்தால் சிவபதங் கிடைக்கும். நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த ஞானவானானாலும், அருமையான யாகங்கள் அநேகம் இயற்றினவனானாலும், நம்பெருமானாகிய பரமசிவனிடத் தன்பில்லாதவனானால் முத்தியடையான்; சந்தேகத்தோடு கருமங்களைச் செய்கிறவர்கள் ஒருபேறும் பெறமாட்டார்கள். பூர்வம் ஒரு வேடன் ஞானமில்லாத ஓரரசன் வேடிக்கையாகச் சொல்லிய வார்த்தையை உண்மையென்று நம்பிப் பரமசிவனைப் பூசித்து முத்திபெற்ற சரித்திரம் ஒன்றுண்டு. அதைச்சொல்லுகிறோம் கேளுங்கள்:-

பாஞ்சால தேசத்தை யாண்ட சிங்ககேது என்னும் அரசன் ஒருநாள் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். அவனுடன் அநேக வேட்டைக்காரர்கள் வேட்டை நாய்களோடுஞ் சென்றார்கள். அந்தப் பெரிய அரணியத்தில் அவர்கள் வேட்டையாடிக் கொண்டிருக்கையில்—சண்டன் என்னும் வேடன் தனித்து மிருகங்களைத் தேடிக்கொண்டுபோய்ப், பாழடைந்திருந்த ஓர் கோயிலை யடைந்து, அதனுள் உருவழிந்து விழுந்

திருந்த சிவலிங்கத்தைக் கண்டு, ஆசைபோலெடுத்துக்கொண்டு வந்து, அரசனுக்குக் காட்டி, 'ஐயா! இந்தச் சிவலிங்கத்தைப் பூசிக்கும் முறைமையைச் சொல்லவேண்டும்' என்று கேட்டான். அரசன் கைகொட்டி நகைத்து வேடிக்கையாக 'வேடனே! சிவலிங்கத்துக்குத் திருமஞ்சனநீரால் அபிஷேகஞ் செய்து, சந்தன புஷ்பங் தரித்துத் தூப தீபங் கொடுத்துச் சுடலைச்சாம்பல் கொண்டுவந்து எதிரில் வைத்துத் துதிசெய்து, பாலும் அன்னமும் நிவேதித்து, அன்புடன் அடிப்படிப் பூஜைசெய்' என்றுசொல்ல, வேடன் இஃதெல்லாம் உண்மையென்றே உறுதியாக நம்பிச் சிறிதும் பிசகாமல் பூஜைசெய்துவந்தான்.

ஒருநாள் பூஜைசெய்ய ஆரம்பித்துப் பூஜா திரவியங்களெல்லாஞ் சரியா யிருக்கின்றனவோ வென்று பார்க்கையில், சுடலைச் சாம்பல் இல்லாமலிருக்க, உடனே ஓடிப்போய்ச் சுடலைகளையெல்லாந் தேடிப்பார்த்தும் சாம்பல் அகப்படாமையால் மனம் வருந்தி வீட்டுக்கு வந்து, மனைவியை நோக்கி 'மாதே! நம்மரசன் அன்றுசொன்ன முறைமைப்படி இன்றுவரையில் சிவ பூஜையைக் குறைபாடில்லாமற் செய்துவந்தேன். பூஜைத் திரவியங்களில் இப்போது ஒன்றில்லாவிடில் பூஜைக்கிரமந் தப்பிப்போம். சிவபூஜைதவறி இந்த நாற்றவுடலை வைத்துக் கொண்டிரேன். இறந்துபோவதே திண்ணம்' என்றுசொன்னான். மனைவி 'இப்போது நேரிட்ட குறைபாடு யாதோசொல்லும்' என்ன, சுடலைச் சாம்பலில்லாமையைத் தெரிவித்தான். வேடிச்சி 'நாயகரே! இதற்காக நீர் விசனப் படவேண்டாம், நம்முடைய குடிசையைக் கொளுத்திவிட்டு நான் அந்தத்தீயில் விழுந்து இறந்துபோகிறேன். அந்தச்சாம்பலைக் கொண்டு சிவ

பூஜையைக் குறைபாடில்லாமற் செய்யும்' என்று சொல்ல, வேடன் 'பெண்ணே! நன்மனைவியை வைத்துக் கொண்டு இல்லறம் நடத்தவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். நீயும் மங்கைப்பருவ முள்ளவளும் இதுவரையிற் புத்திர சம்பத்தடையாதவளுமா யிருக்கின்றாய். இன்பம் அநுபவிக்க வேண்டிய இவ்விளமைப்பருவத்தில் நீ தீயில்விழுந்திறத்தல் நீதியா? புத்திரனில்லாமல் நீ இறந்துவிட்டால் என்குலத்தாரையெல்லாம் நரகத்திலிருந்து மீட்பவர் யாவர்? இனி இந்த வேடர்குலத்தையும் யாவர் காப்பாற்றுவார்?' என்று வருந்திச்சொன்னான். அதைக்கேட்டு அவள் 'பிராணேசா! பரமசிவனுடைய திருத்தொண்டை மேற்கொண்டு இறக்கப்பெற்றால் அதைப்பார்க்கிலும் விரும்பத்தக்க மேலானபொருள் என்னிருக்கின்றது? ஆதலால் தடுக்கவேண்டாம்' என்று பிரார்த்திக்க, வேடன் 'அப்படியேசெய்' என்று உத்தரவுகொடுத்தான். அவள்போய் ஸ்நானஞ்செய்துவந்து ஆடையாபரண முதலிய அணிந்துகொண்டு, கணவனைவணங்கி, வீட்டின்மேல் நெருப்பைப்போட்டுப் பிரதக்ஷிணம்பண்ணி நின்று, பரமசிவனைத் தியானித்து ஸ்தோத்திரஞ்செய்து, அந்தத்தீயில்விழுந்து சாம்பலானாள். அந்தச்சாம்பலையெடுத்து வேடன்பூஜைசெய்தான். பூஜைமுடிந்தவுடனே நிர்மால்யத்தை யெடுத்துக் கொண்டுபோக நாடோறும் வருவதுபோல் அன்றைத்தினமும் அவன் மனைவிவந்து நின்றாள். வேடன்கண்டு 'இஃதென்ன ஆச்சரியம்! நம்முடைய மனைவி தீயில் விழுந்திறந்ததும் அந்தச் சாம்பலை யெடுத்து நாம் பூஜைசெய்ததும் கனவோ! அல்லது நினைவோ! இறந்தவள் எதிரில்வந்து நிற்கின்றாள்! வெந்து

போனவீடும் மறுபடி தோன்றுகின்றது! இதென்ன காரண மோ தெரியவில்லை' என்று வியப்புற்று மனைவியைக் கேட்க, அவள் 'என் பிராண நாயகரே! வீட்டில் நெருப்பை வைத்து மூண்டெரிகையில் அதில் விழுந்தது தெரியுமே யன்றி வேறொன்றும் அறிந்திலேன். இப்போது நித்திரை நீங்கின வர்போல் வந்தேன்' என்றாள். வேடன்கேட்டு மகிழ்ச்சி யடைந்தான். அப்போது கோடிசூரியப் பிரகாசம் பொருந் தியதேவவிமானம் ஆகாயத்திலிருந்து இறிங்கிவந்தது. அதில் வந்த சிவகணநாதர்கள் 'வேடனே! உன்னையும் உன்மனைவி யையும் இந்த விமானத்தில் ஏற்றிக்கொண்டுவரும்படி எம் குரு வாகிய பரமசிவன் எங்களுக்குக் கட்டளையிட் டனுப்பினார். ஆதலால் வருவாய்' என்று அவனையும் அவன் மனைவியையும் விமானத்திலேற்றிக்கொண்டு பூலோகத்தா ரெல்லாந்தொழ ஆகாயமார்க்கமாய்ச் சென்று, நூறு அஸ்வமேதயாகஞ் செய்த வர்களுக்குங் கிடைக்காத சிவலோகத்திற் சேர்த்தார்கள். அங்கே அவர்களிருவரும் பேரின்ப வாழ்வில் மகிழ்ந்திருந் தார்கள்.

ஆதலால் சிவபூசைக்குரியது அன்பினுண்டாகும் உறுதிப்பாடேயன்றி வேறொன்றுமில்லை. வேதத்திற் சொல்வ தும் இதுவேயாம்" என்று சூதமுனிவர் சொல்லியருளினார்.

57

ஒன்பதாவது

உமாமகேசுரபூசை மகிமை.

"முனிவர்களே! உமாமகேசுர பூசையானது தன்னை அனுஷ்டிப்போர்க்கு நன்மைகளெல்லாம் தரத் தக்கது. அதன்பெருமையைச் சொல்லுகிறோம் கேளுங்கள்:—

மகத நாட்டிலே வேதவிரதன் என்றொரு பிராமண னிருந்தான். அவனுக்கு மகா சௌந்தரியமுள்ள சாரதை யென்றொரு புத்திரி யிருந்தாள். அவள் மங்கைப் பருவ மடைந்தபோது, அந்நாட்டுராசனுக்குப் பிராண சிநேகனான பத்ம நாபன் என்னும் பிராமணன் தன் மனைவி யிறந்து விட்டதனா லும், தனக்குத் திரண்ட திரவிய மிருந்ததனாலும், தன் மூப் புப் பருவத்தையும் யோசியாமல் விவாகஞ் செய்துகொள்ள ஆசைகொண்டு, அவளைத் தனக்கு மணம்பேசும்படி சில முதி யோரை யனுப்பினான். அவர்கள் சாரதையின் தகப்பனிடத் திற் சென்று தாங்கள் வந்த காரியத்தைச் சொல்ல, அவன் 'நாமிப்போது ஏழையா யிருக்கின்றோம். பெண் கொடுக்க மாட்டோமென்று சொன்னால் அந்தப் பிராமணன் துஷ்ட னானதாலும், இராசனுடைய பலமிருப்பதனாலும் பலாத்கார மாக நம்முடைய கன்னிகையை விவாகஞ்செய்து கொண்டால் நாமென்ன செய்கிறது' என்று யோசித்துப் பெண்கொடுக்க உடன்பட்டுச் சொல்லி யனுப்பினான். கிழப் பிராமணன் அதைக்கேட்டு மனமகிழ்ந்து வந்து சாரதையை வேதவிதிப்படி

விவாகஞ் செய்துகொண்டான். அன்று சாயங்காலம் அவன் குளத்துக்குப் போய்ச் சந்தியாவர்தன முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வருகையில் பாம்பு கடித்து இறந்தான். அதைக்கண்ட சுற்றத்தார் 'ஐயோ! விவாகஞ் செய்துகொண்ட மனைவியின் இன்பத்தை ஒருதினமாகிலும் அநுபவிக்காமல் இப்படி மாண்டானே' என்று புலம்பி அவனுக்குச் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்து முடித்தார்கள். சாரதை யிறந்த தன் கணவன் கலவியின்ப மநுபவிக்குங் காலங்கடந்த கிழவனாதலின், மிகுந்த துயரடையாவிடினும் மாங்கலியத்தை யிழந்ததுபற்றி வியாகுலித்தவளாய்த் தன்பிதாவின் கிரகத்தை யடைந்திருந்தாள்.

இவ்வாறு சிலமாதஞ் செல்லுகையில் நெடுங்காலமாயிருப்பவரும், வேதாகம சாஸ்திரங்களிற் றெளிந்தவரும், நல்லொழுக்கத்திற் சிறந்த தவ சிரேஷ்டருமாகிய நயித்துருவ முனிவர் தம்மை யடுத்திருந்த ஒரு ருஷியைச் சாரதையின் வீட்டுக்கு அனுப்பினார். அவர் அவ்விடம் வந்தபோது சாரதையின் தாயுந் தகப்பனும் ஏதோ ஒரு காரியத்தைப்பற்றி வெளியே போயிருந்தார்கள். தனியாயிருந்த சாரதை அவரைக்கண்டு 'நம்முடைய குலதெய்வமே முனிவர் வடிவங் கொண்டு எழுந்தருளியது' என்று மகிழ்ச்சி யடைந்து எதிர்சென்று வணங்கி, அவர் பாதங்களை அலம்பி உள்ளழைத்துப்போய் ஆசனத்திருத்தி அவர் பேரெளியிலுண்டா யிருந்த வியர்வை நீங்க விசிறிப், புநுகு முதலிய வாசனைத் திரவியங்கள் சேர்ந்த எண்ணெய் தேய்த்துப் பனிநீர்விட்டு ஸ்நானஞ் செய்வித்துப் பரமசிவனை ஆராதிப்பதுபோல் அவரை உன்னத ஆசனத்தில்வீற்றிருக்கச்

செய்து, பூமாலைசூட்டி, சந்தனம்பூசி, தூபதீபாராதனை செய்து, இனிதாகச் சமைத்த அன்னமும் படைத்துப் புசிக்கும்படி பிரார்த்தித்தாள். முனிவர் அன்னம் உண்டு, அவளுடைய பத்திக்காக மிகுந்த களிப்படைந்து 'மாதே! நீயும் உன் கணவனும் நெடுங்காலம் இன்ப மநுபவித்து நல்ல புத்திரனையும் பெற்று வாழ்ந்திருக்கக் கடவீர்கள்' என்று ஆசீர்வதித்தார். இதைக்கேட்ட சாரதை ஆச்சரியப்பட்டு 'ஐயோ, முனிவரே! மாங்கலிய மிழந்த எனக்கு நீர் செய்த ஆசீர்வாதம் பட்டுப் போன பயிரிற்பெய்த மழைபோற் பயனில்லாமல் வீணாகிவிட்டதே. முன் ஜன்மத்திற் செய்த தீவினையால் இளமைப் பருவத்திலேயே கைம்பெண்ணாகித் துன்பமநுபவித்துக் கொண்டிருக்கும் அடியாள், நீர் அநுக்கிரகஞ் செய்த இன்பங்களை யெங்ஙனம் அடைவேன்' என்று வருந்தப்பட, முனிவர் 'அம்மா! நான் நேத்திரமில்லாதவன்; உன்னிலையை யறியேன்; ஆகிலும் என் வார்த்தை பலிதமாகும்படி செய்கின்றேன். இதை நீ உறுதியாக நம்பு. உமாமகேசுரம் என்றொரு விரத முண்டு. அதை நீ அநுஷ்டித்தால் நினைத்த காரியங்களெல்லாஞ் சித்தியாகும்' என்றார். 'அதை யநுஷ்டிக்கும் முறை யாதோ?' என்று சாரதை கேட்க, முனிவர்சொல்லுகின்றார்:—

'சித்திரை அல்லது மார்கழிமாதத்திற் பூர்வபக்ஷத்திற் பொருந்திய சுபதினத்தில், இந்தவிரதத்தை ஆரம்பித்து அஷ்டமி, சதுர்த்தசி, பருவம், அமாவாசை என்னும் நான்கு திதியிலும், தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்துவந்து பூஜாமண்டபம் அமைத்து, அதைப் பூங்கொத்துக்களாலும் நவரத்தினமாலைகளாலும் அலங்கரித்து, அம்மண்டபத்திற் பசும்பொன்னினாற்

செய்த பார்வதி பரமேசுவரவிக்கிரகங்களைத் தாபித்துப் பஞ்ச கவ்வியத்தால் சுத்திசெய்து, தேனும் கருப்பஞ்சாறும் முப் பழச்சாறும் கலந்து சாத்தி, பஞ்சாக்ஷர மந்திரத்தையும் ஏகா தசருத்திர மந்திரத்தையும் ஓதி அபிஷேகஞ்செய்து, பின்பு உடையவரைப் பொற்பீடத்தி லிருத்தி, வேறோர் ஆசனத்தி லிருந்துகொண்டு பிராணாயாமஞ் செய்து, விநாயகரை னிடத்தமைத்து, மனத்தையொருவழியில் நிறுத்தி ஈசுவரனை யுந் தேவியையுந் தியானித்துத் துதித்து பாத்தியாசமனார்க் கியங் கொடுத்து, சந்தனமணிந்து, பூமாலைசாத்தி, மலர்களா லருச்சித்துப், பாலன்னம் முதலிய நிவேதித்து, தூமாக்கினி யிற் பசுவின் நெய்யிட்டுத் தூபமிட்டு துதிசெய்து, தூப தீபங்காட்டி, நீராஞ்சனஞ்செய்து, அப்பால் பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் உத்தியாபனஞ்செய்து, ஒரு பிராம ணனை அவன் மனைவியுடன் வரவழைத்து, அவர்களைப் பரம சிவனும் பார்வதியுமாகப் பாவித்து, அருச்சித்து, அன்னம் அளித்து, சூரியாஸ்தமனமாகும்போது பூசையை நிறைவேற்றி, யாகசேஷத்தைப் புசிக்கவேண்டும். இப்படியே மாதந்தோறும் இரண்டுபக்ஷத்திலும் மேற்சொன்ன திதிகளிலே பூஜைசெய்ய வேண்டும். ஒருவருஷமானபின்பு பரமசிவனையும் பார்வதி தேவியையும் தியானித்து, உருத்திரசமகமெடுத்தோதி, தேன், பால், இளநீர், தயிர், கஸ்தூரிகலந்தநீர், இவைகளா லபிஷே கஞ்செய்து, சந்தனம் அணிந்து, மாலைசாத்தி, அன்னம் நிவே தித்துத் துதிசெய்து, சாஷ்டாங்கமாகப்பணிந்து, பூஜையை முடித்து, ஆடையாபரண முதலியவற்றை ஆசாரியருக்குக் கொடுத்து, பிராமணசந்தர்ப்பணைசெய்து, அவர்களுக்கு வேண்

டிய பொருள்களும் உதவிப், பின்பு பந்துக்களோடு போசனஞ் செய்து விரதத்தை முடிக்கவேண்டும். இதுவே சிவாகமவிதி யாகும். இந்தவிரதத்தை யாவரேனும் மேற்சொல்லிய முறை மைப்படி அநுஷ்டிப்பார்களானால், அவர்களுடைய இருபத் தொரு தலைமுறைச் சுற்றத்தாரும் தேவலோகஞ் சேர்ந்து இன்பமநுபவித்து, அதற்குமேல் பெறுதற்கரிய பேரின்ப பதவியை அடைவார்கள். ஆதலால் நீயுமிப்போதே இந்த விரதத்தை அநுஷ்டிக்கத் தொடங்கு. நீ நினைத்தகாரியங் கை கூடும்' என்று முனிவர் சொல்ல, சாரதையும் அப்படியே செய் யத் துணிந்தாள்.

அந்தச் சமயத்தில் வெளியே போயிருந்த அவள் தாயுந் தகப்பனும் வீட்டிற்குவந்து முனிவரைக்கண்டு நமஸ்காரஞ் செய்ய, அவர், சாரதை தம்மைப்பத்தியோடு உபசரித்ததையும் அவளுக்கு நன்மையுண்டாகத் தாம் அநுமதித்து அருளிச் செய்ததையும் சொல்லியருளினார். அவர்கள் 'சுவாமீ! தாங் கள் இவ்விடம் எழுந்தருள நாங்கள் என்னதவஞ்செய்தோமோ? இனி யெங்களுக்குக் குறையொன்றுமில்லை. எங்கள் பெண் ணுக்கு நேரிட்ட கைம்மைத்தன்மை நீங்கும் வண்ணம் தேவ ரீர் பன்னிரண்டுமாதமும் இந்தப்பதியிலே தானேயிருந்து உமாமகேசுர விரதத்தை நிறைவேற்றுவிக்கவேண்டும்' என்று இரந்து கேட்டுக்கொள்ள, முனிவர் 'அப்படியே செய்கிறேன். நீங்கள் துயரநீங்கி யிருங்கள்' என்று சொல்லிவிட்டு, ஒரு பன்னசாலைக்குப்போய் பரமசிவனைப் பூசித்துக்கொண்டிருந் தார். சாரதை விரதத்தைத்தொடங்கி அநுஷ்டித்து வந்தாள்."

உமாமகேசுரபூஜாமகிமை தொடர்ச்சி.

உமாமகேசுரபூஜாபலம் உரைத்த அத்தியாயம்.

"சாரதை தான் தொடங்கின விரதத்தைப் பன்னிரண்டு மாதமும் அநுஷ்டித்து முடித்துப், பிராமண சந்தர்ப்பணை முதலியசெய்து, அன்றிராமுழுதும் பரமசிவனை ஸ்தோத்திரஞ்செய்து கொண்டிருந்தாள். முனிவரும் அங்ஙனமே செய்துகொண் டிருந்தார். அப்போது பார்வதி தேவியார் பிரசன்னமாக, சாரதையும், முன்னிருந்த அந்தகத்தன்மை நீங்கிப் பார்வையைப்பெற்ற முனிவரும் கண்டு பெருமகிழ்ச்சியடைந்து, அம்பாளுடைய அடிக்கமலத்தில் வீழ்ந்து வணங்கினார்கள். தேவி அவர்களை யெடுத்தருளி 'முனிவனே! மாதே! உங்களிடத்தில் மகிழ்ச்சியடைந்தோம். வேண்டிய வரங்களைக் கேளுங்கள்' என்ன, முனிவர் 'தாயே! நான் வந்தபோது இந்த மாது எனக்குச் செய்த உபசாரத்தால் நான் மனமகிழ்ந்து, அப்போதெனக்குப் பார்வை தெரியாதானபடியினாலே, இவள் கைம்பெண் என்றறியாமல் 'தீர்க்க சுமங்கலியாய்ப் புத்திர பாக்கியத்தோடு வாழக்கடவை' என்று ஆசீர்வதித்து விட்டேன். அது தப்பாதபடிக்கு அருள்செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதற்கு உமாதேவியார் அருளிச்செய்கின்றார்:—

'முனிவனே! இந்த மாதுக்கு முன்பிறப்பில் பத்மினி யென்று பெயர். தமிழ்நாட்டுப் பிராமணன் ஒருவன் தன் மனையாளிருக்கும்போதே இவளை இரண்டாவது விவாகஞ்

செய்துகொண்டான். அதுமுதல் அவனை இவள்தன்பேரழகினால் மயக்கித் தன் னிடத்திலேயே விருப்பங்கொள்ளவும், மூத்தவள் முகத்தையும்பாராமல் தள்ளவுஞ் செய்தாள். அதனால் அவள் மிகவும் மனம்நொந்து சிலநாள் சென்றபின் இறந்தாள். அதற்கப்பால், அயல்வீட்டிலிருந்த ஓர் பிராமணன் இவளுடைய சௌந்தரியத்தைப் பார்த்து மோகங்கொண்டு பலாத்காரமாய்ப் புணரப்பிரயத்தனப்பட, இவள் தப்பித்துக் கொண்டுவந்து விட்டாள். அந்தப்பிராமணன் இவள்மேல் கொண்ட காமத்தினாலேயே நாளுக்குநாள் மெலிந்து இறந்தான். இவ்வாறு இவள் கற்புநிலை தவறாதிருந்தும் தன் சக்களத்திக்கு வஞ்சனைசெய்தபாவத்தால் இப்பிறப்பில் இளமைப் பருவத்திலேயே கணவனை யிழந்து கைம்பெண்ணானாள். ஆயினும் எம்மைப் பத்தியோடு பூசித்தபடியால் இவள் பாவங்களெல்லாந் தொலைந்து போயின. முன் பிறப்பில் இவள்மேல் மோகங்கொண்டு இவளை அநுபவியாத துயரத்தால் இறந்த அண்டைவீட்டுப் பிராமணன், ஒருதலைக் காமம் கூட்டுவிக்க இப்பிறப்பிலும் இவளுக்குக் கணவனானான். ஆயினும், இவளை அநுபவியாமல் பாம்பு கடித்திறந்தான். அவன் இவள் கணவனல்லன். முன்பிறப்பில் இவளுக்குக் கணவனா யிருந்தவன் இப்போது மதுராபுரியிலே வேறொரு கன்னிகையை விவாகஞ் செய்துகொண்டு செல்வத்தோடு வாழ்கின்றான். இனி அவனும் இவளும் சொப்பனந்தோறும் புணர்ந்து இன்பமநுபவிப்பார்கள். இவர்களுக்கு ஒரு சற்புத்திரனும் பிறப்பான். அந்தப் புத்திரனை அவன் சொப்பனந்தோறுங் காண்பான்' என்றருளிச்செய்து பின்பு சாரதையைநோக்கி 'மாதே!

சொப்பனத்திற் காணும் உன் புருஷனைச் * சாக்கிரத்திலும் கண்டு களிப்படைவாய்; அவனும் உன்னைத் தன்மனைவியென் றறிந்து கொள்வான்; அப்போது உன் புத்திரனை அவனிடத் தில் ஒப்புவித்து நீ அநுஷ்டித்த விரதபலத்திலும் பாதி அவ னுக்குக்கொடு. நீங்கள் சாக்கிராவஸ்தையிற் புணராமற் கனவு தோறுமே புணர்ந்து இன்புற்று அதில் வெறுப்புண்டா கும் காலத்தில் இவ்வுடல் நீங்கி நம்முடைய பதவியையடை வீர்கள்' என்று அநுக்கிரகஞ் செய்துவிட்டுப் பார்வதி தேவி யார் கைலையங்கிரிக் கெழுந்தருளினார். முனிவரும் அவ்விடத்தை விட்டுத் தாம் செல்லுமிடம் சென்றார்.

சாரதை பார்வதி தேவியாருடைய அநுக்கிரக பலத்தால் இராத்திரிதோறும் சொப்பனத்தில் தன் கணவன் வந்து கூடச் சுகித்துச் சிலகாலத்திற் கருப்பவதியானாள். அதன் உண்மை தெரியாத அயலவர் 'இவள் பதிவிரதா தருமத்தை இழ ந்து தன்குடிக்கு அவமானம் கொண்டுவந்தாள்' என்று பழித் தார்கள். அதைப் பாம்புகடித்திறந்து போனவருடைய பந் துக்கள் கேட்டு வெகு மனவருத்தமும் கோபமுங்கொண்டு சாரதையின் தாய் தந்தையரிடத்துக்குவந்து, அங்கே ஓர் சபை கூட்டிச் சாரதையை வரவழைத்து எதிரில் நிறுத்திப் பலபேரும் பலவாறாகச் சொல்லித் தூஷித்தார்கள். அவர் களிற் பெரியோர்களாயிருந்தவர்கள் 'பிராமண குலத்துக்குக் கெடுதி உண்டாக்கின இவளைத் தலைமயிரையும், மூக்கையும், காதையும் அறுத்து ஊரைவிட்டுத் துரத்திவிடுங்கள்' என்று

* சாக்கிரம் - சாக்கிராவஸ்தை=விழித்திருத்தல்.

சொன்னார்கள். அதைக்கேட்டு 'அந்தப்படியே செய்கிறோம்' என்று சிலர் உக்கிரத்துடன் விரைவா யெழுந்தார்கள். அக் கணத்தில் 'மகாபதிவிரதையாகிய இந்தச் சாரதையை வேசை யென்று சொல்லுகிறவர்கள் நாவறுந்து துக்க சாகரத்தில் மூழ்குவார்கள்' என்று ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்தினின்றும் எழுந்தது. அந்தத் தெய்விக வாக்கைக் கேட்டவுடனே அங் கிருந்த சனங்களெல்லாம் மனங்களித்துச் சமுத்திரகோ ஷம்போல் ஆரவாரித்தார்கள். சாரதையின் தாய் தந்தைய ரும் சுற்றத்தாரும் துன்பம் நீங்கி யின்பமடைந்தார்கள். பழி கூறினோர், இவள் கற்பின் தன்மை அற்புதமானதென்று பயந்து தலைகுனிந்தபடி இரண்டு நாழிகைவரையில் பேசாதி ருந்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்திருந்த சிலர் 'இவ் வசரீரிவாக்குப் பொய்' என்றார்கள். உடனே அவர்கள் எல் லோரும் நாவறுந்து விழும்படி வாயினால் புழுக்களைச் சொரிந் தார்கள். அப்போது சாரதையின் பந்துக்கள் வந்து அவளைத் தழுவிக்கொண்டு அவள் கற்பின் பெருமையைப் புகழ்ந்து பேசி, மகிழ்ந்திருந்தார்கள். பிராமணர்களிற் சிலர் 'தெய்வம் பொய் சொல்லாது. இது நிச்சயமே. ஆகிலும் இவளுக்கு வந்த வசை எவ்வாறு நீங்கும்' என்று வருந்த அங்கிருந்த ஒரு சாஸ்திரி சொல்லுகிறார்:—

'அந்தணரே! சகலமும் பரமசிவனுடைய திருவிளையாட் டாய மாயை யாதலால் அதன் தன்மையை யாரறியக் கூடும்? மீன் வயிற்றினிடமாக யோசனகந்தி வந்து பிறந் தாள். எருமை வயிற்றிலே மகிடாசுரன் பிறந்தான். சத்திய புரத்திலிருந்த மாதர்கள் எல்லாம் ஒரு காரணத்தால் ஒரே

காலத்திற் கருப்பம் அடைந்திருந்தார்கள். வசுதேவன் என்பவன் பகைவர்களால் தளைபட்டிருந்தகாலத்தில் அவன் மனைவியாகிய உரோசணி கருப்பமடைந்தாள். அன்றியும், தேவவரத்தினாலும் முனிவர்களுடைய சாபத்தினாலும் சம்பவிக்கக்கூடாத காரியங்கள் சம்பவிப்பதுண்டு. அதற்குத் திருஷ்டாந்தமாக, முன்னாளிற் சாம்பன் என்பவன் வயிற்றில் முசலம் என்னும் இருப்புலக்கை பிறந்தது. ஒரு முனியின் மந்திரபலத்தால் யௌவனாசுவன் என்பவன் வயிற்றிலும் கருப்பம் உண்டாயது. திருமகளைப்போன்ற இந்தச் சாரதையும் ஒரு முனிவருடைய அநுக்கிரகத்தால் உமாமகேசுர விரதத்தை அநுஷ்டித்து அதன் பலத்தாற் கருப்பமடைந்து குற்றமற்றவளாயிருக்கின்றாள். இந்தக் காரியத்தை உத்தமகுணமுள்ள மாதரையனுப்பிக் கேட்டுக்கொண்டு வரச்சொல்லி உங்கள் மனதிலிருக்கும் சந்தேகத்தை ஒழியுங்கள்' என்று சொன்னார். எல்லோரும் 'இது சரிதான்' என்று ஒப்புக்கொண்டு பிராமண ஸ்திரீகளைச் சாரதையினிட மனுப்ப, அவர்கள் போய்ச் சாரதையைக் கேட்டறிந்து வந்து, முனிவர் வந்தது முதல் நடந்த விருத்தாந்தமெல்லாம் கிரமமாகச் சொல்ல அதைச் சபையார் கேட்டு 'இந்தப் பிராமணர் சொன்னதெல்லாம் உண்மைதான்' என்று அவரைப் புகழ்ந்து சாரதையையும் துதிசெய்து போயினர்.

இவ்வாறு சிறப்படைந்த சாரதை சிலநாளைக்குப் பின் இளங்கதிர்போல் ஒரு குழந்தையைப் பெற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தாள். அந்தப்பிள்ளை வளர்ந்து சாரதேயன் என்னும் பெயர்பெற்று மூன்று வயதிலே வேதாகம சாஸ்திரங்களை

யெல்லாம் தானே உணர்ந்து வல்லவனானான். அக்காலத்தில் மகா சிவராத்திரி வரச் சுவாமி தரிசனத்தின் பொருட்டு எல்லோரும் கோகன்னம் சென்றார்கள். சாரதையும் தன் புத்திரன், சுற்றத்தாருடன் கூடச் சென்றாள். பாண்டிநாட்டிலிருந்த அவள் கணவனும் புறப்பட்டு வந்தான். சாரதை தன்னைச் சொப்பனத்திற் புணரும் கணவனை எதிரில் கண்டவுடனே 'இவன்தான் நம்முடைய கணவன்' என்று தெளிந்து மிகவு மகிழ்ச்சி யடைந்தாள். அவனும் சொப்பனத்தில் கண்ட குறிகளால் 'இவள்தான் நம்முடைய மனைவி' யென்றும், அவளிடத்திலிருந்த தன்னுருவச் சாயலை யொத்த பிள்ளையை 'இவன் நம்முடைய புத்திரனே' என்றும், தனக்குள் அறிந்து பெருங்களிப்படைந்து, ஒரு தனி யிடத்தி லிருந்துகொண்டு சாரதையைப் பார்த்து 'மாதே! நீ யார்? உன்னை விவாகஞ் செய்துகொண்ட கணவன் யார்? உன்பிதா யார்? உன்னூர் யாது? உன்பெயரென்ன?' என்று வினவ, அவள் தன் மரபு முதலியவற்றையும், தான் இளமைப் பருவத்திலே கணவனையிழந்ததையும் சொல்லித் துக்கித்தாள். பின்பு அவன் அருகிலிருந்த பிள்ளையைப் பார்த்து 'இவன் உன் புத்திரனோ? அல்லது யார் புத்திரன்?' என்று அறியாதவன்போல் வினவ, அவள் 'இவன் என் புத்திரன்தான். சாரதேயன் என்னும் பெயருள்ளவன். சகல சாஸ்திரங்களையும் உணர்ந்திருக்கின்றான்' என்று சொன்னாள். அவன் இதைக் கேட்டுக் குலுங்க நகைத்துப் 'பிராமண குலத்திற் பிறந்த உன் செய்கை மிகவும் நன்றாயிருக்கிறது! உன்னை மணந்த கணவன் அன்றே யிறக்கப் பின்பு நீ புத்திரனைப் பெற்றது என்ன புதுமை! என்று

சொல்லச் சாரதை புன்சிரிப்புடனே 'என்னாயகரே! நீர் என்னை இவ்வாறு இகழ்வது உமக்குத் தகுதியோ? எல்லாம் உமக்குத் தெரியுமே, உம்மை நானறிந்திருக்கின்றேன், என்னையும் நீர் அறிந்திருக்கின்றீர். இதற்கு நம்மிருவர் மனமே சாக்ஷியன்றி வேறில்லையே' என்று சொல்லிப் பின்பு, முனிவர் தனக்கு ஆசீர்வதித்தபோது நடந்த சம்பாஷணையையும், அவர் சொற்படி தான் விரதமநுஷ்டித்ததையும் உமையவள் பிரத்தியக்ஷமாகி இரண்டு ஜன்மத்திலுந் தொடர்ந்து வந்த முறைமையைத் தெரிவித்து வரமளித்ததையும் சொல்லித் தன்புத்திரனை அவன்கையில் ஒப்புவித்துத் தான் அநுஷ்டித்த விரத பலத்திலும் பாதி அவனுக்குக் கொடுத்தாள்.

கோகர்ணத்திற் சிவராத்திரி திருவிழா முடிந்தவுடனே பிராமணன் சாரதையையும் புத்திரனையும் அவன் தாய் தந்தை முதலானவர்கள் சந்தோஷத்தோடும் அனுப்ப அழைத்துக் கொண்டு பாண்டிநாட்டிலுள்ள மதுராபுரியிற் சேர்ந்து அநேக நாள் சாரதையின் போகத்தைக் கனவி லநுபவித்துக் கொண்டிருந்து இறந்துபோனான். உடனே சாரதையும் தீயில் மூழ்கி கணவனைச் சேர்ந்து இருவருமாக ஒரு திவ்விய விமானத்தின் மேலேறிச் சென்று சுவர்க்க லோகத்தை யடைந்து அங்குள்ள போகங்களை யநுபவித்துப் பின்பு அவைகளையும் வெறுத்துப் பேரின்ப வீடாகிய சிவபதமடைந்தார்கள்.

இந்த உமாமகேசுர விரத சரித்திரத்தைக் கற்றவர்களும், கேட்டவர்களும், பிறருக்குச் சொன்னவர்களும் சகல பாக்கியமும் பெறுவார்கள். இது நிச்சயம்.

பத்தாவது

உருத்திராக்ஷ மகிமை.

நைமிசாரணிய முனிவர்கள் பரமசிவனுடைய உருத்திராக்ஷ மகிமையையும் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூத முனிவர் சொல்லுகின்றார்:—

எவ்வளவு இழிவான தொழிலைச் செய்பவர்களே யானாலும், பரமசிவனைப் பூசியாதவர்களேயானாலும், உருத்திராக்ஷந் தரிப்பவர்கள் எவர்களோ, அவர்கள் சீவன்முத்தர்களாவார்கள் என்று வேதங்கள் சொல்லுகின்றன. நமது கடவுளுடைய திரிநேத்திரங்களினின்றும் உண்டாகிய இந்த உருத்திராக்ஷத்தைத் தரிப்பவர்கள் பாவங்கள் நீங்கிச் சிவஸ்வரூபம் பெற்றுத் தேவருலகத்தை யடைவார்கள். புண்ணிய தீர்த்தங்களிற் சென்று மூழ்குவதினாலும், அசுவமேத முதலாகிய யாகங்கள் செய்வதினாலும், சத்தகோடி மகாமந்திரங்களைச் செபித்தலினாலும், உண்டாகும் பலன்களைப் பார்க்கிலும் உருத்திராக்ஷந் தரிப்பதனாலுண்டாகும் பலன் எட்டுப்பங்கு அதிகமென்று அறிந்து உண்மையுணர்ந்த ஞானிகள் அதையே தரித்துக் கொள்வார்கள். ஆதலினாலே உருத்திராக்ஷ மணியிலும் சிறந்தபொருள் வேறொன்றில்லை. ஆயிரம் உருத்திராக்ஷ மணிகளை ஒருமிக்கத் தரிப்பவர்களெவர்களோ அவர்களை விஷ்ணு முதலிய தேவர்கள், பரமசிவன் என்றே நினைத்துப் பணிவார்கள். அந்த மணியைச் சிரசு, காது, கழுத்து, மார்பு,

தோள், கை, அங்குஷ்டவிரல் இந்த இடங்களில் கிரமப்படி தரித்துக்கொள்பவர்கள் சிவபதம் அடைவார்கள். மாணிக்க முதலிய இரத்தினங்களோடு சேர்த்துக் கட்டி ஆபரணமாகத் தரித்துக்கொள்ளும் புண்ணியவான்களுடைய பொன்னடிகளைப் பணிந்தோரும் பொல்லாப் பிறவியையொழிப்பார்கள். சிவநேசமில்லாதவர்களும், விபூதி, ருத்திராக்ஷந் தரியாதவர்களும், ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை அறியாதவர்களும், கழுதையாகவும், நாயாகவும் பிறந்திறந் துழல்வார்கள். உருத்திராக்ஷ வடத்தினால் செபிக்கும் மந்திரத்தின் பலனை யாவரறிவார்? உருத்திராக்ஷத்தோடு நீரில் முழுகுமவர்களுக்கு அந்த மணியிற்படும் நீர் சிவகங்கை தீர்த்தமாம். ஒருமுக முதல் பதினான்கு முகம் வரையிலுமுள்ள இந்த மணிகளி லொன்றைப் பூசைசெய்தால் புது சிவபூசையின் பலனைத் தரும். உருத்திராக்ஷத்தின் பெருமையைச் சொல்ல எவராலாகும். முற்காலத்திலே நடந்த ஒரு சரித்திரத்தைச் சொல்லுகிறோம் கேளுங்கள் :—

காஸ்மீரதேசத்திலே பத்திரசேனன் என்றொரு அரசனிருந்தான். அவனுக்கு ஒரு மந்திரியுண்டு. அவர்களிருவருக்கும், தருமன் என்றும், தாருகன் என்றும் இரண்டுபுத்திரர்களிருந்தார்கள். அவர்கள் சகல சாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்து வல்லவராகி ராஜலக்ஷணங்களி லெல்லாம் ஒரே தன்மையுள்ளவர்களாய் இணைபிரியாத சிநேகத்தோ டிருந்தார்கள். அந்தப் புத்திரர்கள் இரத்தினாபரணங்களையும் பரிமள கந்தங்களையும் தரியாமல் விபூதியும் உருத்திராக்ஷமுமே அணிந்துகொள்வார்கள். அரசனும் மந்திரியும் அவர்களைத் தனித்தனி அழைத்து ஆபரண முதலிய தரித்துக்கொள்ளும்படி வேண்

டிக்கொண்டார்கள். புத்திரர்களோ அவைகளை வெறுத்து மறுத்துவிட்டார்கள்.

இங்ஙன மிருக்கும்போ தொருநாள் பராசரமுனிவர் அரசனுடைய மாளிகைக்குவர அவன் அவரை எதிர்கொண்டு சென்று பணிந்து அழைத்துவந்து சோடசோபசாரமுஞ் செய்ய, முனிவர் ஆசீர் வசனஞ்சொல்லி ஆசனத்தில் வீற்றிருந்தார். அரசன் 'சுவாமீ! என் புத்திரனும் மந்திரி குமாரனும் இரத்தினாபரணங்களை யிகழ்ந்து அவைகளைக் கையாற் றொடாமலும் கண்ணாற்பாராமலும் தள்ளிவிட்டு, விபூதி ருத்திராக்ஷங்களையே தரித்துக்கொண் டிருக்கிறார்கள். அதன் காரணமின்னதென் றறிந்திலேன். அதை யெனக்குச் சொல்லியருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான். பராசர முனிவர் 'ராஜனே! அவர்கள் முற்பிறப்பில் தொடர்ந்த பழக்கத்தை யிப்பிறப்பிலும் விடாதிருக்கின்றார்கள். அதன் விவரத்தைக் கேள் :—

நந்திக்கிராமம் என்னும் ஊரில் மகாசௌந்தரியமுடைய மகாநந்தை என்னும் ஓர் கணிகை மாதிருந்தாள். பொன் மயமான அவள் வீட்டில் இராசகுமாரர்களும் மந்திரி குமாரர்களும் மிகுந்த திரவியங் கொடுக்கத்தக்க வைசியபுத்திரர்களும் கூட்டமாய்ச் சேர்ந்திருப்பார்கள். அவளிடத்துக்குவருகின்றவர்கள் ஓரிரவுக்கு உயர்ந்த செம்பொன் ஆயிரம் * கழஞ்சு கொடுக்கவேண்டும். அவள் சிவனடியார்களைக் கண்டால் சிவனென்றே பாவித்து உள்ளமுருகி வந்தனை செய்வாள். தரும

* கழஞ்சு = பத்துப்பணவிடை.

மும் மிருதியாகச் செய்வாள். தன் நாடக சாலையில் ஒரு சேவலும் குரங்குக் குட்டியும் தூணில் கட்டிவைத்து அவைகளுக்கு உருத்திராக்ஷமாலையை அழகாகத் தரித்துத் தானும் தோழிகளுமாக அவைகளோடு விளையாடிக்களித்து அவைகளிடத்தில் அன்பாயிருப்பாள்.

ஒருநாள் முனிவரைப்போல் விபூதி ருத்திராக்ஷந் தரித்த வணிகேசன் ஒருவன் அவள் வீட்டுக்கு வந்தான். மானந்தை கண்டு இவர் சிவனடியாராமெனப் பணிந்து அவரணிந்துகொண்டிருந்த இரத்தின கடகத்தைப் பார்த்து 'சுவாமி! இது மகா சிறப்புள்ளதாயிருக்கிறது. அரசரணியும் இரத்தின கடகமும் இதற்கொப்பாகாது' என்று சொல்லி அதை வாங்கிக்கொள்ள விருப்பங்கொண்டு 'இதன் விலையென்ன' என்று கேட்டாள். வைசியன் நகைத்துப் 'பெண்ணே! இதன்விலையைச் சொன்னால் அதைக்கொடுக்க உன்னால் கூடுமோ?' என்ன, மானந்தை 'ஐயா! என்போன்ற விலைமாதர்கள் ஒருபொருளை விலைகொடுத்தும் வாங்குவார்களோ? திருமால் விரும்பும் கவுத்துவமணியே யானாலும், விற்பவர்கள் கொண்டுவந்தால் அவர்களைப் புணர்ந்து அதைக் கிரகித்துக் கொள்ளுவோமேயல்லது விலைகொடுத்து வாங்குவது இந்த உலகத்திலில்லை. இந்தக் கடகத்தை யென் கையிலிடுவீரானால் மூன்றுநாள்வரையில் உம்முடைய மனைவிபோல் உம்மைச் சேர்ந்திருப்பேன்' என்றாள். வணிகேசன் 'மாதே! உன்னிஷ்டப்படிச் செய்கின்றேன். அந்த மூன்றுநாளும் வேறொருவரையுஞ் சேருகிறதில்லையென்று ஆணையிடு' என்று கேட்க, அவள் அங்ஙனஞ்செய்தாள். உடனே அவன், இரத்தினகடகத்தை அவள்

கையிலிட்டு, ஒரு மாணிக்க லிங்கத்தைக் காட்டி 'இதைப் பத்திரமாக வைத்திருந்து என்கையில் கொடுக்கின்றாயா?' என்ன 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லி அதை வாங்கிக்கொண்டுபோய் தன்னுடைய நாடகசாலையில் பத்திரப்படுத்திவிட்டு, மாலைப்பொழுது வந்த பின்பு மலரணையில் வணிகேசனுடன் கூடியிருந்து நித்திரைபோனான். அர்த்தராத்திரியில் அகஸ்மாத்தாய் நாடகசாலையில் தீப்பற்றிக்கொண்டு வீடு முழுதும் சுவாலித்து எரிக்க, இருவரும் திடுக்கிட்டெழுந்தோடினார்கள். மானந்தை வெகு விரைவாய்ச் சென்று நாடகசாலையில் கட்டியிருந்த குரங்கையும் கோழியையும் அவிழ்த்துவிட்டாள். அவைகள் அப்புறம் ஓடிப்போய் தீக்குத் தப்பிப் பிழைத்தன. வர்த்தகன் கொடுத்த மாணிக்கலிங்கமோ மானந்தைக்கு ஞாபகம்வருமுன்னே வெந்துநீறாய்ப்போயிற்று. அதை அவன்கண்டு துயரப்பட்டு 'பெண்ணே! நான் உன் கையிற் கொடுத்த சிவலிங்கம் வெந்து போனபடியால், என் வாழ்நாளும் இன்றே முடிந்துவிட்டது' என்ன, மானந்தை துக்கப்பட்டு கண்ணீர் ஆறாய்ப்பெருக அழுது சோர்ந்துவிட்டாள். அப்போது வணிகேசன் 'நீ துயரப்படவேண்டாம். எம்போலியர் இவ்வித துன்பம் நேரிடும்போது 'எப்படி உயிர் விடுகிறது' என்று இரங்குவார்கள். என் சிவலிங்கம் வெந்து நீறாய்விட்டதே. இனி தேவேந்திரன் முதலானவர்கள்வந்து தடுத்தாலும் கேளேன். தீயில் வீழ்ந்தே விடுவேன். தீமூட்டும்படி உத்தரவு செய்' என்றான். மானந்தை இதைக்கேட்டுத் திகைத்து 'ஐயா! வேண்டிய திரவியங்களைக்கொடுக்கிறேன். பிராமணர்களுக்குக் கொடுத்துப் பிராயச் சித்தஞ் செய்து

கொள்ளும்' என்ன, வணிகேசன் 'மாதே! நான் பூமியுந் தாங்கமாட்டாத பொன்னையுடைய குடியிற் பிறந்தேன். நீ யென்னை வறியவன்போல் நினைத்து என்றும் பொறுக்காத இந்த இழிவான வார்த்தையைச் சொல்லாதே. உடனே தீமூட்டு' என்று கோபமாய்ச் சொன்னான். மானந்தை இவர் நாம் சொல்வதைக் கேளார் என்று நிச்சயித்துக்கொண்டு ஏவலாளிகளை யழைத்து 'விரைவில் தீமூட்டுங்கள்' என்றாள். அவர்கள் சென்று அளவில்லாத விறகுகளை யடுக்கித் தீமூட்டி அதில் குடங்குடமாக நெய்யை ஊற்ற தீயானது சிகைவிட்டுக் கொண்டு மேலோங்கி வளர்ந்தது. அப்போது வணிகேசன் ஸ்நானஞ் செய்துவந்து தீக்குழியை மூன்றுதரம் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கி சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் தீயில் மூழ்கினான்.

இதைக்கண்டு ஆயாசங்கொண்ட மானந்தை சுற்றத்தாரைப் பார்த்துச் சொல்லுகிறாள்:—'கேளுங்கள். இந்தத் தீயில் விழுந்து இறந்துபோன வணிகேசர் கொடுத்தது இக் கடகம். இதன் விலைக்காக மூன்று நாள் அவருக்கு மனைவியாயிருக்கச் சம்மதித்துக் கொண்டேன். அந்த மூன்று நாளைக்குள்ளே அவரிறந்ததினாலே நானும் அவருடன் இந்தத்தீயில் விழுந்து இறந்து விடுகிறேன். இனி உயிருடன் வாழேன். அந்தச் சிவலிங்கத்தை என் கையிற் கொடுத்தபோது அவர் 'இது என் உயிர்போலிருப்பது. ஆகையால் பத்திரமாக வை' என்று சொன்னார். சொல்லியும் பாவியாகிய நான் மதிமோசம் போனேன். சிவலிங்கம் வெந்துபோய் விட்டபடியாலன்றோ அந்தச் சைவ சிரேஷ்டர் இறந்தார். இதெல்லாம் என் குற்றத்

தால் நேரிட்டதாதலால் நான் தீயில் வீழ்வேனே யன்றி சொன்ன சொல் தவறேன். அங்ஙனந் தவறினவர்கள் பாவிகளாய்த் துன்ப மநுபவிப்பார்களென்று நமதாண்டவன் அருளிச்செய்த வேதாகம புராணங்களில் விதித்திருக்கின்றதல்லவோ? ஆதலால், நீங்கள் என்னைக் குறித்து வருத்தப்பட வேண்டாம்' என்று அவர்களைத் தேற்றித் தன் திரவியங்களை யெல்லாம் தானம் பண்ணிவிட்டுப், பின்பு மௌனவிரதங் கொண்டு, ஒருவருடனும் பேசாமல் ஸ்நானஞ் செய்து வந்து, திரிபுரதகனஞ் செய்த மெய்ஞ்ஞானஸ்வரூபியாகிய பரமசிவனுடைய பாதாரவிந்தங்களைப் பணிந்து, தீக்குழியைப் பிரதக்ஷிணஞ் செய்து அதில் வீழப்போம்போது, கருணைக் கடலாகிய கைலாசபதி தரிசனமானார். அவருடைய திவ்ய தரிசனத்தைப் பெற்ற மானந்தை உடனே பூமியிலே விழுந்து பணிந்தாள். சுவாமி, அவளைப் பார்த்து 'அடியவளே! நீ தீயில் விழவேண்டாம். பொன் கடகத்துடன் வந்து உன்னுடன் அளவளாவி யிருந்து தீயில் விழுந்த வணிகன் நாமே. உன்னுடைய மெய்யன்பினை இவ்வுலகத்தாருக்குத் தெரிவிக்கும் பொருட்டு இப்படிச் செய்தோம். பொது மகளிரா யிருப்பவர்கள் பொருளாசையைவிட்டு உன்போல் சத்தியத்தைக் காப்பாற்றுவார்களோ! இவ்வுலகத்தில் இது அதிசயமான காரியம்! நீ யென்னபதவி யடைய விரும்புகிறாய் சொல்' என்று திருவாய்மலர்ந்தருள, மானந்தை யெழுந்து நின்று தொழுது சொல்லுகிறாள்:—

'தேவரே யாதி திரிபுவனந் தன்னோர்கள்
ஏவரே வாழும் பதமு மினிவேண்டேன்

மூவரே யாகிக் குணமூன்றாய் முத்தொழிற்கும்
காவலே யாகிக் கடந்துநின்ற காரணனே.'

'பிரமா, விஷ்ணு, ருத்திரர் என்னும் மும்மூர்த்திகளாயும், சாத்துவிகம், இராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களாயும், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்னும் முத்தொழிலுக்கும் அதிகாரியாயும், இவையெல்லாங் கடந்து நின்ற ஆதி காரணராயும் இருக்குங் கடவுளே! கிடைத்தற்கரிய உம்முடைய திவ்ய தரிசனத்தைப் பெற்ற அடியாள் இனி விரும்பத்தக்க பொருளும் உண்டோ? தேவரீருடைய தரிசன பலத்தினால் மோக்ஷ பதவியே எனக்குக் கிடைக்குமாதலால், நான் சுவர்க்க, மத்திய, பாதாளம் என்னும் மூன்று லோகங்களிலுமுள்ள தேவர் பதவிமுதலிய யாவர் பதவியையும் விரும்பேன். என் சுற்றத்தா ரெல்லாரும் துக்க சாகரத்தில் மூழ்காமல் அடியேனைப்போலவே சிவலோகத்திற்சேர்ந்து பேரின்பத்தில் எக்காலமும் ஒரே தன்மையராய் வாழும்படி கிருபை செய்ய வேண்டும்' என்று பிரார்த்தித்தாள். பரமசிவன் அங்ஙனமே அருளிச்செய்து கயிலையங்கிரிக் கெழுந்தருளினார். நாடகசாலை தீப்பற்றி யெரியுங்காலத்தில் யானைக்கூடத்தை அவிழ்த்துவிட ஓடிப்போய் கெடுங்கால மிருந்து இறந்துபோன குரங்கு உன் புத்திரனாகவும், கோழி மந்திரி குமாரனாகவும் பிறந்தன. இவர்களிருவரும் பூர்வவாசனையினால் விபூதியையும் உருத்திராக்ஷத்தையும் விரும்பி யணிந்து கொண்டார்கள். முன் பிறப்பில் உருத்திராக்ஷந் தரித்தபலத்தினால் இப்பிறப்பில் இராசகுமாரனும் மந்திரி குமாரனு மானார்கள். இவர்களிருவருமாக இத்தேசத்தை நெடுங்கா லாண்டிருந்து பரமசிவனுடைய திருவருளினால் பேரின்பம் எய்துவார்கள்' என்று பாராசர முனிவர் சொல்லி யருளினார்.

பதினோராவது

ஸ்ரீருத்திர மகிமை.

அரசன் இவைகளை யெல்லாங் கேட்டு மகிழ்ந்து பாராசர முனிவரை நோக்கி 'சுவாமீ! இனி என்புத்திரன் எவ்விதமாய் உலகாளுவான். இவனுக்கு ஆயுசு எவ்வள விருக்கின்றது. அதையும் அருளிச்செய்யவேண்டும்' என்ன, முனிவர் 'அரசனே! அதைச் சொன்னால் உனக்குத் துயரமுண்டாகும். ஆகிலும் பரமசிவனுடைய திருவருளால் உனக்கு யாதொரு துன்பமும் நேரிடாது. உன் புத்திரன் பாவமென்பது சிறிதுமில்லாதவன். அவனுக்கிப்போது பன்னிரண்டு *வயதாகிறது. இன்றைக் கேழாம்நாள் இறந்து விடுவான்' என்றிந்த வார்த்தையைச் சொன்னவுடனே அரசன் திடுக்கிட்டுப் பூமியில்விழுந்து அழுது துயர மடைந்தான். முனிவர் அவனைத் தமது கையா லெடுத்துக் கண்ணீரைத் துடைத்து முகத்தைக் கழுவிச் சோபத்தை நீக்கிச் சொல்லுகிறார்:—

'ராஜனே! மனிதருக்கு இன்பமுந் துன்பமும் பொருந்துவது இயல்பா யிருக்கின்றது. இரண்டையும் சமமாகப் பாவியாமல், இன்பம் வந்தால் சந்தோஷப்படுவதும், துன்பம்

வந்தால் துயரப்படுவதும் அறிவில்லாதவர்களுடைய செய்கையாம். ஆதலால் நீ வருந்தவேண்டாம். ஆதியிற் பரமசிவன் ராஜஸ குணத்தில் பிரமதேவரைச் சிருஷ்டித்து அவருக்கு நாலுவேதம், ஆறு சாஸ்திரங்களையும் அருளிச்செய்து, பின்னும் ஞானமாயும், உபநிடதப் பொருளாயு முள்ள ஸ்ரீ ருத்திர அத்தியாயத்தையும் அநுக்கிரகித்தார். அவ்வுபதேசம் பெற்ற பிரமதேவர் பதினாலு லோகங்களையும் சிருஷ்டித்து அவ்வுலகத்தி லிருப்பவர்கள் அஞ்ஞானம் நீங்கிக் கடைத்தேறும் பொருட்டு நான்கு முகங்களி லிருந்தும் நான்கு வேதங்களைத் தோற்றுவித்தார். அப்போது தென்திசை முகத்தில் தைத்திரிய வேதமுண்டாயிற்று. அந்த வேதத்தின் மத்தியில் ஸ்ரீ ருத்திர மந்திரம் உண்டாயிற்று. இம்மேலான மந்திரத்தை மரீசி முனிவர் முதலிய ஞானவான்கள் உணர்ந்து மற்றமுள்ளவர்களுக்கு உணர்த்தினார்கள். பிரமதேவர் முன் சொன்ன உலகங்களைச் சிருஷ்டித்துப் பின்பு தேவர், மனிதர், மிருகாதிகள், சூரிய சந்திரர், புண்ணிய பாவம், நன்மை தீமை, சுகதுக்கம், நினைப்பு மறப்பு, முதலிய எல்லாவற்றையும் உண்டாக்கி, இந்திரனைச் சுவர்க்கத்துக்கும் யமனை நரகத்துக்கும் அதிபதிகளாக்கினார்.

இவ்வாறு பிரமதேவர் உண்டாக்கிய சராசரங்களெல்லாம் பேதமில்லாமல் நெருங்கி ஒன்றும் இறவாமல் அதிகரித்து வரவே இயமனுக்குத் தொழிலற்று நரகமும் வெறுமையா யிருந்தது. இயமன் அதுகண்டு தன் இருத்தியுக்கால் அதனை நிரப்பவேண்டுமென்று நினைத்துக் காமம் முதலான பாவங்களை யழைத்து 'நீங்கள்போய் உலகத்திலுள்ள தருமம், நீதி, சத்தி

யம் முதலிய நன்மைகளை யெல்லாம்கெடுத்து உங்கள்தொழிலைச் செய்து நரகத்தைக் காக்கக் கடவீர்கள்' என்று கட்டளையிட்டான். காமம் முதலிய பாவங்கள் 'நல்ல காரியம் சொன்னீர்' என்று உடனே புறப்பட்டு உலகத்துக்கு வந்து, எல்லோரும் ஸ்ரீ ருத்திர மந்திரம் சொல்லிக்கொண் டிருக்கப் பார்த்து நடுக்கங்கொண்டு, திரும்பி யோடிப்போய் இயமனிடத்திற் சேர்ந்து 'ஐயனே! உன்னுடைய கட்டளையின்படி உலகத்திற் சென்றோம். அங்கே நதிக்கரை, தேவாலயம் முதலிய பரிசுத்த ஸ்தானங்க ளெங்கும் சமுத்திரங் கோஷிப்பது போல் முழங்கியொலிக்கும் ஸ்ரீ ருத்திர மந்திரத்தையெல்லோரும் ஓதுகின்றார்கள். அது தீப்போல் எங்களைச் சுட்டபடியால் ஓடிவந்துவிட்டோம். மற்ற எந்த மந்திரத்துக்கும் அஞ்சோம். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தோடு கலந்த ஸ்ரீ ருத்திர மந்திரத்தின் ஓரெழுத்துக்கும் நாங்கள் வருந்துவோம். நீ கட்டளையிட்டபடி நரகத்தைக்காக்க எங்களாலாகாது' என்று முறையிட்டன. இயமன் அதைக்கேட்டுக் கோபங்கொண்டவனாய்ப் பிரமதேவரிடஞ் சென்று பணிந்து 'ஐயா! உலகத்திலிருப்பவர்க ளெல்லோரும் ஸ்ரீ ருத்திர மந்திரத்தைச் செபித்தால் நான் உம்முடைய கட்டளைப்படி இருபத்தெட்டு நரகங்களும் தழைக்கும்படி செய்வதெப்படி? எல்லோருஞ் சிவலோகத்தை அடைந்தால் நரகத்துக் கிரையெங்கே? அதற்கிரை யுண்டாகும்படி செய்யும். இல்லாவிடில் என் அதிகாரத்தை விட்டுவிடுகிறேன்' என்று சொல்லப் பிரமதேவர் யோசித்துச் சோம்பலையும் துர்ப்புத்தியையும் பார்த்து 'நீங்கள் பூலோகத்திற் சென்று மனிதர்கள் ஸ்ரீருத்திர மந்திரம் ஓதுதலை யொழித்துத் தீமை

செய்யும்படி செய்யுங்கள்' என்று ஏவினார். அவைகள் அங்ஙனஞ் சென்று மனிதர்களுடைய மனதைக் கலக்க அவர்கள் ஸ்ரீ ருத்திரம் ஓதுதலைவிட்டுக் கிரமந் தப்பிப் பாவங்களைச் செய்து நரகத்திலும் குடியேறத் தலைப்பட்டார்கள். இயமனும் சந்தோஷமாய்த் தானிருக்கும் வைவச்சுத பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

ஆதலால் இயமனை விலக்கவேண்டுமானால் ஸ்ரீ ருத்திரத்தைச் செபித்தல்வேண்டும். எவர்களே யாயினும் இம்மந்திரத்தைச் சொல்லிப் பரமசிவனுக்கு அபிஷேகஞ் செய்கிற தீர்த்தத்தைச் சிரசில் புரோட்சித்துக் கொள்வாராயின் இயம தண்டனையினின்று நீங்குவார்கள். இம்மந்திரத்தைச் சொல்லிப் பரமசிவனுக்குத் திருமஞ்சனஞ் செய்யும் உத்தமர்கள் பதினாயிர வருஷம் சம்பத்துடன் வாழும்படியான பாக்கியத்தை அப்பொழுதே பெறுவார்கள். இதை நாடோறும் பத்தியோடு ஓதுபவர்கள் உண்மையாக மோக்ஷ மடைவார்கள். இப்போது உன் புத்திரனுக்கு ஸ்ரீ ருத்திர மந்திர தீர்த்த ஸ்நானஞ் செய்விக்கவேண்டும். ஆதலால் அதற்குரிய புண்ணிய மாதவர்கள் ஆயிரம்பேரை அழைப்பி' என்றார்.

அரசன் அதுகேட்டுத் துயரம் நீங்கிச் சந்தோஷமடைந்தவனாய் முனிவர்களை யழைத்துவரும்படி தூதர்களுக்குக் கட்டளையிடத் தூதர்கள் சென்று அப்படியே அழைத்து வந்துவிட்டார்கள். அப்பால் பராசர முனிவர் அதற்குரிய சடங்குகளை நடத்த அந்த ஆயிரம் முனிவர்களும் ஆயிரங் கும்பங்களிற் பூரித்திருக்கும் நீரைத் தொட்டுக்கொண்டு ஸ்ரீ ருத்திரஞ்

செபித்தார்கள்." இவ்வாறு ஆறுநாள் செய்து ஏழாம்நாள் ஆயிர முனிவர்களும் தங்கள் தங்கள் கையிலிருக்கும் கும்பநீர்த்தத்தினால் விதிப்படி அந்த இராச குமாரனுக்கு ஸ்நானஞ் செய்வித்தார்கள். செய்யவும் அவன் மயங்கிப் பூமியில் விழுந்தான். அதை அரசன் கண்டு துயரமடைய முனிவர்கள் ஸ்ரீ ருத்திர மந்திரஞ் சொல்லி இராசகுமாரனுக்கு விபூதி தரித்தார்கள். உடனே அவன் நித்திரைசெய் தெழுந்தவன்போல எழுந்திருந்தான். அப்போது இராசனுக்குப் பெருமகிழ்ச்சியுண்டாயிற்று.

உயிர்த்தெழுந்த பிள்ளை தகப்பனைப் பார்த்து 'என்னையனே! இவ்விடத்தில் நடந்த செய்தியைக் கேளும். மலை போன்ற கரியவடிவமும் இடிபோன்ற சொல்லும் உடைய ஒருவன், கையில் தண்டாயுதமும் பாசக்கயிறும் எடுத்துக்கொண்டுவந்து மிகுந்தகோபத்தோடு என்னைப் பிடித்துவருத்த அந்தச் சமயத்தில் சிலர் வந்து அவனைப் பிடித்துக் கட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் எவர்களோ நான் அறியேன்' என்றுசொல்ல, அரசன் சந்தோஷ மடைந்து தன் புத்திரனையணைத்துக்கொண்டு, முனிவர்களுக்கு உபசார வார்த்தைகள் சொல்லி யாவருக்கும் வேண்டியமட்டும் சொர்ணதானம் வழங்கி, அவர்களுடன் போஜனஞ் செய்து சிங்காசனத்தில் வந்திருந்தான்.

அத்தருணத்தில் நாரத முனிவர் அங்கேவர, அரசன் விரைவி லெழுந்துபோய் அவரை யெதிர்கொண்டு வணங்கி அழைத்துவந்து ஆசனத்திருத்தி 'சுவாமீ! நீர் சகல லோகமும் நொடிப்பொழுதிற் சென்று காணவல்லீர். ஆதலால்

ஏதாவது அதிசயம் உண்டாயிருந்தால் சொல்லியருளவேண்டும்' என்றுகேட்க, நாரதர், 'அரசனே! உன் புத்திரனுடைய செய்தியைக்கேள். ஆகாய மார்க்கத்தில் நாம் போம்போது காலனானவன் பாசக்கயிறும் தண்டாயுதமும் கையிலேந்திக்கொண்டு உன் புத்திரனாகிய இவனைப் பிடித்துக்கொண்டு போனான். அப்போது பரமசிவனால் அனுப்பப்பட்ட வீரபத்திரர் தமது கணங்களுடன் வந்து உன் புத்திரனை மீட்டுக்கொண்டு காலனை உதிரம் ஒழுகும்படி பாசத்தினால் கட்டிக்கொண்டுபோனார். அதை இயமதருமராசன் கண்டு வீரபத்திரரிடத்துக்கு வந்து 'தக்கன் யாகத்தை அழித்த சுவாமீ! இவனைக் கட்டிக்கொண்டு போம்படி இவன் என்ன குற்றஞ் செய்தான்' என்ன, அவர் 'பத்திரசேன ராசன் புத்திரன் ஸ்ரீ ருத்திர மந்திர மகிமையால் பதினாயிர வருஷம் உயிருடனிருப்பவனாக விருக்க, அதை யறியாமல் பன்னிரண்டு வயதில் அவனைக் கட்டிப்பிடித்த குற்றத்தால் இவனைத் தண்டித்து ராஜகுமாரனை விடுவித்து வரும்படி பரமசிவன் அருளிச்செய்தார். ஆதலால் அவாறு ஏவலைச் செய்ய வந்தோம். இந்தப் புத்திரன் சிவபிரானுக் கடிமையானவன். இவன் பதினாயிர வருஷம் ஆயுசுடனிருப்பான். இவனுக்குத் துன்பம் விளைத்த இந்தக்காலனைப் பரமசிவனுடைய சந்நிதிக்குக் கொண்டுபோகிறோம்' என்றார். தருமராசன் திகைத்து இவனுக்குப் பன்னிரண்டு வயதுதானென்று நிச்சயமாய்ச்சொல்ல, வீரபத்திரர் 'சித்திரகுத்தன் கணக்கைப் பார்' என்றார். இயமன், சித்திரகுத்தனை வரவழைத்து 'இந்த வாலிபனுக்கு வயசு எவ்வளவு. பார்த்துச் சொல்' என்றான். அவன்

கணக்கைப் பார்த்து 'இவனுக்குப் பன்னிரண்டு வயதென்பது நிச்சயமே. ஆனால் ஸ்ரீ ருத்திர மந்திர பலத்தினால் பதினாயிரம் வருஷம் இருப்பான் என்று பின்னாலே யெழுதி யிருக்கின்றது. இப்போதுதான் பார்த்தேன்' என்றான். இயமன் பயந்து 'சுவாமீ! புல்லறிவினாலே அடியேங்கள் செய்த குற்றத்தைப் பொறுத்துக் காப்பது பெரியோர் கடன்' என்று வீரபத்திரரைப் புகழ்ந்து வேண்டிக்கொள்ள, அவர் காலனைக் கட்டவிழ்த்து விட்டுப்போனார். இவ்வதிசயத்தைச் சொல்ல வேண்டியே நாம் இவ்விடம் வந்தோம்' என்று நாரத முனிவர் சொன்னார். அதுகேட்டு அரசன் உடலும் உள்ளமும் பூரிக்க, அளவற்ற ஆநந்த மடைந்தவனாய் முனிவர் முதலானவர்களை யனுப்பிவிட்டுத் தன் புத்திரனுடன் சுகமாக வாழ்ந்திருந்தான்.

மகத்துவமுள்ள இந்தச் சரித்திரத்தைச் சிந்திப்பவர்களும், படிப்பவர்களும், கேட்பவர்களும் முத்தியடைவார்கள்.

பன்னிரண்டாவது

சிவசரித்திர மகிமை.

வந்துகனை முத்திபெற்ற அத்தியாயம்.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய இம் மூன்று வருணத்தாரும் வேதத்துக் குரியவர்கள். ஆதலால் அவர்களுக்கு நற்கதி கிடைக்கும். வேதம் ஓதும் அதிகாரமில்லாத

சூத்திரரும், இழிகுலத்தாரும், கற்பிழந்த மாதரும், கடவுளைத் தொழாதவர்களும், கொடும் பாவங்களைச் செய்தவர்களும், ஆகிய இவர்கள் பரகதியடையவேண்டுமானால் சிவ சரித்திரத்தில் சிந்தை வைக்கவேண்டும். சிவசரித்திரத்தை நாள் முழுதும் இருந்து கேட்கப் பெறாவிடினும் அரை நாழிகையேனும் கருத்துடன் கேட்பவர்கள் எல்லாத் தீவினைகளையும் நீக்குவார்கள். சிவ சரித்திரத்தில் விருப்பமில்லாதவர்களும் அதைப் பொய்யென்று சொல்லுகிறவர்களும் மூன்றுகோடி நரகத்தில் அழுந்தியிருந்து பின்பு நாயாய்ப் பிறப்பார்கள். இழிகுலத்திற் பிறந்தவராயினும் சிவசரித்திரத்தைச் சொல்பவரெவரோ அவர் முதன்மையான தெய்வப் பிறப்பினராம். அவரை அப்படிக் கருதாது தங்களைப்போன்ற ஒரு மனிதர் என்று சொல்பவர்கள் வாயாற் புழுக்களைக் கக்கும்படியான வியாதியையடைவார்கள். சிவ சரித்திரஞ் சொல்லுகின்றவர்கள் ஆசனமில்லாமல் தரையிலிரார்கள். சபையில் யாரையும் அஞ்சலி செய்யமாட்டார்கள். தீயவர்களிருக்கு மிடத்திலும், அரசர்கள் கூடித் தீமையிற் களிக்கு மிடத்திலும், சூதாடுமிடத்திலும், மாதர்கள் கணவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கு மிடத்திலும், அங்கப் பழுதானவர்களிருக்கு மிடத்திலும், தமக்கு நாடு, நகரம் முதலிய பெரும்பயன் வருகிறதாக இருந்தாலும் சிவ சரித்திரத்தைச் சொல்லார்கள். தேவாலயம், சோலை, நதிதீரம், நல்லோர்சபை, யாகசாலை, முனிவர்களுடைய ஆசிரமம், முதலிய புண்ணியமும் பரிசுத்தமும் பொருந்திய இடங்களில் மாத்திரம் எல்லாந் தெரிந்த பெரியோர்கள் சிவசரித்திரத்தைச் சொல்வார்கள். சிவ சரித்திரத்தைத் தினந்தோறுங்

கேட்பவர்கள் ஸ்நானஞ்செய்து விபூதியணிந்து தங்கள் வருணாச்சிரமத்துக்குரிய நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, மனத்தை ஒருவழிப்படுத்தி, சிவ சரித்திரம் சொல்லும் ஆசாரியருக்கு உயர்ந்த ஆசனங்கொடுத்து, பொருளும் உதவி, தாங்கள் தாழ்ந்த ஆசனத்திலிருந்து பத்தியோடு கேட்டல்வேண்டும்.

இவ்வாறன்றிச் சிவசரித்திரம் சொல்லுமிடத்தில் பொருமையினாலே வேறொரு பொருளைச் சொல்லுகின்றவர்களும், வீண் தர்க்கஞ் செய்கின்றவர்களும், பன்றியாய்ப் பிறப்பார்கள். சிவசரித்திரங் கேட்பதைவிட்டு வேறொன்றைக் கேட்பவர்கள் எட்டி மரமாவார்கள். சிவசரித்திரம் முடிவதற்கு முன் மத்தியில் எழுந்து போய்விடுபவர்கள் தங்கள் செல்வத்தை ஆயுள்வரையிலு மநுபவியாமல் மத்தியில் இழந்து விடுவார்கள். மஞ்சத்தின் மேலேறியிருந்தும், தாம்பூலம் தரித்துக்கொண்டும் கேட்பவர்கள் கழுவிலேற்றப்பட்டு வருந்துவார்கள். சிவ சரித்திரம் கேட்கும்போது தூங்குகிறவர்கள் கோட்டானாவார்கள். படுத்தபடியே கேட்பவர்கள் மலைப்பாம்பாவார்கள். சிவ சரித்திரமாகிய தீபம் மனவிருளைப் போக்குவதினாலே அந்தச் சரித்திரத்தைச் சொல்லுகிறவரே மேலான ஆசாரியராம். சிவசரித்திரம் சொல்லப்படும் இடத்தைப் பரமேசுவரனுடைய சந்நிதியென்று கருதிப் பயபத்தியோடு மேற்சொன்ன குற்றங்கள் ஒன்று மில்லாமலிருந்து கேட்டல்வேண்டும். சிவ சரித்திரத்தின் தன்மை இதுவாகும். இனி முன்னடந்த ஒரு சரித்திரத்தைச் சொல்லுகிறோம்:—

பாண்டிநாட்டிலே வாட்கானம் என்னும் நகரத்திலேயுள்ள பிராம்மணர்கள் ஒருகாலத்திலே ஜெபதபாநுஷ்டானங்களை முற்றும் மறந்து துறந்துவிட்டு நீசத்தொழிலை யுடையவர்களானார்கள். அவர்களி லொருவனாகிய விதுரன் என்பவன் விலைமாதர் போகத்திற் சிக்கி அவர் கலவியின்பத்தில் மூழ்கியிருந்தான். அவன் மனைவியாகிய வஞ்சுளை யென்பவள் தன் கணவன் தன்னைக் கூடாததினாலே காமஞ் சகியாதவளாகிக் கற்புநிலைதவறி இழிகுலத்தானொருவனைச் சேர்ந்து, இன்பமநுபவித்துக்கொண் டிருந்தாள். இவளிப்படி நடப்பதை ஊரார்சிரித்து பேசிக்கொள்ள அதை விதுரன் கேள்விப்பட்டு இதனுண்மையை யறிவோமென்று அர்த்தராத்திரியில் மறைவெய்துகொண்டிருக்கும்போது தன் வீட்டிற்சென்று பார்க்கத் தன்மனைவியும் வேறொருவனும் புணர்ந்துகொண் டிருந்தார்கள். விதுரன் கோபங்கொண்டவனாய் அருகிற் "போகச் சோரநாயகன் ஓட்டம் பிடித்தான். விதுரன் தன் மனைவியின் அளகத்தைப் பிடித்துக்கொண்டு உதைக்க, அவள் அழுது 'கணவரே! நான் சொல்வதைக் கேட்டுப் பின்பு என்னைக் கொன்றுவிடும்' என்றாள். அவன் அடிப்பதைவிட்டு 'என்ன சொல்லுகிறாய்?' என்ன, வஞ்சுளை 'நீர் வேசைகள் மோகத்தால் என்னைக் கைசோரவிட்டீர். வெகுநாள்வரையில் நீர் திரும்பி யென்னிடம் வந்து சேருவீரென்று பொறுத்துக் கொண்டிருந்தும் வந்திலீர். இளமைப் பருவமாதலால் காமஞ் சகிக்க மாட்டாதவளா யிக்குற்றஞ் செய்தேன். இது மாதருக்கும் ஆடவர்களுக்கும் பொதுவாயிருக்கும் காரியந்தானே' என்று சொன்னாள். இதைக்கேட்டு விதுரன் தன்னிடத்தி

லுங் குற்றமிருக்கிற தென்றறிந்து 'மாதே! நீ அழவேண்டாம். காமத்தை நீக்க யாராலாகும்? இப்போ துனக்கோருபாயஞ் சொல்லுகிறேன். அதென்னவென்றால், உன்னிடத்தில் எந்த வருணத்தார் வந்தாலும் நீ அவர்களை யெல்லாம் புணர்ந்து காமவிடாயைத் தீர்த்துக்கொண்டு அவர்கள் கொடுக்கும் பொருளை யென்னிடத்திற் கொடு. நானதை விலைமாதருக்குக் கொடுத்து அவர்களைப் புணர்ந்து என் காமத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறேன்' என்றான். அவளதற்குச் சம்மதித்துப் பகிரங்கமாய் வந்தவர்களை யெல்லாம் புணர்ந்து அவர்கள் கொடுத்த பொருளைக் கணவனுக்குக் கொடுத்து வந்தாள். அவனதை வேசைகளுக்குக் கொடுத்து அவர்களைப் புணர்ந்து வந்தான்.

இப்படிச் சிலநாள் கழிந்தபின்பு விதுரன் மூப்புப் பருவமடைந்திறந்தான். வஞ்சுளையும் கிழத்தன்மை யெய்தி வெகு துன்பமான ஸ்திதியி லிருந்தாள். அப்போது சிவராத்திரி வந்தது. பத்திமான்க ளெல்லோரும் கோகர்ணத்துக்குப் போனார்கள். வஞ்சுளையும் அவர்களுடன் சென்று அந்தத் திவ்ய க்ஷேத்திரத்திலுள்ள கோடிதீர்த்தத்தில் மூழ்கி மஹாபலநாதருடைய திருவடிகளைத் தொழுது ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்யும்பொழுது, அங்கொரு பக்கத்தில் ஒரு தேசிகர் புத்தகம் வைத்துக்கொண்டு சிவதருமங்களை வாசித்துப் பொருள் சொல்லக் கேட்டுப் பயந்து, நடுங்கி, அவரிடத்திற் போய்ப்பணிந்து 'ஐயா! நீர் வாசித்ததில் பாவிகள் படும் பாடெல்லாம் சொல்லிவந்தீர். அதில் காம மிகுதியினால், கொண்ட புருஷனைவிட்டுச் சோரம்போன மாதரை இயமன்

வெருகொடுமையான தண்டனை செய்வானென்று சொன்னீர். நான் இளமைப் பருவத்தில் கற்புநிலை கெட்டிருந்தேன். ஆதலால் நீர் சொல்லியவைகளை யெல்லாங்கேட்டு நடுநடுங்கி வருந்துகிறேன். நான் கொடும்பாவி. என்போல் பாவஞ் செய்தவர்கள் இவ்வுலகத்தில் ஒருவருமிரார். எனக்கு மூப்பும் பருவம் வந்துவிட்டது. சாவும் சமீபித்திருக்கிறது. என் பாவத்துக்காக என்னைப் புழுக்கள் நிறைந்த நரகத்தில் தள்ளுவார்களே என்று மனங்கலங்கி எந்நேரமும் ஏங்குகிறேன். இயமன் என்னைத் தண்டிக்கும்போது 'பயப்படாதே' யென்று எனக்குச் சொல்லுகிறவர்கள் யாவர்? நிராதரவாயிருக்கும் அடியேனைத் தேவரீரே காப்பாற்றும்' என்று அவருடைய பாதத்தில் விழுந்து வணங்கினாள்.

தேசிகர் அவள் கையைப் பிடித்தெடுத்து 'மகளே! நீ பயப்படாதே. பாவஞ் செய்த உனக்கு இப்போது பயம் உண்டாயிருப்பதினாலே உன்பாவமெல்லாம் உன்னைவிட்டுப் போம். உனக்கு மூப்புவந்துவிட்டபடியால் தவஞ்செய்யக் காலமில்லை. தானங்கொடுக்கவோ திரவியமில்லை. மகத்துவமுள்ள சிவ சரித்திரத்தைக் கேட்டுவந்தால் உன்பாவம் ஒழிந்துபோம். பாவமாகிய இருளைத் தொலைக்கச் சிவ சரித்திரம் சூரியனாம். அசுவமேதயாகம் கோடி செய்தபோதிலும் சிவ சரித்திரத்தைப்போல் பலன் கொடுக்க மாட்டாது. சிவ சரித்திரத்தில் சிறிது கேட்டவர்களும் சிவஸ்வரூபம் பெறுவார்களென்று கற்றோர் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட மகத்துவமுள்ள சிவ சரித்திரத்தைக் கேட்டு உன் காலத்தைக் கழிப்பாயாக. முன் காலத்தில் காமனன் என்றொருவனிருந்தான். அவன் பெரும்

பாதகனாயிருந்தும் அந்திய காலத்தில் பரமேஸ்வரனுடைய திருநாமங்களைச் சொல்லி மோக்ஷமடைந்தான். உனக்கும் மரணகாலம் சமீபித்திருக்கிறபடியால் நீ சிவநாமங்களை உச்சரித்துச் சிவ சரித்திரத்தைக் கேட்பாயாகில் உன் பாவங்கள் நீங்கிவிடும். நீயுஞ் சிவபதஞ் சேருவாய். சிவ சரித்திரத்தில் சிரத்தையும் அன்புமுள்ளவர்களும், சிவநாமங்களை உச்சரித்தால் மோக்ஷம் கிடைக்குமென்று நம்பி அவைகளைச் சொல்லுகின்றவர்களும், சிவபதத்தில் வாழ்வார்கள். இது சத்தியம்' என்று சொன்னார்.

வஞ்சுளை இவைகளை யெல்லாம் கேட்டுத் தேசிகரைப் பார்த்து 'சுவாமீ! நானும் அப்படியே செய்து சிவபதத்தில் சேரத் தேவரீர் எனக்கு இப்போதே தீக்ஷைசெய்து சிவ சரித்திரத்தை நாடோறும் சொல்லியருளும்' என்று பிரார்த்திக்க, அவர் விபூதியையெடுத்து அவள்சரீரத்திற்பூசிப் பஞ்சாக்ஷர மந்திரத்தை அவளுக்கு உபதேசித்து அன்றுமுதல் சிவசரித்திரமும் சொல்லிவந்தார். அதனால் வஞ்சுளை சைவநெறி பொருந்திப் பத்தியுள்ளவளாய் மூன்றுகாலத்திலும் ஸ்நானஞ் செய்து மரவுரியே வஸ்திரமாகவுடுத்து, விபூதிருத்திராக்ஷந் தரித்துப், பரமசிவனைத் தியானித்து, ஸ்தோத்திரஞ் செய்து வந்தான்.

ஸ்தோத்திரம்.

'கையார் மழுவெம் படையாய் சரணம்
கருணைக் கடலே சரணம் சரணம்
பையா டரவத் தணியாய் சரணம்
படர்செஞ் சடையாய் சரணம் சரணம்

மையார் கலிவெங் திறனொந் திடவான்
மழைமஞ் செனவே வருநஞ் சயிலும்
ஐயா சரணம் சரணம் எனையாள்
அமலா விமலா சரணம் சரணம்.' (௧)

'தோத்தா ரிசழித் தொடையாய் சரணம்
சுருதிப் பொருளே சரணம் சரணம்
சத்தா கியசிற் குணனே சரணம்
சமனுக் கொருவெஞ் சமனே சரணம்
முத்தா ரிளவெண் ணகைஅம் பிகைதன்
முறுகுந் தவசிந் தனைகண் டருளும்
அத்தா சரணம் சரணம் எனையாள்
அமலா விமலா சரணம் சரணம்.' (௨)

'கமலா லயனுக் கருள்வோய் சரணம்
கயிலைக் கிரியாய் சரணம் சரணம்
நிமலா கமதற் பரனே சரணம்
நெடுமா லறியாய் சரணம் சரணம்
சமரா டினர்முப் புரமுங் கடிதிற்
றழல்மண் டிடவெண் ணகைவெங் கனல்கொண்
டமரா டியவா சரணம் எனையாள்
அமலா விமலா சரணம் சரணம்.' (௩)

'திருக்கரத்தில் மழுவாயுதந் தரித்தவரே சரணம். கிருபா சமுத்திரமே சரணம். சர்ப்பாபரணரே சரணம். சடாமகுடரே சரணம். கருங்கடல்வெந்து வற்றவும், தேவர்கள் வருந்தவும்,

மேகம்போல்வந்த ஆலகாலவிஷத்தை அமுதுகொண்ட ஐயனே சரணம். கொன்றைமாலை யணிந்தவரே சரணம். வேதப் பொருளே சரணம். சத்தாயிருக்கும் நிர்குண மூர்த்தியே சரணம். காலகாலரே சரணம். உமாதேவியாருடைய தவ வுறுதியைக்கண்டு உளமகிழ்ந்தருள்செய்த அத்தனே சரணம். பிரமதேவருக்குச் சிருஷ்டித்தொழிலை யருளிய பெருமானே சரணம். கயிலாசவாசரே சரணம். நிர்மலமான ஆகமங்களை அருளிச்செய்த நித்தியரே சரணம். விஷ்ணுவினாலும் அறியப் படாத கடவுளே சரணம். தேவர்களுடன் போர்செய்துகொண் டிருந்த திரிபுராதிகளையும் அவர்களுடைய கோட்டைகளையும் புன் சிரிப்பினால் எரித்த புண்ணியரே சரணம். அடியேனை ஆட்கொண்டருளிய அமலமூர்த்தியே சரணம்'—என்று இவ் வாறுதோத்திரஞ்செய்து சைவாசாரத்தை அநுசரித்து சிலகா லமிருந்து இறந்துபோனாள். உடனே பரமசிவனுடைய கட் டளையினால் சிவகணங்கள் வந்து அவளைப்பொன்விமானத்தி லேற்றிச், 'சிவலோகத்தில், பிரமா, விஷ்ணு முதலான தேவர் கள் சூழப், பரமசிவன் வீற்றிருந்தருளும்' சபையிற் கொண்டு போய் விட்டார்கள். வஞ்சுளையானவள் பரமசிவனையும் பார் வதிதேவியாரையும் நோக்கி, அவர்களுடைய திருவடித்தாமரை களில் பலமுறைபணிந்து, பேரானந்தப் பெருங்கடலில் மூழ் கினவளாய் 'நம்மை யிங்குக் கொண்டுவந்துவிட்டது எந்தத் தவப்பயனோ' என்று ஆச்சரியங்கொண்டிருந்தாள். பரமசிவன் அவள்மேல் கிருபாநோக்கஞ் செய்து 'நீ உமாதேவிக்குப் பணி விடைசெய்து கொண்டிரு' என்று அன்பாகக் கட்டளையிட் டருள, அங்ஙனமே செய்துவந்தாள்.

இப்படியிருக்கும்போ தொருநாள் வஞ்சுளை உமாதேவியாரைப்பார்த்து 'பரிபூரணியே ! தாயே ! அருந்தவஞ்செய்தவர்களும் பெறற்கரிய பெரியபதவியை நாயினுங்கடையேனாகிய எனக்கு அருளிச்செய்தாய். என்கணவன் இப்போதெவ்விடத்தில் எப்படியிருக்கிறானென்று சொல்லியருளவேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உமாதேவியார் புன்னகைசெய்து 'மாதே ! உன்கணவன் பாவங்களையே செய்துகொண்டிருந்து இறந்துபோய் நரகங்களிற்கிடந்து இப்போது விந்தியாடவியென்னும் வனத்தில் பேயாய்த் திரிகின்றான்' என்றருளிச்செய்தார். அதைக்கேட்ட வஞ்சுளை மிகவுந் துக்கித்து 'அம்மணீ ! நான் இவ்வளவுமேலான பதவியிலிருக்க என்கணவன் வனத்திற் பேயாயலைவது தகுதியோ' என்றுமுறையிட, பார்வதிதேவியார் மனமிரங்கி 'வஞ்சுளையே ! உன்கணவனை நாம் இரக்ஷிக்கிறோம். நீ பயப்படாதே' என்று சொல்லி, வீணை வாசிப்பதில் வல்லமையான தும்புரு முனிவரை யழைத்து 'நீ யிவளுடன் விந்தாடவியிற்சென்று பரமசிவனுடைய புகழை யிசையிற்பாடி இவள் கணவனுடைய பாவரூபத்தை நீக்கி அவனை நம்முடைய உலகத்துக்குக் கொண்டுவா' என்று கட்டளையிட்டருளினார்.

முனிவர் அப்பணியைச் சிரமேற்கொண்டு வஞ்சுளையுடன் இரத்தினவிமானத்திலேறிச் சென்று விந்தாடவியைச் சேர்ந்தார். அவ்வனத்தினிடத்தே பாபத்தினால் கோரரூபமும், பிறை போன்ற தந்தங்களும், தீயைப்போல் சிவந்தகண்களுமுள்ள பேய்வடிவாகித் தனக்குத்தானே கோபங்கொண்டு சீறியழுகிறதும், ஆவென்று வாயைத்திறக்கிறதும், நகைக்கிறதும், மலையைத்தாண்டி விழுகிறதும், மூங்கில்களைக் கரும்புபோல்

கடிக்கிறதும், சரீரத்தி லடித்துக்கொள்ளுகிறதுமா யிருப்பவனைப்பார்த்து அந்த முனிவர் 'ஐயோ, வஞ்சுளையே ! இவன் பாவத்தினால் வந்த தீவினையைப்பார்' என்று சொல்லிப் பாசத்தைவீசி அவனைப்பின்னாக இழுத்துக்கட்டி அவனுடைய கோரரூபத்தை நீக்கும்பொருட்டு, யாழைத் தமதுகையில் எடுத்துக்கொண்டு பரமேஸ்வரருடைய புகழை, மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் கேட்டு மகிழும்படி, தாளக்கிரமத்துடன் பாடுகிறார்:—

'நஞ்ச மிருக்கு மணிமிடற்றோய்
　　நெடுமால் சாத்து மலையமர்க்
கஞ்ச மிருக்கும் பதயுகத்தோய்
　　அடிய ரிதயக் கமலமதைத்
தஞ்ச மிருக்கு மொருபுறத்தோய்
　　அமுத மதியி னலர்பிறைப்
புஞ்ச மிருக்குந் திருச்சடையோய்
　　கயிலை வாழும் புகழோனே.' (க)

'ஏரி யிருக்குந் துவசத்தோய்
　　முனிவர் தம்பாற் கருணைவருண்
மாரி யிருக்கும் விழிக்கடையோய்
　　மதுவார் கொழுந்து மலரிதழி
வேரி யிருக்குஞ் சடைமுடியோய்
　　வெகுண்ட மறலி யுரங்குதித்த
சோரி யிருக்குங் குரைகழலோய்
　　கயிலை வாழுந் தொல்லோனே.' (உ)

'வேத மிருக்குங் கபாலத்தோய்
விழையு மிடையாய் மகளிர்நவ
நீத மிருக்குஞ் சாயகத்தோய்
இமவான் பயந்த நேரிழைதன்
பாத மிருக்கும் புரிசடையோய்
பதங்கூர் சுருதி வியாகரண
நாத மிருக்கும் பரிபுரத்தோய்
கயிலை வாழு நம்பானே.' (௫)

'நீலகண்டரே! விஷ்ணுவானவர் தமதுகண்ணைப்பறித்துச் சாத்தி அருச்சித்தபாதமுடையவரே! அடியார்களுடைய இருதயத்தில் வீற்றிருக்கும் பார்வதி தேவியாரை வாமபாகத்தில் வைத்தருளியவரே! அமிர்தகிரணங்கள் நிறைந்த சந்திரனை ஜடாமகுடத்தில் தரித்தவரே! கயிலாசகிரியில் வீற்றிருந்தருளும் பெருமையாளரே! இடபக்கொடியையுடையவரே! அடியார்க்கருள்செய்யும் பொருட்டுக் கருணை நிறைந்துள்ள கடைக்கண்ணுளரே! வாசனைபொருந்திய கொன்றைமாலைதரித்த திருமுடியை யுடையவரே! நமனை உதைத்தபோது அவன் மார்பி லிருந்துண்டாகிய உதிரந்தங்கிய திருவடியையுடையவரே! கயிலாசகிரியில் வீற்றிருந்தருளும் புராதனரே! வேதங் கள்பிணைக்கும் கபாலத்தை யுடையவரே! வெண்ணெயுண்ட விஷ்ணுவைத் திரிபுரதகனஞ் செய்தகாலத்தில் அம்பாகக் கொண்டவரே! ஹிமாசலராஜன் புத்திரியாகிய பார்வதிதேவியாருடைய திருவடிதங்கிய திருமுடியாளரே! வேத வியாகரணநாதம் நிறைந்துள்ள சிலம்பணிந்தவரே! கயிலாசநாதரே!

என்று இப்படித்துதிசெய்த அளவில், அவன் மனம்நெகிழ்ந்து, தேற்றாங்கொட்டையை யுரைத்தமாத்திரத்தில் கலங்கல்நீர் தெளிவதுபோல் உள்ளந்தெளிந்து, தான்முன்செய்த பாவங்களையெல்லாம் நினைந்துபயந்து, யாழ்வாசிக்கும் தும்புருமுனிவரைப்பார்த்து, ஐயா! உம்மைத் தரிசித்ததனாலும் பரமசிவனுடைய புகழைக்கேட்டதனாலும் நான் என்பாவமாகிய பெருங்கடலைக் கடந்தேன். எம்பெருமானாகிய பரமசிவனையும் எம்பிராட்டியாகிய பார்வதி தேவியாரையும் நான்இதோ துதி செய்கின்றேன்:—

ஸ்துதி.

'செக்கச் சிவந்த செழும்பாகே
தேனே பாலே தெள்ளமுதே
முக்கட் கரும்பே முந்துமுகக்
கனியே வேத முழுமுதலே
மிக்கத் தருமம் பகர்காதை
கேட்ட எனது விளங்கிழைக்காத்
துக்கந் துழல்வேன் றனைப்புரவா
திருந்தா லுனக்குத் தகுமன்றோ?' (௧)

'பச்சை வல்லி படர்ந்தேறும்
பவளக் குன்றே பழமறையின்
உச்சி மிசையே ரொட்டியென்றும்
உலவாச் சாகை யொருதருவே
விச்சை மறையோன் நின்கதையை
விளம்பக் கேட்ட மெல்லியற்காக்

கொச்சை யல்கை யானேனோ
ஆளா தொழிந்தாற் குறையுண்டோ?' (உ).

'அன்ன மேன மாயயுறு
மாறு முடியு மடியிணையும்
முன்னி யறிதற் கரிதாய
பொருளே மூவா முழுமுதலே
பன்னு மறையோன் றின்சரிதம்
பகரக் கேட்ட பார்ப்பனிக்கா
மன்னும் அலகை யானேனோ
ஆளா தொழிந்தால் வசையுண்டோ?' (ங)

மிகச் சிவந்திருக்கும் செழுமையான பாகே! தேனே! பாலே! தெளிவுள்ள அமிர்தமே! முக்கனிகளுள்ள கரும்பே! ஐந்து திருமுகங்களையுடைய கனியே! வேதத்தின் முழுமுதலே! சிவகர்மங்களைச் சொல்லும் சரித்திரங்களைக் கேட்ட என்மனைவியின் பொருட்டு துக்கத்திலுழக்கின்ற அடியேனைக் காத்து ரக்ஷித்தீர்! இங்ஙனம் என்னைக்காவா திருந்தால் உமக்குக் குற்றமுண்டோ? பச்சைக்கொடிபோன்ற பார்வதிதேவியார் கலந்திருக்கும் பவளமலைபோன்றவரே! பழமையான வேதங்களின் உச்சியில் வேர்விட்டு எக்காலமுங்கெடாத சாகைகளையுடைய ஒப்பற்றவிருக்ஷம் போன்றவரே! ஞானவானாகிய பிராமணன் சொல்லிய உம்முடைய சரித்திரங்களைக்கேட்ட என் மனைவியின்பொருட்டு பேயாயுழன்றுகொண்டிருந்த எனக்குப் பெருங்கருணைசெய்தீர்! இங்ஙனஞ்செய்யாதிருந்தால் உமக்குக் குற்றமுண்டோ? பிரமா அன்னப்பக்ஷியாகித் திருமுடியைத் தேடியும், விஷ்ணு வராகமாகித் திருவடியைத்தேடியும், காணுதற்கரிதாயிருந்த பெரும்பொருளே! ஆதியந்தமில்லாதவரே! பரிபூரணரே! வேதங்களோதியுணர்ந்த அந்தணன் சொல்லிய உம்முடைய திவ்விய சரித்திரங்களைக்கேட்ட என்மனைவியின் பொருட்டு அலகையா யலைந்துகொண்டிருந்த அடியேனையும் ஆட்கொண்டீர். இங்ஙனம் ஆட்கொள்ளாவிடில் உமக்குக் குற்றமுண்டோ'? என்று இவ்வாறு துதிசெய்துமகிழ்ந்து, ஆச்சரியங்கொண்டு, உரோமங்கள் சிலிர்ப்ப நின்று, கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகப் பரவசனாகிக், கற்றூவின் மனம்போலக்கசிந்துருகிக்களித்து, ஆடிப்பாடி 'என்னையன் எனக்கு நித்தியவாழ்வை யளித்தான்' என்று பொங்கினான். இப்படி ஏழுநாள்வரையில் பரமேசுவருடைய திருவடிகளைப் புகழ்ந்து துதிசெய்து பேயுருவம்நீங்கித் தேவரூபம்பெற்று சித்தியடைந்து, விமானத்திலேறித் தன் மனைவி யடைந்திருக்கப் பெற்ற சிவபதவியைச் சேர்ந்து, அவளுந் தானுமாகப், பரமசிவனும் பார்வதிதேவியாரும் சந்தோஷிக்கவும், சிவகணங்களேவல் செய்யவும், செம்பொன் விமானத்தில் வீற்றிருந்து, சிவபோகத்தை அநுபவித்துக்கொண்டிருந்தான்.

ஆகலால் அழிவில்லாத பெரும்பதவியை விரும்பினவர்கள் சிவசரித்திரத்தையே கேட்கக் கடவர்கள். இவ்வுலகத்தில் இதுவேமேலான தவமாகும்" என்று சூதமுனிவர் சொல்லியருளினார். அதைக்கேட்ட நைமிசாரணிய முனிவர்கள், அன்பினால் மனமுருகி, ஹரஹரவென்று சொல்லிக்கைகளைச் சிரசின்மேல் குவித்துத் தொழுதார்கள்.

77

தேவர்பெருமானாகிய பரமசிவனுடைய பஞ்சாக்ஷரமகிமை முதலாகச் சிவபுராணமகிமை ஈறாகவுள்ள சிவசரித்திரங்களைக் கேட்பவர்கள் எவர்களே யானாலும் பேரின்ப வாழ்வை அடைவார்கள்.

வாழ்த்து.

"ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவர் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக காதலாற்
சால ஈசனடியார் தழைகவே."

திருச்சிற்றம்பலம்.

பிரமோத்தரகாண்டவசனம்
முற்றிற்று.